கடவுள் துணை.

# பால வைத்தியம்.

இஃது

மானிப்பாய்

G. W. சுப்பிரமணியபிள்ளையால்

இயற்றப்பட்டு,

அச்சுவேலி

ஞானப்பிரகாச யந்திரசாலை [illegible]

மூன்றாம்முறையாய்

பிரசுரிக்கப்பட்டது.

1931

# மருந்து நிறுக்கை

| | | | |
|---|---|---|---|
| 60 கிறேன் | ... | ... | 1 திறாம் |
| 8 திறாம் | ... | ... | 1 அவுன்சு |
| 1 ரூபாய் | ... | ... | 180 கிறேன் |
| 1 நெல் முன்பின் | | ... | 1 கிறேன் |

| | | | |
|---|---|---|---|
| 18 கழஞ்சு | ... | ... | 1 பலம் |
| 6 பலம் | ... | ... | 1 இறாத்தல் |
| 1 சதநிறை முன்பின் | | ... | 1 கழஞ்சு |

முப்பத்திரண்டு குன்றிமணி அல்லது முக்காற்சதநிறை அல்லது முப்பத்தாறு கிறேன் ஒருவராகன்.

## நீரளவை.

| | | | |
|---|---|---|---|
| 60 துளி | ... | ... | 1 திறாம் |
| 8 திறாம் | ... | ... | 1 அவுன்சு |
| 20 அவுன்சு | ... | ... | அரைக் கொத்து அல்லது ஒருபைன்று |

1 தேய்க்கரண்டி கொண்டளவு 1 திறாம்

4 தேய்க்கரண்டி கொண்டளவு அல்லது ஒரு மேசைக் கரண்டி கொண்டளவு 1 அவுன்சு

1 வைன்கிளாசுகொண்டது 2 அவுன்சு

| அட்டவணை | பக்கம் |
|---|---|
| அக்கரகுடிநீர் | 52 |
| அக்கரம் | 16 |
| அக்கி | 24 |
| அக்கிருநெய் | 54 |
| அபினுக்கும் அதிலுண்டான மருந்துகளுக்கும் | 38 |
| அப்பியாசம் | 4 |
| அம்மை | 26 |
| அமோனதயிலம் | 49 |
| அயக்கலவை | 43 |
| அயமும் கழும்புத்தூளும் | 49 |
| அவலுக்கு | 40 |
| அவியற்சுரகுடிநீர் | 53 |
| ஆட்டிறைச்சிக்கு | 40 |
| ஆட்டுப்பாலெண்ணெய் | 55 |
| இரசஞ்சேர்ந்த மருந்துகளுக்கு | 38 |
| இரசருவாப்புத்தூள் | 46 |
| இராஅச்சம் | 6 |
| இருமலுக்குச்சூரணம் | 56 |
| இருமல் | 8 |
| இருமற்கலவை | 41 |
| ஈயம் (வங்கசினி) | 38 |
| ஈர்ப்பு (ஏற்பு) | 11 |
| உடுப்பு | 4 |
| உப்புக்கலவை | 46 |
| ஊமத்தைக்கு | 40 |
| எருக்கலம்பாலுக்கும் எருக்கிலைக்கும் | 40 |
| எலியிறைச்சிக்கு | 40 |
| எலும்புமுறிவு | 36 |
| கஞ்சாவுக்கு | 40 |
| கட்டு | 31 |
| கணை | 28 |
| கணைக்குநெய் | 54 |
| கண்ணோய் | 29 |
| கஸ்தூரிமாத்திரை | 51 |
| கரப்பன்வகை | 23 |
| கழிச்சல் | 14 |
| கழிச்சற்றூள் | 48 |
| கள்ளிப்பாலுக்கு | 40 |
| காஞ்சூரைக்கு | 40 |



PHARMACY
456, HOSPITAL ROAD
JAFFNA
DIAL 7386

Dr. T. K. SIVAGNANAM
L. A. M. P. (Cey)
Kondavil West
KONDAVIL

Lion S. Sriganeshan

## அட்டவணை


| | பக்கம் |
|---|---|
| காடிக்காரத்துக்கு | 38 |
| காதிலிருந்து சீழ்வடிதல் | 32 |
| காதுக்குத்து | 31 |
| காமாலை | 28 |
| காயம் | 35 |
| காய்ச்சற்கட்டி | 29 |
| காய்ச்சற்றூள் | 47 |
| கிரந்தியெண்ணெய் | 56 |
| கிரந்திச்சுரகுடிநீர் | 51 |
| கிரீம்தாத்தார்கலவை | 45 |
| கிருமித்தூள் (சந்துனின்தூள்) | 47 |
| குக்கல் | 9 |
| குக்கற்கலவை | 42 |
| குடற்கிருமி | 18 |
| குவினயின்கலவை | 43 |
| குவினயின், ரூவாப, சோடாத்தூள் | 46 |
| குளிப்பு | 4 |
| குன்றிமணிக்கு | 40 |
| கூகைக்கட்டு | 25 |
| கைத்தாய் | 3 |
| கொப்புளிப்பானுக்கும் அம்மைக்குமுரிய வித்தியாசங்கள் | 27 |
| கொப்புளிப்பான் | 26 |
| கொப்பூழில் புண் | 5 |
| கொவ்வங்காய்க் கோரோசனைக்குளிகை | 50 |
| கொள்ளிக்கரப்பன் | 24 |
| கோரோசனைக்குளிகை | 49 |
| கோழியிறைச்சிக்கு | 40 |
| சத்தித்தல் | 12 |
| சமியாக்குணம் | 13 |
| சலம்அடிக்கடிபோதல் | 13 |
| சலம்தடைபடுதல் | 12 |
| சவுந்தரியார்கிருதம் | 54 |
| சிரங்கு | 24 |
| சிவதைக்கு | 40 |
| சிறுகுழந்தைகளைப் பராபரிக்கும்விதம் | 2 |
| சின்னமுத்து | 26 |
| சீழ்க்கண்ணோய் | 30 |
| சுண்ணும்பு | 39 |
| சுண்ணும்புக்கு | 40 |

| அட்டவணை | பக்கம் |
|---|---|
| சுண்ணாம்புத்தண்ணீர் | 40 |
| சுரகுடிநீர் | 52 |
| செங்கண்மாரி | 11 |
| செங்கண்மாரிக்கு எண்ணெய் | 55 |
| செங்கொட்டைக்கு | 40 |
| செருக்கல்வரகுக்கு | 40 |
| சோகித்தல் | 18 |
| சோர்வாதம் | 23 |
| தக்காளிக் கோரோசனைக்குளிகை | 50 |
| தடிமன் | 7 |
| தலையிடி | 19 |
| தனிச்சுரம் | 20 |
| தாகக்கலவை | 44 |
| திக்குமுக்கடைத்தல் | 36 |
| தில்லைப்பாலுக்கு | 40 |
| தீச்சுட்டபுண் | 34 |
| தீவனகலவை | 44 |
| துரிசுசெளிப்பு | 39 |
| தேற்றங்கொட்டைக்குளிகை | 51 |
| தொண்டைப்புண் | 10 |
| தொய்வு | 9 |
| நசிவு சுழுக்கு | 35 |
| நச்சுமீன் | 37 |
| நஞ்சுக்குமாற்றுகள் | 37 |
| நாசியால் நாற்றமான நீர்வடிதல் | 7 |
| நாசியிலிருந்து இரத்தம்பாய்தல் | 7 |
| நித்திரை | 3 |
| நீரில்அமிழ்ந்தல் | 36 |
| நெய்தேனுக்கு | 40 |
| நேர்வாளத்துக்கு | 39 |
| படர்தேமல் | 25 |
| பலவகையான கிரந்திக்கு | 56 |
| பலாப்பழத்துக்கு | 40 |
| பல்முளைத்தல் | 5 |
| பழக்கங்கள் | 5 |
| பற்கொதி | 32 |
| பன்றியிறைச்சிக்கு | 40 |
| பாலர்தேகபரிபாலனத்தின் பொதுவிதி | 1 |
| பாம்புகடி | 33 |

| அட்டவணை | பக்கம் |
|---|---|
| பாஷாணத்துக்கு | 39 |
| பிள்ளைகள் நாக்கிரந்திக்கு | 56 |
| புகையிலைக்கு | 40 |
| புண் | 31 |
| பூச்சிகள்குத்தல் | 32 |
| பேதிவியாதி | 16 |
| பேன் | 32 |
| போசனம் | 4 |
| மருதோன்றிக்கு | 40 |
| மருந்துவகுப்பு | 40 |
| மலக்கட்டு | 13 |
| மாந்தகுடிநீர் | 53 |
| மாந்தக்குளிகை | 50 |
| மாந்தம் | 13 |
| மாம்பழத்துக்கு | 40 |
| மாவியாவுக்கு | 38 |
| முயலிறைச்சிக்கு | 40 |
| முறைக்காய்ச்சல் | 20 |
| மூளைக்குலுக்கம் | 35 |
| ரூவாப்புக்கலவை | 41 |
| வயிற்றுக்குத்து | 14 |
| வயிற்றுளைவு | 15 |
| வயிற்றுளைவுக்குத்தூள் | 48 |
| வலி | 17 |
| வாதசுரம் | 22 |
| வாதம் | 22 |
| வாயுக்கலவை | 42 |
| வாயுப்பொருமல் | 14 |
| விக்கல் | 18 |
| விசர்நாய்க்கடி | 34 |
| விடாச்சுரம் | 21 |
| வீக்கம் | 28 |
| வெயர்க்குங்கலவை | 45 |
| வெள்ளைபடுதல் | 29 |
| வெற்றிலையைஅரைத்துநல்லெண்ணெயிற்கலந்துகுடித்தால் | 40 |

# முகவுரை.

—o—

"பாலனே விருத்தன்றந்தை" என்னும் அங்கிலோ பாஷிக முதுவாக்கு அப்பாஷையார்க்கன்றி வேறெப்பாஷையார்க்கும் ஒப்பான தாற்பரியமுடைத்து. ஓர்காலத்தில் மழலைமொழிபொழிந்து தத்தம் தந்தை தாயரை அகமகிழ்விக்கும் சிறுவரும் சிறுமிகளும் வேறோர்காலத்திற்றாமே தந்தை தாயராதல் உலகினியற்கையாதலின், பாலரைப் பக்குவமாய்ப் பராமரித்துப் பரிகரித்தல் மிக்க விசேஷமுடைத்தென்று யாவரும் ஒத்துக்கொள்ளுவர். மேலும் வளர்ந்தாரினும் பாலரையே ரோகங்கள் அதிகமாய்ப் பீடித்தலால் அவர்கட்குள் அளவிறந்து சம்பவிக்கும் தேகவியோக சங்கதிகள் யாவும், மற்றெவ்வித வைத்தியத்திலும் பாலவைத்தியமே மிக்க ஆவசியகமென்றதை "உள்ளங்கையி னெல்லியங்கனிபோற்" றெளிவாய் ரூபிக்கின்றன. ஆயினும் சமஸ்கிருதபாஷையிலே சாகர், மாதவர், சுசுருதர் முதலிய வைத்திய சிகாமணிகள் இயற்றிய வைத்திய நூல்கட்கிணையாக அகத்தியர், தேரையர், செகராசசேகரன் ஆதிய மகான்களாற் றிராவிடபாஷையிற் செய்யப்பட்டுள்ள சிறந்த வைத்திய நூல்களெல்லாம் செய்யுணடையின. அவற்றின் யதார்த்தமாகிய ரத்தினக்குவைகளைக் கண்டடைதல் அருமையிலருமை யாதலானும், இங்கிலீஷ் சிங்கள முதலிய பாஷா வைத்திய சாஸ்திரங்களை யாராய்ந்தறியமாட்டாதார் மிகப் பலராதலானும், வாக்கிய ரூபமாயுள்ள நூல்களை வாஞ்சையோடுவாசிக்கும் பழக்கவழக்கமே தற்காலத்தி லெங்குந் துலங்கிவருதலானும் "பாலவைத்தியம்' என்னும் ஓர் சிறுபிரபந்தத்தைச் செந்தமிழ்ப் பாஷையிற் கற்றோரன்றி மற்றோரும் உணரும்படியாகச் செய்தல் வேண்டுமென்று நெடுங்காலமாய் அபிப்பிராயங் கொண்டிருந்த யாம் "இத்தகைய நூலொன்றை இயற்றுவீரேல் மிக்க லோகோபகாரமாம்" என்று பரிந்து வேண்டிக்கொண்ட நேசர் பலர் விண்ணப்பத்திற்கிசைந்து அவ்வாறொன்றியற்றி 1889-ம் ௵ பகிரங்கப்படுத்தினோம். அப்பிரதிகள் செலவாய்விட்டதினால் இப்போது இரண்டாம்முறையும் அச்சிடுவிக்க நேரிட்டது. இந்நூலிலே பாலபரிபாலன கிரமங்களையும், அவர்கட்குண்டாகும் வியாதிகளையும் அவ்வவ் வியாதிகளின் குணங்கள் காரணங்களோடு அவற்றிற்குரிய ஔடதங்களையும், ஒவ்வொரு சமுசாரத்தவருந் தாமே விளங்கிப் பரிகரிக்குமாறு அவ்வவ்

வயதுக்கேற்ற மருந்தைப் பிரமாணங்களோடு, கூடியபடி "சுருங்கச்சொல்லி விளங்கவைத்து" அங்கிள வைத்தியம் திராவிட வைத்தியம் சிங்கள வைத்தியம் என்னும் முத்திற வைத்தியங்களினுமுள்ள உட்டுறைகளிற் சிரேட்டமானவற்றைத் திரட்டியிருக்கின்றோம். ரோகாதிகளை இலகுவாய்ப் பார்த்தறிதற்பொருட்டு ஓரட்டவணையுஞ் செய்திருக்கின்றோம்.

இஃது நாமத்தாற் "பாலவைத்தியம்" ஆயினும் இதிற் சொல்லிய ரோகங்கள் ஸ்திரி புருடர்களுக் குண்டுபடும்போது அவர்கட்கும் அவ்வவ் மருந்துகளையே பிரமாணத்தை அதிகரித்துக் கொடுக்கலாம், என்பதே ஆக்கியோனின் முகவுரை.

இந்நூலாசிரியரும் நமது சகோதரமுறையினருமான டக்டர் சுப்பிரமணியபிள்ளை காலஞ்சென்றமையால் அவர்க்குத் தமிழ் வைத்தியத்தில் உதவிசெய்து பிரசரித்த இவ்வியந்திரசாலை ஆதீனரான நம்மால் மூன்றாம்முறையும் பிரசரிக்கப்பட்டது.

கண் நோய். Sore eyes (opthalmia)

கண் நோய் தொடங்கியவுடன் கண்களுக்கு நல்லெண்ணெய் விடவேணும். விட்டவுடன் கண்நோய் வெள்ளோவாகி விடும். (அநுபவமுறை)

# பால வைத்தியம்.

## பாலதேக பரிபாலனத்தின் பொதுவிதி.

நோயாளரில் அதிகபங்கானோர் பிள்ளைகளே. அதினால் அதிகம் பிள்ளைகள் மரிக்கிறார்கள். ஆகையால் பிள்ளைகளில் தேகபேதங் கண்டவுடன் அதிக கவனமாய்ப் பார்ப்பது புத்தி. முதிர்வயதிலும் இளம்பராயம் நோய்கொள்ளச் சார்பாயிருப்பதுமாத்திரமல்ல, நோய்கொண்ட உறுப்புடனே மற்றுமுறுப்புகளும் அனுதாபப்படக்கூடியதாயிருக்கிறது. உதாரணமாகப் பல் முளைக்கும்போது காய்ச்சல், கழிச்சல், வலி, கரப்பன் முதலிய நோய்கள் உண்டாகிறது.

மறுகாலத்திலும் பல்முளைக்குங்காலத்திலேயே நோய்கள் அதிகமாயும் மோசமாயும் நேரிடுகிறது. ஆகையால் அக்காலத்தில் வரும் நோய்க்கு நாம் இருமடங்கு கவனஞ்செலுத்தவேண்டும். குழந்தை வைத்தியம் அனேகரின் மனதைத் துன்பப்படுத்துகிறது. எவ்விதமெனில் பிள்ளைக்கு நோய்கொள்ளும்போது அது தன்வருத்தத்தைச் சொல்லுவதற்குப் பேச அறியாது. பேசக்கூடுமாயின் பயத்தினிமித்தம், அல்லது விளங்காமையாய், சரியற்ற மறுமொழிசொல்லும். குழந்தைகள் பேசக்கூடாதிருந்தாலும் அவர்களுக்கு ஒருபாஷையுண்டு. பாலவைத்தியத்தில் அனுகூலப்படுகில் அவைகளின் பாஷையை அறிவதே முக்கியம். பிள்ளைகளுக்குச் சுகவீனம் வரும்போது தங்களை நேசிக்கிறவர்கள் மட்டிட்டறியும்படி தங்கள் சுகவீனத்தைக் குறியினால் அல்லது பேச்சினால் விளக்குவார்கள்.

பிள்ளைகளுடைய அழுகையின் மாதிரியினாலும் சிலகுணங்களை மட்டிட்டறியலாம். வயிற்றில் குத்திருந்தால் நீண்ட உரத்தசத்தமிட்டு அழும். கண்ணீர்வடியும். கொஞ்சநேரம் ஆறித் திரும்ப அழும். கால்களை மடக்கி வயிற்றுடன் அணைக்கும். நெஞ்சில் வியாதியானால் உரத்து அழாது. கண்ணீர் வடியாது. பெருமூச்சு இடைக்கிடையிருக்கும். மெதுவான சொற்ப இருமலிருக்கும். தலையில் வியாதியானால் கீச்சிட்டழும். மெதுவாய் அனுங்கும். சிலவேளை சத்தம்பண்ணாது. பிள்ளையின் முகரூபத்தையும் தலையிலும் சரீரத்திலுமுள்ள சூட்டின் மாதிரியையும், சல மலத்தின் நிறம் அளவு மாதிரிகளையும், பல் முளைக்கிறதோவென்றும், சுவாசநடை கெதியோ தாமதமோவென்றும், நாடி

யின்நடை எப்படியென்றும், சகல குணங்களையும் மட்டிட்டறியவேண்டும்.

வியாதிகளில் வயிற்றையுஞ் சோதித்துப்பார்ப்பது முக்கியம். பிள்ளைகள் அழுவது வயிற்றில் கையாலமர்த்த நோக்கொள்வதினாலோ பயத்தினாலோ என்று சொல்லமுடியாது. ஆகையால் பிள்ளைகளை மூடியிருக்கும் சீலைக்குள் கைவைத்து வயிற்றைச் சோதிக்கவும். குடலில் வாய்வுப்பொருமலால் நோவுகொண்டால் வயிற்றில் மென்மையாயுரஞ்ச நோவு சுகமாயிருக்கும்.

---

## சிறு குழந்தைகளைப் பராபரிக்கும் விதம்.

பிள்ளை பிறந்தவுடன் இளவெந்நீரிற் குளிக்கவார்த்துச் சரீரத்தை வஸ்திரத்தால்மூடி மாதாவினருகே கிடத்தவேண்டும். குளிர்காலமாயின் கம்பளியால் மூடிவைப்பது நல்லது. மாதா களைதெளிந்து சொற்பநேரத்தினமேல் தனது பாலைப் பிள்ளைக்குக் கொடுக்கவேண்டியது. அப்படிக் கொடாமல் விடுவதினால் தாய்ப்பாலூறுமல் காய்ச்சலுண்டாக ஏதுவாகும். பிள்ளை, தாய்முலையை உமிவதினால், பாலூறித் துவாலையும் அதிகப்படாது, முதற்பால் போஷணையும் விரேசனத்தன்மையுமுடையதாதலாலும் பிள்ளையின் கருமலத்தைப் போகப்பண்ணுவதற்குத் தாமதியாமல் கொடுக்கவேண்டிய தவசியம்.

உடனே பால் இல்லாவிட்டால் ஒரு தேய்க்கரண்டியளவு ஆமணக்கெண்ணெயுடன் கொஞ்சச் சீனி சேர்த்துப் பிள்ளைக்குக் கொடுக்கவேண்டும். மலம் மற்றநாளும் கறுப்பாயிருந்தால் அவ்விதமாய் இன்னுமொருமுறை கொடுக்கவேண்டும், அல்லது (1-ம் இலக்க மருந்தாகிய) ரூவாப்புக்கலவைகொடுக்கவும். மலம் புளிப்புமணமும் கட்டியும் பச்சிலை நிறமுமாயிருந்தாலும் அக்கலவை கொடுக்கலாம்.

பிரசவித்து ஆறுமணித்தியாலஞ்சென்றபின் பாலூறாவிட்டால், ஒரு தேய்க்கரண்டியளவு பசுப்பாலும் அவ்வளவு வெந்நீருங்கலந்து இரண்டுமணித்தியாலத்துக்கொருமுறை குழந்தைக்குக் கொடுத்துவரவும். துவக்கத்தில் மூன்று நாலு நாளைக்குச் சிலவேளை மாதாவின்பால் பிள்ளைக்குப் போதியவளவாயிராது. அதற்கு ஒன்று அல்லது இரண்டு தேய்க்கரண்டி அளவு கொண்ட பசுப்பாலுடன் சரிபங்கு வெந்நீரும் கொஞ்சச் சீனியுங்கலந்து இடைக்கிடை கொடுக்கவும். மாசஞ் செல்லச்செல்லப் பசுப்பாலுடன் கொடுக்குந் தண்ணீரைக் குறைத்துக்கொள்ளவும்.

பிள்ளை பிறந்தவுடன் குரல்கம்மி அழுதால் கோரோசனை ஒரு கிறேனை முலைப்பாலி லுரைத்துக்கொடுக்கத் தீரும். அல்லது கற்பூரவள்ளியிலைச்சாறு, குன்றிமணியிலைச்சாறு, ஈருள்ளிச் சாறு வகைக்கு ஒவ்வொருதுளி; கற்கண்டுத்தூள் பேன்பிடி போட்டு ஒரு தேய்க்கரண்டியளவு வெந்நீருடன் கலந்து நாள் இரண்டுமுறையாக ஒருநாள் அல்லது இரண்டுநாளைக்குக் கொடுக்கவும்.

தாய்க்குப் பாலில்லாவிட்டால் கைத்தாயுடைய பாலை அல்லது பசுப்பாலை அல்லது தகரப்பாலைக் கொடுக்கலாம். பசுப்பாலுடன் வெள்ளைச்சீனியைச் சேர்க்கவும். சர்க்கரை புளிப்பையுண்டாக்கிச் சீரணித்தலைக் குழப்பும். பசுப்பாலைப் பாலூட்டி (Feeding bottle) என்னுங் குழற்சீசாவில் விட்டுக்கொடுக்கவும். அச்சீசாவுங் குழலும் அதிகஞ் சுத்தமாயிருக்கவேண்டும். ஈயப்பாத்திரத்தில் அல்லது செப்புப்பாத்திரத்தில் பாலைவைத்துப் பாவிக்கலாகாது. தாய்க்குப் போதிய பாலிருந்தால் பிள்ளைக்குப் பல்முளைக்கும் வரைக்கும் வேறேருணவுங் கொடாமற் தாயின் பாலைக் கொடுக்கவும்.

பிள்ளை பிறந்து மூன்று நாலு கிழமைவரையிலும் பகலில் இரண்டு மூன்று மணித்தியாலத்துக்கொருமுறை பால் கொடுக்கவும். இரவில் அவ்வளவு நெருக்கமாய்க் கொடுக்கவேண்டியதில்லை. பிள்ளை அழுதநேரமெல்லாம் பால்கொடுப்பது தாய்க்கும் பிள்ளைக்கும் நட்டம். அதினுற் பிள்ளைக்கு வாய்வுப்பொருமலையும் சமியாக்குணத்தையும் உண்டாக்கும். கூடியளவு நேரக்கணக்காய்ப் பால்கொடுப்பது நல்லது. பத்து அல்லது பன்னிரண்டுமாசஞ் சென்றபின் தாய்ப்பாலை நிறுத்திப்போடவேண்டும். அதற்கு மிஞ்சிக் கொடுப்பது தாய் பிள்ளை இருவருக்குங் கேடாய்முடியும்.

**கைத்தாய்—Wetnurse.** கைத்தாயானவள் இளம்பராயமாய் நோயற்றவளாயிருக்கவேண்டும். அவள் போஷணையான சீரணிக்கத்தக்க சாப்பாடு சாப்பிடவேண்டும். மாதத்துன்பத்தினல் அல்லது கருப்பவுற்பத்தியால் பால் குறைவாய்வரும். அவ்வேளையில் வேறொரு கைத்தாயைத் தேடவும். சிலருடைய பால் சிறுபிள்ளைகளுக்கு இணங்காமலிருக்கும். அடிக்கடி கைத்தாயை மாற்றலாகாது.

**நித்திரை—Sleep.** குழந்தை பிறந்ததுமுதல் மூன்று மாசங்களும் ஏறக்குறைய முழுநேரமும் நித்திரைசெய்யவிடவ

து நல்லது. முதல் இரண்டுமாசங்களும் பிள்ளை மாதாவினுடைய தேகவனுக்காகக் கூடப் படுக்கவேண்டிய தவசியம். அதற்குப்பின் புறபபானவிடத்திற் கிடப்பதினால் சுத்தக்காற்றைச் சுவாசிக்கும். பிள்ளையை மடிமேல்வைத்து நித்திரையாக்குதல் ஆகாது. பிள்ளையைக் குளிர்காற்றுப்படாமல் போர்த்துத் தொட்டிலிற்கிடத்தி மெல்லியசீலையால் மூடவேண்டும். பிள்ளை மூன்றுவயதுமட்டும் பகல் நித்திரை செய்யவேண்டும். கடும்வருத்தமானவேளை தவிரப் பிள்ளையைத் தாயுடன் அல்லது கைத்தாதையுடன் படுக்கவிடப்படாது.

அப்பியாசம்—Exercise. பிள்ளைகளுக்கு நற்காற்றும் அப்பியாசமுந் தேவையாதலால் காலமேயும் பின்னேரமுங்கொண்டுலாத்தவேண்டும். நடக்கக்கூடியவர்களை ஓடி உலாவப்பண்ணவேண்டும்.

உடுப்பு—Dress. பிள்ளைகள் உடுக்கும் உடுப்பும் படுக்கும் அறையும் அதிக சுத்தமாயிருக்கவேண்டும். குளிரானவேளைகளிலும் நோயுள்ளவேளைகளிலும் கம்பளி உடுப்பு நல்லது. பிள்ளைகள் படுத்திருக்குஞ் சீலை முதலியவைகள் ஈரமாயிருக்கப்படாது. அடிக்கடி சீலையைமாற்றித் துப்புரவாய் வைத்திருக்கவும்.

குளிப்பு--Washing. நாளொருமுறை பிள்ளைகளை வெந்நீரிற் குளிக்கவார்த்துவரவும் நெடுநேரமட்டுங் குளிர்க்கவார்க்கப்படாது. ஈரத்தை மெல்லியசீலையாற் றுடைத்துப்போடவும். பிள்ளைகள் மூன்று நாலு வயதானபின் தண்ணீர்ச்சூட்டைக் குறைத்துக்கொள்ளவும். வளர்ந்த பிள்ளைகள் குளிர்ந்ததண்ணீரில் குளிக்கலாம். பெலவீனப்பட்ட பிள்ளைகளை வெந்நீரிற் குளிர்க்கவார்ப்பது நல்லது. சவுக்காரத்தை நாடோறும் பாவித்தால் தோலின் மினுமினுப்பைக்கெடுத்து எண்ணெய்க்கசிவையகற்றித் தோலைக் காயப்பண்ணி வரட்சியாக்கும். கிழமைக்கொருதரஞ் சவுக்காரஞ் சொற்பமாய்ப் பாவிக்கலாம்.

போசனம்—Food. பிள்ளைக்கு இரண்டு பற்கள்முளைத்துச் சரியாய் வெளியில்வந்தபின் அரோட்டுமா சவ்வரிசிக்கஞ்சியுடன் பாலுஞ் சீனியுங் கலந்துகொடுக்கவும். மற்றப் பற்களும் முளைத்தபின் அரிசிக்கஞ்சி, சோறு, கோதுமைஅப்பம் முதலிய இலேசாய்ச் சமிக்கக்கூடிய தீன்கொடுக்கலாம். பிள்ளைக்குப் பால்தான் விசேஷசாப்பாடு. சாப்பாட்டில் அதிக கவனம் வைத்துப் பிள்ளையை வளர்ப்பது விசேஷகாரியம்,

கூவ்வாததின் கொடுப்பதால் குடலழற்சி கொண்டு கழிச்சல் முதலிய நோய்களுண்டாகி அதிகம் பிள்ளைகள் மரிக்கிறார்கள். இரண்டு வயசுமட்டும் இறைச்சிவகை கறிவகைககள் கொடுக்கப்படாது.

**பழக்கங்கள்—Habits.** பின்னுற் சொல்லப்படும் பழக்கங்கள் பிள்ளைகளுக்குத் தீங்கை வருவிக்குமாகையால் அவைகளைத் தவிர்க்கவேண்டும்.

1 வது-உரத்த சடுதியான சத்தமிட்டுப் பிள்ளையைத் திடுக்கிடப்பண்ணுதல்.

2 வது-உணவூட்டும் வெறும்போத்திலே அல்லது பிறர் கைவிரல்களை அல்லது பிள்ளையுடையவிரலை உமியும்படிவிடுதல்.

3 வது-பிள்ளையைத் தொட்டிலில் வைத்துக் கெதியாய் ஆட்டுதல்.

4 வது-சுடுபாலை அல்லது வேறேதுஞ் சுடுநீன்களை வாயாலே ஆறும்படி ஊதுதல்

5 வது-தலைக்குத் தண்ணீர்வார்க்கும்போது காதுக்குள் சென்ற தண்ணீரை எடுக்கும்படி தடியில் அல்லது ஈர்க்கில் சீலைசுற்றி நோகும்படி துடைத்தல்.

6 வது-துன்பம்மாறிச் சுகம்வரும்போது கடும் பசிகொள்ளும். ஆகையால் அவ்வேளையில் அதிகமாய் ஒரேமுறையில் உணவுகொடுத்து இரைப்பையைப் பாரப்படுத்தி முட்டுப்பண்ணுதல்.

7 வது பிள்ளையின் முலையைக் கசக்கி அளைதல்.

8 வது--வயிற்றுலே போகப்பண்ணுவதற்கு இலைக்காம்பை அல்லது புகையிலைக்காம்பை அல்லது சாறணைவேர் முதலியவற்றை அபானத்துட் செலுத்துதல்.

## கொப்பூழில்புண். Ulcer of the Navel cord.

நஞ்சுக்கொடி விழுந்தபின் கொப்பூழில் புண் இருந்தால் சீலைசுட்ட சாம்பலாவது ஆட்டுப்பிழுக்கைசுட்ட சாம்பலாவது போடலாம். அல்லது ஒலிவெண்ணெய் (Olive Oil) பூசலாம்.

---

## பல்முளைத்தல். Teething.

பொதுவாகப் பிள்ளைபிறந்து எழுமாசத்திற் பல்முளைக்கும். பல் முளைப்பதற்குமுதல் அடையாளம் உமிழ்நீர் வாயின்

கோணத்தால் வடியும். ஒவ்வொரு பல்முளைக்கும்போதும் காய்ச்சல் சிலவேளை இரண்டொரு நாளைக்குச் சொற்பமாயிருக்கும். பல்முளைக்க வில்லங்கமானவேளைகளில் பிள்ளை பயப்படும்; முகஞ் சினக்கும்; தேகஞ் சுடும்; பிள்ளை விரலை அல்லது வேறேதுங் கையில் அகப்பட்டதை வாய்க்குள்ளே கொண்டுபோகும்; சிலவேளை முரசுசிவந்து அதிற் சூடும் வீக்கமும் தொடக்கூடாதபடி நோவும் இருக்கும்; பிள்ளை ஆறுதலற்று நித்திரை குறைவாயிருக்கும்; சத்தி, காய்ச்சல், தலைச்சூடு இருக்கும். சிலவேளை வலி, அக்கரம், கழிச்சல், இருமல், வாயுப்பொருமல், தலையிற் சரப்பன் முதலிய குணங்களிருக்கும்.

முரசிற் பல்முளைப்பது தெரிந்தால் கைவிரலுக்குத் தேன் பூசி அதில் உரஞ்சவும். அல்லது கூரிய பேனைக்கத்தியால் முரசில் நெடும்பாட்டுக்குப் பல் முளைத்திருக்குமிடத்திற் கிறிவிடவும். சத்தித்த பால் திரைந்தால் இரண்டு தேக்கரண்டி சுண்ணாம்புத்தண்ணீரைக் காற்கொத்துப் பாலுடன்கலந்து சொற்ப பிரமாணமாகக் கொடுத்துவரவும். பிள்ளைக்கு என்னவருத்தம்வந்தாலும் முரசை எப்போதுஞ் சோதித்துப்பார்க்கவும்.

---

## இரா அச்சம். Night Terror.

சிலதருணங்களில் நற்சவுக்கியமாய்ப் படுத்து உறங்கிய பாலர் சடுதியிலே கீச்சிட்டு, ஆ! ஐயோ! எனக்குளறி வாய்பொருமுவார்கள் பிள்ளை தாயை அல்லது கைத்தாயைவிட்டு வேறொருவரிடம்போகாது. படிப்படியாய்க் கொஞ்சநேரத்தால் நித்திரையாய்விடும். மனதிற்பதிந்தவைகளையே வாய்பொருமும். விசேஷமாய்ச் சீரணேந்திரப் பிசகைக்கொண்டே இவ்வியாதி கிளம்பும்.

### பரிகாரம்.

இதற்குச் சாப்பாட்டை ஒழுங்குபண்ணி மெல்லிய விரேசனங் கொடுக்கவேண்டியது. பிள்ளையைத் தனியே அல்லது இருட்டில் விடப்படாது. பிள்ளை படுக்கும் அறையில் ஓர் அதிமுகமான ஆளும் வெளிச்சமும் இருந்தால் அதற்கு நேரிடும் வில்லங்கமற்றுப்போம். இத்தருணங்களில் இருட்டில் படுக்கும்படி அல்லது தனியேவிட்டால் பயங்கரமான விஷயங்களின் உருபு தோற்றும். மலசுத்தி குறைவானால் ரூவாப்புக்கலவை கொடுக்கவும்.

---

## நாசியிலிருந்து இரத்தம்பாய்தல்.
## Bleeding from the nose.

இந்நோய் யாதொரு காரணமில்லாமலும் சிலவேளைகளில் காயத்திலும் காய்ச்சலிலுமுண்டாகும். மூக்கைச் சீறுவதும் துடைப்பதும் இரத்தப்பெருக்கை அதிகப்படுத்தக்கூடுமாதலால் அப்படிச் செய்யப்படாது.

பரிகாரம்.

தண்ணீர் அல்லது வின்னரியுந் தண்ணீருங்கலந்து முகத்துக்கும் கழுத்தின் பிற்பகுதிக்குஞ் சீலையில் தோய்த்துப்போடவும். கொஞ்ச ஆடாதோடைச்சாறும் வெல்லமுமரைத்துக் குடிக்கவுங்கொடுத்துத் தலைக்குந்தப்பலாம். சூடான பானங்களைக் குடிக்கப்படாது. இதில் இரத்தம் தடைபடாவிட்டால் ஒருதேய்க்கரண்டியளவு வின்னரியை இருபங்கு தண்ணீரிற்கலந்து கொஞ்சச் சீனியுஞ்சேர்த்துக் குடிக்கக்கொடுக்க, சினக்காரத்தைத் தண்ணீரிற்கரைத்துப் பழஞ்சீலையிற்றோய்த்து நாசிக்குள்ளடையவும்.

---

## நாசியால் நாற்றமான நீர்வடிதல். (Ozaera)

வெகுநாட்பட்ட தடிமனிருப்பதினலும் கண்டமாலையியுள்ளவர்களுக்கும் இந்நோய்உண்டாகிறது. இவ்வியாதியின்குணம் பொதுவான தடிமன்போல் இருக்கும். அழுகல் நாற்றமானநீர் மூக்கிலிருந்து வடியும். சிலவேளை வயிரமான அயறுகள் பிடித்திருக்கும்.

பரிகாரம்.

சரீரத்தைத் தேற்றி மீன் எண்ணெய் குவினைன் அயம்சேர்ந்த மருந்துகள்கொடுக்கவும். பதாசிபிரமங்கனசில் (Permanganate of Potash) ஒருகிறேனை இரண்டு அவுன்ச தண்ணீரிற் கரைத்துப் பீச்சாங்குழலாற் கழுவிவரவும்.

பதாசிகுலோறசு (Chlorate of Potash) 20 கிறேனுஞ் சீனி அரை அவுஞ்சுஞ் சேர்த்து மூக்குப்பொடி போடவும்.

## தடிமன் Catarhi.

நாசி உறைச்சவ்வு வீங்கி உரப்புக்கொண்டு காய்ச்சற்கோலமிருக்கும். பிள்ளை சுவாசிக்கவில்லங்கப்பட்டு வாயாலே சுவா

இக்கும். துவக்கத்தில் நாசியிலிருந்து மெல்லியநீரும், பின்பு
தடித்தசளியும் வரும். கண்ணீர்வடியும். தும்மலிருக்கும். இரை
ச்சற்சத்தம்போற் சுவாசிக்கும். பல்முளைக்குங்காலத்தில் இக்
குணங் சிலவேளை உண்டாகும். இவ்வியாதி இரண்டுநாளைக்கு
ட் தணிந்துபோம் அல்லது தொண்டைப்புண் இருமல் முத
லியவைகளாய் மாறும்.

பரிகாரம்.

15-ம் இலக்க அவுஷதம் மூன்றுநாளைக்குக் கொடுக்கவும்.
இரவில் வெந்நீருக்குள் கால்களை வைத்துத் துடைத்தபின் சூ
டான தேயிலை அல்லது கஞ்சியுடன் சுவிற் ஸ்பிறிற் ஒவ்னைற்
றர் [Sweet spirits Nitre] 3 அல்லது 4 சொட்டைக் கலந்
து கொடுத்துக் கம்பளியாற் போர்த்துவிடவும்.

---

## இருமல். Congh.

சொற்ப காய்ச்சலும் மூச்சு முட்டும் நெஞ்சிற் சத்தமு
மிருக்கும். அடிக்கடி இருமும்.

பரிகாரம்.

அமோன தயிலத்தை நெஞ்சுக்கும் முதுகுக்கும் பூசவும்,
2-ம் இலக்க அவுஷதத்தை உள்ளுக்குக்கொடுக்கவும். சாப்பா
ட்டை ஒழுங்குபண்ணி மலசுத்திபண்ணிவரவும். நெஞ்சில் மு
ட்டுங் காய்ச்சலுமிருந்தால் 15-ம் இலக்க அவுஷதத்தைக்கொ
டுக்கவும். இலேசான இருமலாயிருந்தால் அதிமதுரம், கொத்
தமல்லி, மிளகு, திற்பலி, தேயிலை, கற்கண்டு வகைக்குச் சரி
பங்கெடுத்துத் தண்ணீரில் அவித்துக்கொடுக்கவும். அல்லது
பத்துப் பதினைந்துசொட்டு வேப்பெண்ணெயுடன் இரண்டொ
ரு கிறேன் கோரோசனையை யுரைத்துக் கற்கண்டுத் தூள்போ
ட்டுக் கொடுக்கவும்.

உண்ணாக்கு வளர்ந்ததினால் அல்லது தொண்டைப்புண்
ணினால் உண்டான இருமலுக்கு வளர்ந்த பிள்ளைகளுக்குச் சீ
னக்காரத்தைத் தண்ணீரிற் கரைத்துத் தொண்டையிற் படும்ப
டியாக நாள் 3 அல்லது 4 முறை கொப்பளித்துவரவும்.

உண்ணாக்கு வளர்ச்சிக்கும் அண்ணத்திரட்சிக்கும் தனிக்
கபிலமும் கிளிசரினும் சரிபங்குகலந்து (Tannic acid and
Glycerine) பூசவும்.

---

## குக்கல். HoopingCough.

இது சலதோஷத்தின் குணங்கள்கண்டபின் உண்டாகும். இருமல் பாட்டம் பாட்டமாய்வந்து நெடுநேரத்துக்குநின்று திக்குமுக்கடைக்கப்பண்ணும். இரவில் அதிகப்படும். இருமல் தொடங்குகையில் பிள்ளையின் முகம் அங்கலாய்த்து அது மாதாவைக் கட்டி அணைக்கும். இருமும்போது ஒருவித இழுப்புச் சத்தம் இருக்கும். உவாந்தி இருக்கும். சிலவேளை இவ்வியாதி இரண்டுகிழமைதுவங்கி மூன்றுமாசம்வரைக்கு மிருக்கும்.

பரிகாரம்.

முதற்காலில் தடிமனுக்குரிய மருந்தும், திரும்ப இருமல் கடினமானால் 3-ம் இலக்க அவுஷதமுங் கொடுக்கவும். பிள்ளையைக் குளிரில் விடப்படாது. அழற்சிப்படுத்தாத உணவுகொடுத்து வயிற்றுலை ஒழுங்காய்ப் போகும்படி செய்யவும்.

நற்சீரகம், கருஞ்சீரகம், ஓமம், நாயுருவிச்சமூலம், வேலிப்பருத்திச்சமூலம் வகைக்குக் காற்கழஞ்சு, கற்கண்டு மூன்று கழஞ்சு, அரைப்படி தண்ணீரில்விட்டு நாலொன்ருய்க் காய்ச்சி மூன்றுநாள் ஆறுநேரங் கொடுக்கவும்.

கதலி வாழைப்பழஞ் சாப்பிடுவதால் சிலருக்குச் சகாயங் காணும். வளர்ந்த பிள்ளைகளுக்கு அணிலிறைச்சியைப் பசுநெய்யில் பொரித்து மூன்றுநாளைக்குக் கொடுக்கவும்.

---

## தொய்வு, Asthma.

தூக்கமும் பசித்தனமும் மூச்சுவிட வில்லங்கமும் நெஞ்சில் இரையுஞ் சத்தத்துடன் வரட்சியான இருமலும் இருக்கும். சரீரத்தை முன்னுக்கு வளைத்துத் திக்குமுக்கடைக்கத்தக்க ஏக்கமும் இருக்கும். இவ்வியாதி இரவில் முற்பகுதியிற் தொடங்கும். இக்குணங்கள் காலமே தணிந்து இளகிய நுரைச்சளி போகும். அப்பொழுது மூச்சுவிட இலகுவாகப் பிள்ளை நித்திரைகொள்ளும்.

பரவணிச்சார்பு, காலநிலை சடுதியில்மாறுதல், சமிக்கக்கூடாத சாப்பாடு, வைக்கோல் அல்லது நெற்றூசி, இபிகாக்கு முதலிய அழற்சிப் பதார்த்தங்கள் மணத்தல் இவ்வியாதி உண்டாவதற்கு ஏதுவாகும்.

பரிகாரம்.

2-ம் இலக்க அவுஷதங்கொடுக்கவும். மலசுத்திக்கு ரூவாப்புக்கலவை அல்லது ஆமணக்கெண்ணெய் கொடுக்கவும். நெஞ்சுக்கு அமோன தயிலம்பூசிக் கம்பளியால்மூடவும். கபம் நெஞ்சில் அதிகப்பட்டு முட்டுப்படுத்தினால் இபிகாக் வைனை (Ipecac wine) சத்திக்கக்கொடுக்கலாம். வளர்ந்தபிள்ளைகளுக்குக் கோப்பியைச் சீனி பால் சேராதபடி கொடுக்கவும்.

ஈளைப் புகைத்திரி மணக்கக்கொடுக்கலாம். புகையிலைகுடிப்பதினாலும் சிலருக்கு முட்டுத் தணிவாயிருக்கும்.

வியாதி சுகமானபின் செய்யவேண்டிய பரிகரிப்பு அயவைன், மீன்எண்ணெய், போஷணையான சாப்பாடு முதலியவை கொடுக்கவும். ரூவாப்புச்கலவைகொடுத்து மலசுத்திசெய்யவும். வாய்வுகொள்ளும் பதார்த்தங்களைத் தவிர்க்கவும். தண்ணீர் முதலிய நீர்களை மட்டாய்க் குடிப்பது நல்லது. நோயை அருட்டும் ஏதுக்களைத் தவிர்க்கவும்.

---

## தொண்டைப்புண். Sorethroat.

குளிர்காற்றும் ஈரலிப்பானகாலமும் இவ்வியாதி உண்டாவதற்குக் காரணமாயிருக்கிறது. இலேசான வகையில் தொண்டைசிவந்து அதிற் சொற்பநோவிருக்கும். மற்றவகையில் தொண்டையின் கீழ்ப்பக்கங்களிலிருக்கும் திரட்சிகள் (Tonsils) வீங்கி வெண்மையான ஆடைபிடித்திருக்கும். திரட்சிகளில் (Tonsils) ஒன்று அல்லது இரண்டும் புண்பட்டிருக்கும்.

பரிகாரம்.

15-ம் இலக்க அவுஷதம் இரண்டுநாளைக்குக் கொடுத்துத் திரும்ப ஆமணக்கெண்ணெய் அல்லது உப்புக்கலவை கொடுக்கவும்.

வளர்ந்தபிள்ளைகள் 5 அல்லது 6 கிறேன் சினக்காரத்தை ஒரு அவுன்சு தண்ணீரிற்கரைத்துத் தொண்டையிற் படும்படி வாய்கொப்பளிக்கவும். கழுத்துக்கு வக்கம்பிடிக்கவும். தொண்டைக்குச் சுடு ஆவி (வேது) பிடிக்கவும். தேய்ப்போய்ச்சி (Teapot) இப்பாவிப்புக்கு நல்லது.

அமோன தயிலத்தைக் கழுத்தடியிற்பூசி மெல்லிய கம்பளிச்சீலையால் மூடவும்.

நாட்பட்ட தொண்டைப்புண்ணுக்குக் கறியுப்பை வெந்நீரிற்கரைத்து வாய்கொப்பளிக்கவும்.

தனிக்கமிலமும் கிலேசரினும் (Tannic acid and Giycerine) சரிபங்காய்க் கலந்து ஒட்டக மயிர்க்குச்சியால் (Camel hair brush) அல்லது சிறுத்தடியில் கழராதபடி சீலைசுற்றி இதிற் தோய்த்துத் தொண்டைக்குள்ளிருக்கும் திரட்சிகளின் வீக்கத்துக்கும் உண்ணுக்கு வளர்ச்சிக்கும் பூசலாம்.

3 திறும் சீனக்காரத்தை அல்லது நவச்சாரத்தை ஒருஅவுன்சு தண்ணீரிற்கரைத்து மேற்சொல்லியபடி பூசலாம்.

பால் கஞ்சி முதலிய மெல்லியதீன் கொடுக்கவும்.

---

## ஏர்ப்பு. Tetanus.

இவ்வியாதி பிள்ளைபிறந்து மிகுதியாய் ஒருகிழமைக்குள் உண்டாகும். இந்நோய் தொடங்கும்போது பிள்ளை முலைகுடியாது. மென்மையான சத்தமாயனுங்கி யழும். வாயைத் திறந்து பார்த்தால் அலகுபூட்டியிருக்கும். சிலவேளை சர்வாங்கமும் வலிக்கும்.

வலிகொள்ளும்போது கைகள் பொத்திக் கால்கள் மடக்கியிருக்கும், அலகுகிட்டியிருக்கும், பிள்ளை அடிக்கடிவீரிட்டழும்.

கொப்பூழ்க் கொடியைப்பற்றிக் கவலையீனமும், குளிர்படுதலும், மலசுத்திக்குறைவும் இவ்வியாதின் காரணங்களாகவிருக்கின்றன.

### பரிகாரம்.

கலமல் ஒருகிறேனைச் சீனிசேர்த்து நாவிற்றவிடத் திரும்ப மலஞ் சுத்தியாய்ப் போகும்படி ரூவாப்புக்கலவை கொடுக்கவும். சுடுதண்ணீரிற் கொஞ்சநேரம் இருத்தி ஈரத்தை நன்றாய்த் துடைத்துப் போர்த்துவிடவும். இது மிகுதிபற்றி அசாத்திய நோய்.

---

## செங்கண்மாரி. Jaundice.

சலம் பெய்யும்போது சீலையில் மஞ்சள்நிறந் தோற்றும். தோலுங் கண்ணும் மஞ்சள்நிறமாயிருக்கும், மலம் வெண்மையாயிருக்கும். சிலவேளைகளிற் பிள்ளைபிறந்து இரண்டொருநா

ளையாற் செங்கண்மாரிதுவங்கி இரண்டொருகிழமையால் மாறிப்போகும். வளர்ந்தபிள்ளைகளுக்கு இது உண்டாகும்போது சொற்ப காய்ச்சல், வாந்தி, தலையிடி முதலிய குணங்களுண்டாகும், பிள்ளைகளுக்குச் சிலவேளை இது வயிற்றுளைவை யுண்டாக்கும்.

பரிகாரம்:

கிறே பவுடர் (Grey Powder) ஒருகிறேன் இரவிற்கொடுத்து மற்றநாட்காலமே ஆமணக்கெண்ணெய்கொடுக்கவும். திரும்பச் சீராய் வரும்வரைக்கும் 12-ம் இலக்க அவுஷதம் கொடுக்கவும்.

நாயுருவிவேரைத் தூருவியரைத்து மிளகளவெடுத்துக் கொஞ்ச எலுமிச்சம்புளிசேர்த்து வெந்நீரிற் கலந்துகொடுக்கவும்.

கீழ்காய்நெல்லிச்சாற்றை ஒரு தேய்க்கரண்டிப்பிரமாணமாய்க் கொஞ்சப் பசுப்பாலிற்கலந்து நாளொருமுறையாக இரண்டு அல்லது மூன்றுநாளைக்குக் கொடுக்கவும். 39-ம் இலக்க அவுஷதத்தைத் தலைக்கு வைக்கலாம்.

---

## சத்தித்தல். Vomiting.

பலவியாதிகளிலும் இது உண்டாகும். பழாத கனிவகைகளும், சமியாத சாப்பாடும், வயிற்றிற் கிருமியும் பொதுவான காரணமாயிருக்கின்றது.

பரிகாரம்.

சமியாக்குணத்தினலுண்டானல் வெந்நீர்கொடுத்து இன்னும் வாந்தியை அதிகரிக்கப்பண்ணியபின் 4 அல்லது 5 கிறேன் சோடா (Bicarbonate of Soda) அல்லது மக்னீசியகாபனசை (Carbonate of Magnesia) வேற்கொம்பு அவித்த தண்ணீருடன் கொடுக்கவும். கலமலை (Calomel) ஒவ்வொரு கிறேன் பிரமாணமாக 2 நேரத்துக்குச் சீனியிற் கொடுக்கவும். கிருமியிருந்தால் சந்துகின் தூளைக் கொடுக்கவும்.

---

## சலந்தடைபடுதல். Retention of Urine.

சிலபிள்ளைகளுக்குப் பிறந்து சிலமணித்தியாலங்களாகச் சலம்போகாமலிருக்கும். சலவாசல் நுனியில் சளியடைப்பினல் இப்படியுண்டாகும். சிலருக்குச் சூட்டினுற் றடைபடும்.

பரிகாரம்.

சலவாசலை வெந்நீரால் கழுவவும். அல்லது வெந்நீரிற் கடற்பஞ்சைத்தோய்த்துப் பிளிந்து சொற்பசூட்டுடன் அடிவயிற்றுக்குப் பிடிக்கவும். இதனால் சலம்போகாவிட்டால் 4 அல்லது 5 சொட்டு நிதுரோசிதர் சுரையை (Sweet spirit) of Nitre) மூன்றுமணித்தியாலத்துக்கொருமுறை சொற்ப வெந்நீரிற்கலந்து உள்ளுக்குக்கொடுக்கவும். பூக்கு இலைக் கஷாயமும்நல்லது.

எள்ளிலையும் எலிப்பிழுக்கையும் வெள்ளரிவிரையுஞ் சமனுயரைத்தாவது அல்லது ஆவாசமல்லிகை முலைப்பாலிலரைத்தாவது கொப்பூழிற்போடலாம்.

---

## சலம் அடிக்கடிபோதல். Incontinence of Urine.

சிலபிள்ளைகள் படுக்கையில் அடிக்கடி சலம் விடுவார்கள். இரவில் குளிர்படுதல், வயிற்றில்கிருமி, சமியாக்குணம், நரம்புப்பெலவீனம் இவ்வியாதிக்குக் காரணங்களாயிருக்கின்றன.

பரிகாரம்.

படுக்கைக்குப்போக மூன்றுமணித்தியாலத்துக்குமுன் தண்ணீர்வகை குடியாமல் இருக்கச்செய்யவும். இரவில் இரண்டொருமுறை பிள்ளையையெழுப்பிச் சலம்விடச்செய்வது நல்லது. அயக்கலவை கொடுக்கவும்.

---

## மலக்கட்டு. Constipation.

இதற்கு ஒரு தேய்க்காண்டி ஆமணக்கெண்ணெய் அல்லது ரூவாப்புக்கலவை கொடுக்கவும்.

ஆமணக்கெண்ணெயுடன் சீனியும் பசுப்பாலும் கொஞ்சக்கறுவா அவித்த தண்ணீருஞ்சேர்த்துக் கலக்கிக்கொடுக்க எண்ணெய் அரோசியம் மாறும்.

---

## சமியாக்குணம். [மாந்தம்] Indigestion.

சத்தி கழிச்சல் ஆயாசமிருக்கும். பிள்ளை இராப்பகலாயழும். வயிற்றுக்குத்துச் சமியாத சாப்பாட்டிலிருந்து வாயுப்பொருமுவதாலுண்டாகும். முலையுண்ணுது, நாவுலரும், சீதமுமாய்க் கெட்டபால்போலும் தெளிந்ததண்ணீர்போலுங்கழியும்.

பரிகாரம்.

ரூவாப்புக்கலவை அல்லது 22-ம் இலக்க அவுஷதங்கொடுக்கவும். சத்தி நெஞ்சரிப்புக்குச் சுண்ணும்புத்தண்ணீரைப் பசுப்பாலுடன் கலந்து கொடுக்கவும்.

## வாயுப்பொருமல். Flatulency.

குடல்களில் வாயுக்கொள்வதால் இரப்பையும் குடல்களும் பொருமி வலிக்கும். ஆயாசமும் வயிற்றுமுறுக்கும் நெஞ்செரிப்புமுண்டாகும்.

பரிகாரம்.

4-ம் இலக்க அவுஷதங் கொடுக்கவும். வாயுப்பொருமல் சொற்பமானல் கொஞ்சக் கொத்தமல்லியும் மிளகும் வெந்தயமுஞ் சீரகமும் அவித்துக்கொடுக்கவும். மலசுத்தி குறைவானல் ரூவாப்புக்கலவைகொடுக்கவும். மெல்லியதீன் கொடுக்கலாம்.

## வயிற்றுக்குத்து. Colic.

வாயுப்பொருமல் சத்தி மலக்கட்டு இருக்கும். வயிற்றை அமர்த்த நோ சுகமாயிருக்கும். பிள்ளை புரண்டழும். தன்னுடைய கைகளினுலே வயிற்றை அமர்த்தும்.

குளிர்ப்படுதல், மலக்கட்டு, சமிக்கக்கூடாத சாப்பாடு இவைகளால் இவ்வியாதி உண்டாகும்.

பரிகாரம்.

வயிற்றுக்குத் தர்ப்பந்தீன் (Turpentine) பூசி வெந்நீர்ச் சீலை பிடிக்கவும்.

மலக்கட்டிருந்தால் ரூவாப்புக்கலவை அல்லது ஆமணக்கெண்ணெய் கொடுக்கவும். வயிற்றாலேபோவது தாமதமானல் பீர்ச்சாங்குழல்வைக்கவும். வாயுவைக் கண்டிக்க 4-ம் இலக்க அவுஷதங்கொடுக்கவும். இந்நோய் சமியாத தீன்வகைகளால் உண்டாயிருந்தால், சத்திக்க இபிகாக்குக் கொடுத்து வெந்நீர் கொடுக்கவும்.

## கழிச்சல். Diarrhoea.

பல் முளைக்குங்காலத்தில் முரசுவீங்குவதால் அல்லது சீரணேந்திரப்பிசகினுலுண்டாகும். இது உண்டாகும் போது வாந்

திகாணும். மஞ்சள்நிறமாயும் பச்சிலைநிறமாயுஞ் சிலரில் குடித்த பால் சிரணியாது திரைந்துங் கழியும். வயிறு பொருமியிருக்கும். இவ்வியாதி பிள்ளைகளுக்கு வழக்கமாய் வருகிறது. கழிச்சல் சொற்பமாயிருந்தால் சடுதியிற் தடுக்கப்படாது.

பரிகாரம்.

பால் மறந்த பிள்ளைகளுக்கு உறைப்பான தீன்கொடாமல் அரோறூட்மாக்கஞ்சி பசுப்பால் கொடுத்துவரவும். ஆமணக்கெண்ணெய் அல்லது ரூவாப்புக்கலவை கொடுக்க மந்த மலங்கழன்று கழிச்சலுஞ் சாந்தியாகும் பல் முளைக்கும்போது இக்குணங்களுண்டானல் முரசைக் கீறிவிடவும். கழிச்சல் மேற்சொல்லிய அவுஷதங்களிற் சாந்தியாகாவிட்டால் 16-ம் இலக்க அவுஷதங்கொடுக்கவும்.

பித்தநிறமான கழிச்சலுக்கு கலமல் 1 கிறேன்கொடுத்து ரூவாப்புக்கலவை அல்லது ஆமணக்கெண்ணெய் கொடுக்கவும். சத்தியிருந்தால் சுண்ணும்புத்தண்ணீர்கொடுக்கவும். தேகம்பெலக்க 13-ம் இலக்க அவுஷதங்கொடுக்கவும்.

---

## வயிற்றுளைவு. Dysentery.

இது சிலவேளை சடுதியாயும் சிலவேளை கழிச்சல்கண்டுந் தொடங்கும். ஒருநாளில் 10 அல்லது 15 முறை கழியும். முதல் மலமாய்க்கழிந்து திரும்ப வெண்மையாக இரத்தமுஞ் சளியுங் கலந்துபோகும். வயிற்றுமுறுக்கும் இருக்கும்.

பரிகாரம்.

கிறேபவுடர் (Grey Powder) ஒரு கிறேன் இரவில்கொடுத்து ஒரு தேக்கரண்டியளவு ஆமணக்கெண்ணெய் இரண்டு நாளைக்குக் காலமேகொடுக்கவும் இதிற் சகாயமில்லாதிருந்தால் 17-ம் இலக்க அவுஷதங்கொடுக்கவும்.

வில்வப்பழத்தை வயிற்றுளைவின் பிற்காலிற் கொடுக்கலாம். பின்வரும் முறைப்படி கொடுக்கவும். வில்வப்பழத்தின் தசையைத் தண்ணீரிற்கரைத்துத் துப்புரவான மெல்லியசீலையில் வடித்துச் சீனியும் எலுமிச்சம்புளியுங்கலந்து கொடுக்கவும். அரோற்றுமா (Arrowroot) அரிசிக்கஞ்சி பால் முதலிய மெல்லிய தீன் கொடுக்கவும்.

---

## பேதிவியாதி. Cholera.

சத்தியுடன் அதிக அளவான கஞ்சித்தெளிவுபோன்ற கழிச்சலிருக்கும். சரீரங் குளிர்ந்துபோம். சலந் தடைபடும். கடுமையான தாகமுங் களையுமிருக்கும். காலின் விரலிலுங் கெண்டைக்காலிலும் வலிக்கும்.

இந்நோய் பரம்புங்காலத்தில் சமியாத காய்கனிப் பதார்த்தங்களைச் சாப்பிடப்படாது.

### பரிகாரம்.

வயிற்றுக்கும் கால்களுக்கும் கடுகுப்பற்றுப் போட்டுத் தோல்சிவந்து எரியும்வரைக்கும் கால்மணித்தியாலமளவுக்கு விடவும். இரத்தோட்டத்தைக் கெதிப்படுத்திக் குளிரைமாற்றப் பிரண்டியை ஒரு தேய்க்கரண்டி பிரமாணமாக அரைமணித்தியாலத்துக்கொருமுறை கொடுக்கவும். பேதியைக் கட்ட 16-ம் இலக்க ஔஷதங்கொடுத்து, லாடினம் (Laudanum) 1 அல்லது 2 சொட்டு ஐந்துவயதுக்குட்பட்ட பிள்ளைகளுக்கும், 3 அல்லது 4 சொட்டு ஐந்துவயதுக்குட்பட்ட பிள்ளைகளுக்கும் கொஞ்சத் தண்ணீரிற் கலந்து கொடுக்கவும். சத்தியுங் கழிச்சலும் நின்றவுடன் சொற்ப பிரமாணமாய் அரிசிக்கஞ்சித் தெளிவு அரோறூற்றுமாக்கஞ்சி இடைக்கிடை கொடுக்கவும். தாகத்துக்குக் குளிர்ந்தநீரில் 2 அல்லது 3 கிறேன் சோடாவைக் கலந்து கொடுக்கவும் 24 மணித்தியாலஞ்சென்றபின் சொற்பபிரமாணமாய்க் கலமல்கொடுத்து ஆமணக்கெண்ணெய் கொடுக்கவும்.

---

## அக்கரம். Thrush.

சிரணைந்திரப்பிசகுடனும் பெலவீனத்துடனும் இதுதொடங்கும். வாய் சிவந்து தடித்த தயிராடைத் துண்டுமாதிரியான ஆடைபிடித்திருக்கும். இவ்வாடைகள் உதட்டிலும் கதுப்பிலும் நாக்கிலும் அதிகமாய்பபிடித்திருக்கும். இவ்வசறுகளை உடைத்தால் இரத்தம்பாயும்.

### பரிகாரம்.

ஆமணக்கெண்ணெய் அல்லது ரூவாப்புக்கலவை கொடுக்கவும். 8-ம் இலக்க அவுஷதமுங்கொடுக்கலாம். வெண்காரம் அரைத்திருமை அரை அவுன்சு தேனிற்சேர்த்து வாயிற்பூசவும். 24-ம் அல்லது 28-ம் இலக்க அவுஷதமும் இந்நோய்க்குக்

..கலாம். அல்லது 29-ம் 30-ம் 31-ம் இலக்கக் குடிநீரி ல் ஏதுமொன்றைக் கொடுக்கலாம், பால் கஞ்சிவகை கொடுக் கவும்.

---

## வலி. Convulsion.

பல் முளைக்கும்பொழுதும் அசீரணம், மலக்கட்டு, கிருமி முதலிய காரணத்தாலும் இந்நோயுண்டாகும். சிலவேளை காய் ச்சல் முதலிய வேறுநோய்களுண்டாகிறபோதும், கரப்பன் சடு தியில் மாறினாலும், தலையிலேதும் விழுந்தாலும் இந்நோயுண் டாகும்.

பெரும்பாலும் வலிதொடங்க இரண்டொருநாளைக்குமுன் பிள்ளை நித்திரையில் ஆறுதலற்று அரைக்கண் மூடியிருக்கும். முகத்தைச்சுழித்துப் பல் நரும்பும். திடுக்கிட்டெழும்பும். இ வ்வியாதி உண்டாகும்போது கைவிரல்கள் பொத்தப்பட்டிருக் கும். முகம்வெளிறும். பல்நரும்புதலும் வாக்குக்கண்போன்ற பார்வையும் இருக்கும். ஏதுமொரு அவையவத்தின் தசை துடி க்கும். உதட்டில் நுரையிருக்கும். வெயர்க்கும். சுவாசம் சொ ற்ப அளவுக்குத் தடைப்படும். நாக்கு நீண்டிருக்கும். வலியா றியபின் சுவாசம் லேசாய்ப் பிள்ளை அழுது நித்திரைகொள்ளு ம். ஒருமுறை வலிவந்து நின்றுவிடும். அல்லது மேன்மேலு முண்டாகும்.

### பரிகாரம்.

உடுப்பு முதலியவற்றை நுகைத்து நற்காற்றிற் கிடத்தவும். முரசுசிவந்து வீங்கியிருந்தால் பேனைக்கத்தியால் கிறிவிடவும். இரண்டு அல்லது மூன்றுகிறேன் கலமல்கொடுத்து ருவாப்புக்க ளைவை அல்லது ஆமணக்கெண்ணெய்கொடுக்கவும். பிள்ளையைச் சுடுதண்ணீரில் கொஞ்சநேரம் அரைமட்டும் இருத்துவது நல் லது. தாக்கக்குணமிருந்தால் தலைக்குக் குளிர்ந்ததண்ணீர் அ ல்லது வின்னூரியுந் தண்ணீரும் இடவும். மலமிளகத் தாமதமா யிருந்தால் சொற்ப சவுக்காரத்தைச் சுடுதண்ணீரிற் கரைத்து ஆமணக்கெண்ணெய்சேர்த்து அல்லது சேராதபடி பீர்ச்சாங்கு ழலால் அபானத்துட் செலுத்தவும். முள்ளெலும்பு நீட்டிலும் உள்ளங்கால்களிலும் கொஞ்சநேரத்துக்குக் கடுகுப்பற்றுப்போ டுவது நல்லது. வலி பேருணவினால் அல்லது அசீரணத்தினா லுண்டானால் இபிகாக்குவைனை (Wine of Ipecac) சத்திக்க க் கொடுக்கலாம்,

வலி திரும்பவும்வந்தால் கயைலே ஒருகிறேன் பிரமாணமாக இரண்டுமணித்தியாலத்துக் கொருமுறையாக 2 முறைகொடுத்து ருவாப்புக்கலவையை வயிற்றுமேல் நல்லாய்ப் போகும்வரையுங் கொடுத்துவரவும், வலி மாறியபின்னும் ருவாப்புக்கலவையை ஒவ்வொருநேரமுங் கொடுத்து மலசுத்திசெய்யவேண்டும். இரவில் இரண்டு மூன்று நாளைக்குச் சொற்பபிரமாணமாய்க் கலமல் கொடுப்பது நல்லது. வெந்நீரிற் குளிக்கவார்க்கவும்.

## விக்கல். Hiccough.

இது சமியாத சாப்பாட்டினு லுண்டாகும்.

பரிகாரம்.

நாலு அல்லது ஐந்துகிறேன் சோடாவை அல்லது மக்னீசியா காபொனசை (Carbonate of Magnesia) குளிர்ந்த தண்ணீரிற் கரைத்துக்கொடுக்கவும். இதிற் சகாயங்காணுவிட்டால் 4-ம் அல்லது 7-ம் இலக்க அவுஷதக்கொடுக்கவும், விக்கல்கடுமையானுல் நெஞ்சாங்குழிக்குக் கடுகுப்பற்றும்போடவும் கடுகுரோகணியுந் திற்பலியுந் தூள்செய்து வகைக்குக் கிறேன் இரண்டு தேனிற் கொடுக்கவும்.

சாப்பிட்டவுடன் விக்கலெடுத்தால் ஒருதுண்டு அப்பத்தை அல்லது வெள்ளைச்சீனியை விழுங்கக்கொடுக்கலாம்.

## சோகித்தல். Fainting.

பயம் துக்கம் முதலிய மனச்சஞ்சலத்தாலும் காய்கையான அசுத்த பரமாணுவைச் சுவாசிப்பதினுலும் இந்நோயுண்டாகும்.

பரிகாரம்:

நோயாளியின் தலை பணியத்தக்கதாக க் கிடத்திச் சுத்தக்காற்றுப்படவிடவும். குளிர்ந்த தண்ணீரை முகத்திலெறியவும். அமோனியாவை மணக்கக்கொடுக்கலாம். சொற்ப பிரண்டியுந் தண்ணீரும் அல்லது 7-ம் இலக்க அவுஷதங் கொடுக்கவும்.

## குடற்கிருமி. Worms.

நாக்குளிப்பாம்புபோல நாலு இஞ்சநீளக்கம் ஒரு அடிவரைக்கும் நீளமுள்ளதாயிருக்கும். இன்னொருவகை கடைக்குட

வியுண்டாகிறது. நூலைப்போல ஏறக்குறைய ஒருஇஞ்சு நீளமுள்ளதாயிருக்கும். இசைப்பாம்பு வளர்ந்தவர்களிலும் குழந்தைகளிலேயே மிகுதி.

கிருமி இருப்பவர்களுக்கு முகம் வெளுக்கும். அன்னம் வெறுக்கும். வயிற்றுப்பொருமலும் வயிற்றுவலியும் இடையிடையேயிருக்கும், ஓங்காளமிருக்கும். நாசியிலும் அபானத்திலும் அரிப்பும் தூக்கக்குணமுமுண்டாகும். பிள்ளை நித்திரையிலிருந்து திடுக்கிட்டெழும்பும். வயிறுதிரண்டு கல்லுப்போலிருக்கும். நித்திரையிற் பல் நருமுதல் இருக்கும். சிலவேளை கழிச்சல் அல்லது வலியுண்டாகும்.

பரிகாரம்.

சந்தூனின் தூளாகிய 14-ம்இலக்க அவுஷதங்கொடுத்து ஆமணக்கெண்ணெய் மறுநாட்காலமே கொடுக்கவும். மாதுளம் வேரைத் தண்ணீரிலவித்துக்கொடுத்து அடுத்தநாட்காலமே ஆமணக்கெண்ணெய் கொடுப்பதினாலும் கிருமிவிழும். திரும்பக் கிருமியுண்டாகாதபடிக்குஞ் சரீரந்தேறவும் 18-ம் இலக்க அவுஷதங் கொடுக்கவும்.

---

## தலையிடி. Headache.

பலகாரணங்களைப் பற்றியும் பல வியாதிகளின் குணங்களிலொன்றாயுமிருக்கும். ஒருபிள்ளை தலையிடிக்கிறது என்றுசொன்னால் அற்பமாயெண்ணப்படாது. அவ்வேளையில் முழுகக் குளிக்க விடப்படாது.

பரிகாரம்.

மலமிறுகிப் போனால் ருவாட்புக்கலவை கொடுக்கவும். பிள்ளைக்குத் தலையிடியுடன் உஷ்ட்டிப்பிருந்தால் 4 அல்லது 5 கிறேன் சோடாவைத் தண்ணீரிற் கரைத்துக்கொடுக்கவும். அல்லது 13-ம் இலக்க அவுஷதங்கொடுக்கவும். நெற்றிக்கு வினாரியுந் தண்ணீருங் கலந்து போடுவது நல்லது.

கடுமையான தலையிடிக்குக் காலைச் சுடுதண்ணீருக்குள் கொஞ்சநேரம் வைக்கலாம். கடுகுப்பற்றைக் கழுத்தின் பிற்பகுதிக்கிடவும். தடிமனைப்பற்றித் தலையிடியிருந்தால் நெற்றிக்குச் சுடுதண்ணீர்ச் சீலைபிடித்துச் சூடான தண்ணீரிற் காலைக் கழுவவும்.

---

## தனிச்சுரம். Simple Fever.

குளிரில் அகப்படுவதினாலும் சமியாத சாப்பாட்டினாலும் பல்முளைக்கும் அழற்சியினாலும் பெரும்பாலும் இச்சுரமுண்டாகும். துவக்கத்தில் சரியான பராபரிப்புநடந்தால் சுறுக்கில் காய்ச்சல் தணியும். தேகத்தில் சூடும் நாவில் வெள்ளாடையும் பிடித்திருக்கும். இக்குணங்கள் பின்னேரமதிகப்பட்டு முன்னேரந் தணியும். சிறுபிள்ளைகள் நித்திரையிற் பேசி வாய்பிதற்றுவார்கள். இதைக்கண்டு பெற்றோர் பயப்பட்டுத் திகிலடைவார்கள். வின்னாரியுந் தண்ணீருங்கலந்து தலைக்குப்போட்டால் இக்குணஞ் சுறுக்கிற் றணியும்.

### பரிகாரம்.

துவக்கத்தில் கலமல்கொடுத்து ரூவாப்புக்கலவை அல்லது ஆமணக்கெண்ணெய் கொடுக்கவும். தலை சூடாயிருந்தால் வின்னாரியுந் தண்ணீருங்கலந்து போடவும். லேசானவகைக்கு இது போதும். தேகஞ் சூடாயிருந்தால் 10-ம் இலக்க அவுஷதங் கொடுக்கவும். வெயர்வைகொண்டு சூடுதணிந்தபின் 5-ம் இலக்க அவுஷதங்கொடுக்கவும். பல் முளைப்பதற்கு முரசு வீங்கியிருந்தால் அதைக் கீறிவிடவும். கஞ்சி பால் முதலிய மெல்லிய தீன் கொடுக்கலாம்.

---

## முறைக்காய்ச்சல். Ague.

இது துவங்கும்போது தலையிடியிருக்கும். கை கால் குளிரும். நடுக்கமுண்டாகும் கொஞ்சவேளையாற் சரீரஞ் சூடாய்விடும். தாகமிருக்கும். பின்பு வெயர்வைகொண்டுகாய்ச்சல்விடும்.

### பரிகாரம்.

கலமல் ஒருகிரேறன் கொடுத்து ரூவாட்புச்கலவை அல்லது உப்புக்கலவைகொடுத்து மலசுத்திசெய்யவும். குளிருடன் நடுங்கும்போது சூடான கஞ்சி, தேய்த்தண்ணீர் கொடுத்துச் சரீரத்தைக் கம்பளியாற் போர்த்துவிடவும். சூடு துவங்கியபின் கம்பளியை எடுக்கவும். தாகத்துக்கு 8-ம் இலக்க அவுஷதங்கொடுக்கலாம். வெயர்த்துக் காய்ச்சல் தணியும்படி 10-ம் இலக்க அவுஷதங்கொடுக்கவும்.

இந்நோய்க்குக் கோவ்வங்காய்க் கோரோசனைக்குளிசையுங் கொடுக்கலாம்.

நாட்பட்ட சுரத்துக்கு 20-ம் இலக்க அவுஷதங் கொடுக்கவும்.

---

## விடாச்சுரம். Remittent Fever.

இது மலக்கட்டாலாவது குடலழற்சியாலாவது உண்டாகும். வெய்யில் அல்லது குளிர்படுதலும் இது உண்டாக ஏதுவாகிறது.

காலையில் ஆயாசமுங் கூதலுமுண்டாகிச் சொற்ப காய்ச்சலிருக்கும். சாயந்தரத்திற் காய்ச்சலதிகப்படும். இரவில் வெயர்க்கும். விடியவுங் காய்ச்சல் சொற்பமாய்த் தணியும். நோய் சற்று இலகுவாகில் சுரத்தினிடையாற்றி தெளிவாயிராது. மலவரட்சி அல்லது கழிச்சலிருக்கும். அதிற் சிலவேளை சீதஞ்சேர்ந்து புளிப்புமணங்கொள்ளும். மலம் வெண்மை கருமை பச்சையெனப் பலமாதிரியாய் மாறும். வயிறுபொருமும், சிலருக்கு வியாதிகெடுக்கும்.

நாவெடித்தல், செம்மண்ணிறமாய் மலங்கழிதல் அல்லது இரத்தமாய்க்கழிதல் முதலிய குணங்கள் குடலிற் புண் உண்டென்பதைக் காட்டும்.

மூடப், வாக்குக்கண், வலி, மூச்சுக்கெதி, கடுமையான வயிற்றுக்கழிச்சல், தலையில் அதிகருடு முதலியகுணங்கள் தோற்றுவது கட்டம்.

### பரிகாரம்.

ஒருகிரேன் கலமலும் ஒருகிரேன் ஜேம்ஸ் பவுடருங்கொடுத்து இரண்டுமணித்தியாலத்தால் ஆமணக்கெண்ணெய் அல்லது ரூவாப்புக்கலவை கொடுக்கவேண்டும். காய்ச்சல் தணியாவிட்டால் 8-ம் இலக்க அவுஷதங்கொடுக்கத் தாகத்தையுந்தணித்துக் காய்ச்சலையும் விடச்செய்யும். காய்ச்சல் தணிந்தவுடன் குயினயின் கலவை கொடுக்கவும். சத்தித்தால் பாலுடன் சுண்ணம்புத்தண்ணீராது சோடாவாவது கலந்துகொடுக்கவும். தாகத்துக்குப் போதிய குழிர்ந்த தண்ணீர் கொடுக்கவும். தேகம் குளிராயிருக்கும்வேளையிற் சுடுபால் கொடுக்கவும். அதிகம் பெலவீனமாயிருந்தால் காய்ச்சலில்லா நேரங்களில் காரசாரமற்ற சொற்ப விருத்துக்கொடுக்கவும். முரசு வீங்கியிருந்தால் பேனைக்கத்தியால் முரசைக் கீறிவிடவும். பால் சவ்வரிசி நெல்லரிசிக் கஞ்சி கொடுக்கவும். இரைப்பையில் அளவுக்குமிஞ்சிய தீனை ஏற்றப்படாது. கிருமி வயிற்றிலேபோனல் சந்தனின் தூள்

கொடுக்கவும். இருக்கிற குணங்களுக்குத்தக்கதாய்ப் பரிகரிப்புச் செய்யவும். இந்நோய்க்கு 22-ம் அல்லது 27-ம் இலக்க அவுஷதமுங் கொடுக்கலாம்.

---

## வாதசுரம். Rheumatic Fever.

காய்ச்சலிருக்கும். சலங் சோதித்துச் சிவந்துபோகும். பொருத்துக்களில் கடும் உவாதியும் வீக்கமுமிருக்கும். சொற்ப அசைவுதானும் நோவை யதிகரிக்கப்பண்ணும். ஒரு பொருத்திலிருந்து வேறொரு பொருத்துக்கு இவ்வியாதி தாவும்.

குளிர்படுதல் வெயர்வை சடுதியில் தடைபடல் இவ்வியாதிக்குக் காரணமாயிருக்கும்.

### பரிகாரம்.

ஆறுதலாயிருந்து நோவுள்ள இடத்துக்கு வக்கம்பிடிக்கவும். ரூவாட்புக்கலவைகொடுத்துத் திரும்ப 8-ம் இலக்க அவுஷதங்கொடுக்கவும்.

மாதுளம்பழம் தோடம்பழம் கொடுப்பது நல்லது. எலுமிச்சம்பழச்சாறும் சீனியும் தண்ணீருங்கலந்து குடிக்கலாம். வெந்நீரால் உடம்பைத் துடைக்கவும். கஞ்சி பால் முதலிய மெல்லிய தீன் கொடுக்கவும்.

---

## வாதம். Rheumatism.

காய்ச்சலிராது. நோ சொற்பமாயிருக்கும். பொருத்துக்களிலும்பார்க்க நோ தசைகளில் மிகுதிபற்றியுண்டாகும். வெயர்வை சடுதியிற் தடைபடுதலும் குளிர்படுதலுமே இந்நோய்க் காரணமாகும்.

### பரிகாரம்.

பிள்ளை சரீரத்திஞேர்பகுதியில் நோவென்றுசொன்னால் சவுக்காரத் தைலம் (Soap Liniment) பூசி வாதமடக்கி, பாவட்டை, இலுப்பை இவைகளின் இலைகளைச் சரிசமனெடுத்துத் துவைத்துச் சீலையிற் பொட்டளிகட்டிச் சூடுகாட்டி வக்கம்பிடித்துக் கம்பளிச்சீலையால் மூடிவிடவும். அல்லது தர்ப்பந்தீன் (Turpentine) அரை அவுன்சு, கற்பூரம் இரண்டுதிறும், இலுப்பெண்ணெய் இரண்டவுன்சு கலந்து பூசுவது நல்லது.

---

## சோர்வாதம். Faralysis.

பிள்ளைகளுக்குப் பெரும்பாலும் இந்நோய் ஆறுமாசந்தொடங்கி மூன்றுவயதுக்கிடையிற் சடுதியிலுண்டாகும். சிலவேளை சொற்ப காய்ச்சலுடனும் வலியுடனும் உண்டாகும்.

பல்முளைக்கும் அழற்சியினாலும் நெடுநாட்பட்ட மலக்கட்டினாலும் பெலவீனத்தாலும் அல்லது குளிர்படுவதாலும் இந்நோயுண்டாகும்.

சிலருக்கு ஒரு கை அல்லது ஒரு கால் அல்லது இருகால்களுஞ் சோர்வுண்டாகும்.

பரிகாரம்.

12-ம் இலக்க அவுஷதத்தை ஆறுநாள் 12 நேரங்கொடுத்துத் திரும்ப 13-ம் இலக்க அவுஷதத்தைக் காலமேயும் சாயங்காலமுங்கொடுத்து மத்தியானவேளையில் பதாசிய வியோதிரம் (Iodide of Potassium) அரைக்கிறேனை ஒரு தேய்க்கரண்டியளவு தண்ணீரிற்கரைத்துச் சொற்ப சீனியுஞ்சேர்த்துக் கொடுத்துவரவும். சோர்ந்த உறுப்புக்கு அமோனதைலம் பூசவும்.

---

## கரப்பன்வகை. Eczema &c.

கடுமையான சொறிவிருக்கும். சொறிவதில் தோல் எடுபட்டுச் சிவந்து வீங்கும்.

பெலவீனம், பல்முளைத்தல், அசீரணம் முதலிய காரணத்தைப்பற்றி உண்டாகக்கூடும். கரப்பனைச் சடுதியில் மாற்றக்கூடாது.

பரிகாரம்.

13-ம் அல்லது 42-ம் இலக்க அவுஷதங்கொடுக்கவும். ஒக்சயிற் ஒவ் சிங்கு (Oxide of Zinc) 30 கிறேனை ஒரு அவுன்சு பசுவெண்ணெயிற்கலந்து கரப்பனுக்குப்போடவும். கரப்பன் வெகுநாட்பட்டு ஈரலிப்பாயிருந்தால் ஒக்சயிற் ஒவ் சிங்கு ஒரு பங்குடன் அறேற்றுமா ஆறுபங்கைக் கலந்துபோடவும்.

செங்கரப்பன் கருங்கரப்பன் முதலிய பலவகையான கிரந்திக் கரப்பன்களுக்கு ரூவாப்புக்கலவை அல்லது 38-ம் இலக்க அவுஷதத்தைக் கொடுக்கலாம்.

அக்கிக்கு, பின்வரும் மருந்துகளிலொன்றைப் பூசலா ம். மேலேசொல்லியபடி ஒக்சயிற் ஒவ் சிங்கைப் பச்சைவெண் ணெயிற் கலந்து பூசலாம்.

படுவானிலேயும் பச்சைவெண்ணெயுமரைத்தாவது காவிம ண்ணைத் தண்ணீரிற்குழைத்தாவது பூசவும்.

எலும்புசுட்ட சாம்பலை அல்லது செருப்புத்தோல்சுட்ட சாம்பலைப் பச்சைவெண்ணெயிற் கலந்துபூசலாம். எல்லாவகை க் கரப்பன் முதலியவைகளுக்கும் காரசாரமற்ற தீன்கொடுத்து வெந்நீரிற் குளிக்கவார்க்கவும்.

---

## கொள்ளிக்கரப்பன். Nettlerash.

பிள்ளைகளுக்கு இது பெரும்பாலும் உண்டாகும். துண்டு துண்டாய்த் தடித்துச் சரீரத்திற்தோற்றிச் சடுதியில்மாறி உட னே திரும்பவும் உண்டுபடும் இது தோற்றத்திலுங் கடுமையா ன சொறிவிலும் காஞ்சொறி பட்டாற்போலவிருக்கும்.

பரிகாரம்.

ரூவாப்புக்கலவை அல்லது உப்புக்கலவை கொடுத்து மல சுத்தியாக்கியபின் 12-ம் இலக்க அவுஷதத்தை மூன்றுநாள் ஆ றுநேரங்கொடுக்கவும். திரும்பக் கொஞ்சநாளைக்கு 13-ம் இல க்க அவுஷதங் கொடுத்துவரவும். காரசாரமற்ற உணவுகொடு த்து வெந்நீரிற் குளிக்கவும்.

---

## சிரங்கு. Itch.

தொற்றினாலும் அசுத்தத்தினாலும் இது பெரும்பாலுமு ண்டாகும். மிகுதியாய்க் கைவிரல்களுக்கிடையிலும் பொருத் தின் மடக்குகளிலுமுண்டுபடும். சிலருக்குத் தேகமுழுதுமுண் டாகி அதிகசொறிவிருக்கும்.

பரிகாரம்.

நோய்கண்டவுடன் விரேசனம்பண்ணி 13-ம் இலக்க அவு ஷதங்கொடுத்து வரவும். சிரங்குள்ள இடங்களைக் காபலிக் ச வுக்காரத்தாற்கழுவி (Carbolic Soap) கெந்தகத் தைலமாவது (Sulphur Ointment) கெந்தகத்தூளைப் பச்சைவெண்ணெயி ற் கலந்தாவது சரிபங்குபீருபல்சமும் (Balsum of Peru) கி ளிசரீனும் (Giycerine) சேர்த்தாவது பூசவும்.

சிரங்குப்பூச்சிகள் இரவில் வெளிகாருவதால் சாயந்தரம் மருந்தைப்பூசிக் காலமே சவுக்காரம் அல்லது அரப்பிட்டு வெந்நீரிற் குளிப்பது நல்லது.

---

## படர்தேமல். Ringworm

தோலில் வட்டிப்பாய்ச் சிறு பருக்களுண்டாகி உரிந்து அசறுகிச் செதிள்த்தன்மைபோலாகிப் பெருக்கும். இது தொற்றக்கூடியது.

பரிகாரம்.

இது சொற்பமாயிருந்தாற் காரக்கல்லாற் தோலைச்சுற்றித் தடவவும். அல்லது ஒக்சயிற் ஒவ்சிங்குத்தைலம்பூசலாம். (Oxid of Zinc Ointment) வளர்ந்தபிள்ளைகளுக்குக் கிறிசவனிக்கமிலம் (Chry sophanic acid) 5 கிறேனை அரை அவுன்சு பசு வெண்ணெயிற்சேர்த்துப் பூசவும். தகரைக்கொட்டையை அல்லது புரசம்விரையை எலுமிச்சம்புளியிலரைத்தாவது கலைமான்கொம்பை அல்லது மாசிக்காயைக் காடியிலரைத்தாவது பூசலாம்.

கிருமிசத்துரு, ஆவரசமல்லி, எலுமிச்சம்புளி சீரகம் சமனளவெடுத்து அரைத்துத் தேமலுக்குப் பூசலாம்.

---

## கூகைக்கட்டு. Mumps.

சொற்பமாய்க் காய்ச்சல்கண்டு பிற்பாடு காதடியிலதைப்பும் அலகை ஆட்ட நோவும் உண்டாகும். வீக்கம் படிப்படியாய்ப் பரக்கும். நாலாம்நாளில் அமரத்துவங்கும். இந்நோய் பெரும்பாலும் ஒருபக்கத்தில்வரும். பிற்பாடு மற்றதில்தாவும். இது தொற்றுநோய்.

பரிகாரம்.

வெந்நீர்ச்சீலை முதலிய வக்கம்பிடித்துக் கம்பளியால் அப்பகுதியை மூடிவிடவும். காரசாரமற்ற உணவுகொடுக்கவும். உப்புக்கலவைகொடுத்து விரேசனம்பண்ணவும். ஐந்து ஆறு நாட்சென்று வீக்கமிருந்தால் அமோன தைலம்பூசிக் கம்பளியால் மூடவும்.

---

## சின்னமுத்து. Measles.

இதில் முதற்குணங்கள் சலதோஷம்போல இருக்கும். இருமலும் தும்மலும் சுரத்தின் பொதுக்குணங்களு மிருக்கும். மிகுதியாய் நாலாம்நாளில் தெள்ளுக்கடிபோன்ற வட்டித்த நுண்ணிய சிவத்தப் புள்ளிகள் முதல் முகத்திலும், கழுத்திலுங் கைகளிலும் திரும்பச் சரீரத்திலும் மற்றப்பகுதிகளிலும் உண்டாகும். பருக்கள் கூட்டங்களாயிருக்கும். இது உண்டான ஒழுங்கின்படியே மேலேநின்று கீழேவர வடியத்தொடங்கி நிறம் மிகுதியாய் 6-ம் 7-ம் நாளில் மங்கும். திரும்ப அசறுய்ச் சொரியும்.

### பரிகாரம்.

9-ம் இலக்க அவுஷதங்கொடுக்கவும். பால் கஞ்சி முதலிய குளிர்மையான தீன் கொடுக்கவும். சடுதியிற் பருக்கள் தோற்றுமற்போனால் சுடுதண்ணீரிற் குளிக்கவார்த்து மெல்லியவிரேசனம் இடைக்கிடை கொடுக்கவும். கண்சிவந்து வருத்தமானால் ஒருகிறேன் சிங்குசல்வசை (Sulphate of Zinc) ஒருஅவுன்சு தண்ணீரிற்கரைத்துக் கண்ணுக்கிடவும்.

---

## கொப்புளிப்பான். Chickenpox.

இது சொற்ப காய்ச்சலுடன் துவங்கி ஒருநாளைக்குநின்று பின் வைசூரிப் பருக்களைப்போன்ற நுண்ணிய சிவத்தப்பருக்கள் முதன்முதல் முதுகிற்போடும். இரண்டாம்நாள் தெளிந்த நீர்கொண்டு சிறு கொப்புளமாகும், மூன்றும்நாளிற் கொப்புளங்கள் பழுத்துத் தகர்ந்து நீர்பாய்ந்து சுருங்கி அசறுபிடிக்கும். சீள்கொள்ளாது. ஐந்தாம்நாளுச்சுருப்பின் கொப்புளங்கள் மடிந்துபோம். நிலையான தழும்பு இராது.

### பரிகாரம்.

உப்புச்கலவை அல்லது 9-ம் இலக்க அவுஷதங்கொடுத்து மலசுத்திபண்ணிக்கொள்ளவேண்டும். குளிர்காற்றுப் படாமல் பாதுகாத்துக்கொள்ளவும். பசுப்பால் கஞ்சி முதலிய மெல்லிய தீன் கொடுக்கவும். வெந்நீரிற் குளிக்கவேண்டும்.

---

## வைசூரி. [அம்மை] Smallpox.

காய்ச்சல், சத்தி, கடுமையான சரீரஉழைவு இருக்கும். இச்குணமுண்டாகி இரண்டுநாளாற் சிறு சிவத்தப்பருக்கள் முகத்திலும் நெஞ்சிலுந்தோற்றும். கடைசியிற்காலிலுண்டாகும்.

அது வரவரப் பருத்து மெல்லிய தெளிந்த நீர் உள்ளேயிருக்கும். நாலாம்நாளிற் பருக்கள்மத்தியிற் குழிவிழுந்து இருக்கும். எட்டாம்நாளிற்காய்ந்து பதினாறும்நாளில் அசறுப்விழும்.

தொற்றும் பால்கட்டுப்படாமலிருத்தலும் இவ்வியாதிக்குக் காரணமாயிருக்கிறது.

பரிகாரம்.

9-ம் இலக்க அவுஷதங்கொடுக்கக் காய்ச்சல் தணிந்து கடுமைப்படுத்தாது. பருப்போட்டாலும் மிகச் சொற்பமாயிருக்கும். தலையிடி கடுமையானால் வின்னாரியுந் தண்ணீருங் கலந்து தலைக்குப்போடவும். பால் கஞ்சி முதலிய மெல்லிய தீன் கொடுக்கவும்.

மயிரை வெட்டிப்போடவும். கொப்புளங்கள் அதிகப்பட்டு விறுவிறுப்பாயிருப்பாயிருந்தால் தண்ணீர்ச்சீலையிடவும். கிடைப்புண் வாராதபடி கவனமாய்ப்பார்க்கவும். கிடைப்புண் வரத்தக்க மாதிரியிருந்தால் அவ்விடத்துக்குக் கோழிமுட்டை வெண்கருவும் பிரண்டியுஞ்சேர்த்துப் பூசவும். வைசூரிப் புண்கள் மாறாமலிருந்தால் காபலிக்கமிலம் (Carbolic acid) அரைத்திருமை எட்டு அவுன்சு ஒலிவெண்ணெய் அல்லது தேங்காயெண்ணெயுடன் கலந்துபோடவும்.

---

## கொப்புளிப்பானுக்கும் அம்மைக்குமுரிய வித்தியாசங்கள்.

| கொப்புளிப்பான் | வைசூரி |
|---|---|
| காய்ச்சல்--மிகச்சொற்பமாயிருக்கும். | கடுமையாயிருக்கும். |
| பருக்கள்—மார்பிலும் முதுகிலும் உண்டுபடும். | முகத்திலும் சரீரத்தின் மற்றப்பகுதிகளிலும் உண்டுபடும். |
| கொப்புளங்கள்—காய்ச்சலுண்டாகி 6 மணிதொடங்கி 12 மணித்தியாலத்துக்குள் உண்டாகும். | 2 அல்லது 3 நாளைக்குள் உண்டாகும். |
| கொப்புளத்தின்நடுவிற் பதிவிராது. | கொப்புளத்தின்நடுவிற் பதிவிருக்கும். |
| சிதலாய்மாறுவதில்லை. | சிதலாய்மாறும். |
| 3-ம் அல்லது 4-ம் நாளில் தகரும். | 8-ம் அல்லது 9-ம் நாளில் தகரும். |
| மணம்— விசேஷ மணமில்லை. | அதற்குரிய மணமிருக்கும். |
| தழும்பு—நிலையான தழும்பு இராது. | தழும்பிருக்கும். |

## வீக்கம். Dropsy.

பெரும்பாலும் முறைக்காய்ச்சல்வந்தபின் அல்லது வயிற்றுக்கழிச்சல்வந்தபின் உண்டாகும். மிகுதியாய் வறியசனங்களுக்கே இவ்வியாதி உண்டாகிறது. முகம் வெளிறிக் கண்ணிமையும் வயிறும் அவையவங்களும் வீங்கி இரத்தாசயத்துடிப்பு முதலிய குணங்களிருக்கும்.

### பரிகாரம்.

அயக்சலவை கொடுக்கவும். சல மலம்போக 9-ம் இலக்க அவுஷதங்கொடுக்கவும். அல்லது 35-ம் இலக்க அவுஷதங்கொடுக்கலாம். வயிற்றிற் கிருமியிருந்தால் சந்துனின்தூள் கொடுக்கவும். வெந்நீரிற் குளிக்கவார்க்கவும். மெல்லிய போஷணையுள்ள சாப்பாடுகொடுக்கவும். சுரைக்காய் அறைக்கீரை அவித்துக் கொடுத்தால் சலம் நல்லாய்ப்போகும்.

---

## கணை. Rickets.

இவ்வியாதி உள்ளவர்களில் சரீர வளர்ச்சிகுறைந்து எலும்பு வளையத்தக்கதாய்வரும். தலை பெருத்திருக்கும். மார்பு ஒடுங்கியிருக்கும். முள்ளந்தண்டும் அவயவங்களும் வளைந்திருக்கும். கை கால் பொருத்துக்கள் பருத்திருக்கும். முகம் வெளிறித் தேகம் மெலிந்திருக்கும். பற்கள் தாமதமாய் முளைத்துச் சுளுக்கில் உக்கி ஆலையக்கூடும்.

பெற்றோருடைய பெலவீனமும் போஷணைக்குறைவும் இவ்வியாதிக்குக் காரணமாயிருக்கிறது.

### பரிகாரம்.

தாய் மெலிந்த ஆளாயிருந்தால் உடன் கறந்த பசுப்பாலைப் பிள்ளைக்குக் கொடுத்துவரவும். நல்லபோஷணையான சாப்பாடு, பால், அரையவியற் கோழிமுட்டை, மீனெண்ணெய் முதலியன கொடுக்கவும். அப்பியாசஞ்செய்விக்கவேணும். இவ்வியாதி உள்ளவர்களின் எலும்பில் சுண்ணாம்பு குறைவாயிருப்பதால் பசுப்பாலுடன் சுண்ணாம்புநீர் கொஞ்சங்கலந்து கொடுத்துவரவும்.

---

## காமாலை. Anemia.

முகம், மேனி, உதடு, முரசு என்பவைகள் வெளிறிச் செவ்விரத்தங் குறைவாயிருக்கும். நெஞ்சிடிப்பும் முட்டுத்தொய்வும் உண்டாகும்.

பரிகாரம்.

அயக்கலவை அல்லது 18-ம் இலக்க அவுஷதங் கொடுக்கவும். போஷணையான உணவு கொடுக்கவேண்டும்.

இவ்வியாதிக்காரரில் இரசஞ்சேர்ந்த மருந்துகள் கெதியாய் வாயிற்கேட்டு இரத்தஞ் சீராய்வருவதைத் தடுக்கக்கூடியதால் அம்மருந்தை இவ்வியாதிக்காரருக்குக் கொடுப்பதில் சாவதானமாயிருக்கவேண்டும்.

---

## காய்ச்சற்கட்டி. Enlargement of spleen. (Ague cake)

முறைக்காய்ச்சல் வழக்கமாயுண்டாவதினால் கட்டியதிகமாய்ப் பருத்து நோகும். மூட்டுத்தொய்வும் முகம்வெளிறலும் சரீரமெலிவும் உண்டாகும். காய்ச்சல் இடைக்கிடை காயும்.

பரிகாரம்.

பதாசிய வியோதிரம் (Indide of Potassium) அரைக்கிறேனைச் சின்கனாப்பட்டை (Cinchona bark) அவித்த தண்ணீர் அரை அவுன்சுடன் சேர்த்து நாள் இரண்டுமுறை கொடுத்துவரவும்.

---

## வெள்ளைபடுதல். Whites.

மெலிந்த பெண்பிள்ளைகளிற் பிரதானமாய் வெளிறின மெல்லிய கணையுள்ளவர்களுக்குத் தயிரைப்போன்ற நிறமான நீர் யோனியிலிருந்து வடியும்.

பரிகாரம்.

அயக்கலவையும் போஷணையுள்ள சாப்பாடுங்கொடுத்துக் குளிர்ந்த தண்ணீரில் குளித்து அப்பியாசஞ் செய்துவரும்படி கற்பிக்கவும்.

---

## கண்ணோய். Sore eyes. (Opthalmia)

கண்ணின் வெள்ளைமுழி சிவந்து சொற்பமாய் நீர்வடியும். திரும்பக் கண்ணில் அதிக பீளைசாறிப் பீடிக்கும். பிள்ளை பேசக்கூடுமானால் கண்ணில் மண் உருட்டுவதுபோன்ற உணர்ச்சி இருக்குதென்று சொல்லும்.

குளிரினாலுந் தொற்றினாலும் இவ்வியாதி உண்டாகும்.

பரிகாரம்.

இரண்டுமணித்தியாலத்துக்கொருமுறை சீனக்காரம் அல்லது துத்தசல்வசு (Sulphate of Zinc) ஒவ்வொரு கிறேனை ஒவ்வொருஅவுன்சு தண்ணீரிற்கலந்து கண்ணைக் கழுவிவரவும். கண்ணுக்குள் இரண்டொருசொட்டுப் படும்படிவிடவும் இடை நேரங்களில் அடிக்கடி தண்ணீரினாற் கண்ணைக் கழுவவும். இரவில் கண்ணிமை ஒட்டாதபடி ஆமணக்கெண்ணெய் தடவவும்.

ரூவாப்புக்கலவை நாள் ஒருமுறை அல்லது இரண்டுமுறை கொஞ்சநாளைக்குக் கொடுக்கவும்.

## குழந்தையின் சீழ்க்கண்ணோய்.

## Purulent Opthalmy of Children.

வேறொரு கடுமையான கண்ணோய் பிள்ளைபிறந்து இரண்டாம்நாள் தவங்கி ஏழாம்நாள்வரையிலு முண்டாகும்.

கண்ணிலிருந்து மஞ்சள் வெண்மை நிறமுள்ள பீளை அதிகமாய்வந்து சிலவேளை கறுத்தவிழியிலுந் தாக்கிக் கண்கெட ஏதுவாகிறது.

பரிகாரம்.

கண்ணிற் பீளை சாறினவுடனே இடைவிடாமற் துடைக்க வேண்டும். வடிகிற சீழை இடைவிடாமல் இளஞ்சூடான சலத்தினாற் கழுவவும். இவ்வடிகிற சீழ குருடு உண்டாவதற்குக் காரணமாயிருக்கும். துப்புரவாயிருக்கிறதில் சாவதானமாயிருந்தால் கட்பார்வையைப் பழுதுபடாமற் காக்கலாம். ஒருதரம் பாவித்த சீலைத்துணியை மறுதரம் பாவிக்கப்படாது. அவைகளை எரித்துப்போடவும். கண்களைத் துப்புரவாகக் கழுவினவுடனே திரும்ப ஒட்டிக்கொள்ளாதபடி சுத்தமான பன்றிக்கொழுப்பையாவது பச்சைவெண்ணெயையாவது ஒலிவ் எண்ணெயையாவது கண்மடலி னோரத்திற் பூசிவிடவும். மருந்துநீர் கண்ணுக்குள் விடுவதைப்பற்றிக் கவனமாயிருக்கவேண்டும். இரண்டு கிறேன் சீனக்காரத்தை ஒருஅவுன்சு தண்ணீரிற்கரைத்து இரண்டொரு சொட்டுக் கண்ணுக்குள் விடவும்.

குழந்தை பிறந்தவுடன் துப்புரவான மெல்லிய சீலைத்துண்டால் கண்மடல்களையுங் கண்களையுஞ் சுற்றிய பகுதிகளையுந் துடைத்துக் குளிர்காற்றுக் குழந்தைக்குப் படாதபடி காத்துக்கொள்ளவேண்டியது

## கட்டு. Boil.

இதற்குக் களிகட்டவும். மெதுமெதுப்பானவுடன் உடையாவிட்டால் வைத்தியனைக்கொண்டு கத்திவைப்பிக்கவும். மலசுத்தி குறைவாயிருந்தால் ரூவாப்புக்கலவை கொடுக்கவும். துவக்கத்தில் காய்ச்சலிருக்குமாகையால் மெல்லிய கஞ்சியும் பாலுங் கொடுப்பது நல்லது.

வெகுநாட்பட்ட அரணிப்பான கட்டுக்கு அயோடின்ரஞ்சத்தை (Tincture of Iodine) இரண்டு மூன்று நாளைக்குப் பூசவும். இதனாற் கட்டு அமராவிட்டால் திரும்பக் களி கட்டிவரவும். மெதுமெதுப்பானவுடன் கத்தியை வைப்பிக்கவும். நல்லிரத்தமுண்டாகிச் சரீரந் தேற அயக்கலவை கொடுக்கவும்.

## புண். Ulcer.

புண் உள்ள அவயவத்தை ஆறுதலாய் வைத்துக் களிகட்டவும். புண் துப்புரவாய்வந்தபின் காபலிக்கமில எண்ணெய் (Carbolic Oil) அல்லது கலமயின் சேர்வை (Calamine cerate) இடவும்.

## காதுக்குத்து. Earache.

இது சடுதியாய் அல்லது காதிலே கட்டுண்டாய் வரும். சிலவேளை பற்கொதியுடன் சம்பந்தப்பட்டிருக்கும். அவ்வேளையிற் பற்கொதியை முதல் மாற்றவேண்டும்.

குளிர்படுவதினாலும் காதுக்குள் அன்னியபொருள் இருப்பதினாலும் பல்மக்கலினாலும் பல்முளைக்கும்பொழுதும் உண்டாகும்.

### பரிகாரம்.

பீச்சாங்குழலைக்கொண்டு காதை வெந்நீராற்கழுவித் துடைத்தபின் லாடினமும் கிலிசரினுங் கலந்தாவது, சூடாக்கிய உள்ளிச்சாறாவது, கொஞ்சச் சாம்பிராணியும் எள்ளெண்ணெயுஞ் சேர்த்தாவது, புகையிலைச்சாறாவது மூன்று அல்லது நாலுசொட்டைக் காதுக்குள் விட்டுப் பஞ்சா லடைத்துவிடவும். லாடனமும் ஆமணக்கெண்ணெயுஞ்சேர்த்து ஓர் இலையில்விட்டு விளக்கிற் சூடுகாட்டிக் காதுக்குள்விடலாம். குத்துக் கடுமையானால் காதுக்குப்பின் கடுகுப்பற்று இடவும். காதடியில் வீக்கமிருந்தால் தவிட்டுப் பொட்டளிகட்டி வக்கம்பிடிக்கவும்.

## காதிலிருந்து நீர் அல்லது சீழ்வடிதல். Discharge from the Ear.

சிங்கு சல்வசு (Sulphate of Ziuc) ஒருகிறேன் அல்லது இரண்டுகிறேனை ஒருஅவுன்சு வெந்நீரிற்கரைத்துக் காதைக் கழுவிவரவும். ஈரத்தைத் துடைத்து கிலசரின் (Glycerine) அல்லது ஒலிவ் எண்ணெய் நாள் இரண்டுமுறை பஞ்சிற் தோய்த்துப் போடவும். இதில் மாருவிட்டால் ஒருதிரும் தேங்காய் எண்ணெய்க்கு மூன்றுசொட்டுக் காபலிக்கமிலம் (Carbolic Acid) அல்லது எட்டுக்கிறேன் பொருசிக்கமிலத்தை (Boracic Acid) கலந்து சொற்பமாய்ப் பஞ்சிற்தோய்த்திடவும். நாட்பட்டும் சீழ்வடிதல் மாருவிட்டால் காதைக் கழுவித் துடைத்தபின் ஒருதிரும் சாராயத்தில் மூன்றுகிறேன் பொருசிக் அமிலத்தைக் கலந்து மூன்றுசொட்டைக் காதுக்குள்விட்டு அடைக்கவும். இவ்விதமே இரண்டொருநாள் செய்யவும்.

## பற்கொதி. Toothache.

கற்பூரத்தையாவது கற்பூரமும் குலோறல் கைடிறேற்றையும் (Chloral Hydrate) சரிபங்கு சேர்த்தாவது, பிரண்டியுங் கறியுப்புங் கலந்தாவது சொற்பமாய்ப் பல்லுக்கிடவும். முதல் முளைத்த பல்லுச் சூத்தையரித்தால் வைத்தியனைக்கொண்டு பிடுங்குவிக்கவும். சூத்தைப்பல்லில் கடும் உவாதியாயிருந்தால் கிறியசற்று (Creasote) ஒருதுளி இடவும் சினக்காரத்தை மகிழம்பட்டையவித்த தண்ணீரிலாவது, பல்மாணிக்கம் வேரைத் தண்ணீரில் அவித்தாவது கொப்பளிக்கலாம்.

## பேன். Lice.

இது தலைமயிரில் மிகுதியாயுண்டுபடும். இரச அமோனக தயிலமாவது (Ointment of Ammoniated Mercury) இரசம் ஒருகளஞ்சை ஒருஅவுன்சு குப்பைமேனிச்சாறுவிட்டரைத்தாவது தலைமயிரிற்பூசி அரைப்பிட்டு அல்லது சவுக்காரமிட்டுத் தோயவும்.

## பூச்சிகள்குத்தல். Stings of Insects.

இவைகளினாலுண்டாகும் நோ சொற்பமாயிருக்கும். சில வேளை கடும்நோவுடன் அதிகமாய்வீங்கிக் கிறுதி முதலிய குணங்களுமுண்டு.

பரிகாரம்.

குளவி தேனிலையான் குத்தி ஏதுங்கழன்றிருந்தால் அதைச் சாவணத்தாலெடுத்து அமோன சுகந்த சுரை (Aromatic Spirit of Ammonia) யில் 4 சொட்டையாவது, கொஞ்சச் சூடான வின்னரியையாவது, இபிகாக்கைத் தண்ணீரிற்குழைத் தாவது, நாயுருவி இலையை அரைத்தாவது, பழப்புளியையுஞ் சுண்ணும்பையுந் தண்ணீரிற் குழைத்தாவது பூசலாம். வீக்கமிருந்தால் சவுக்காரதைலம் (Soap Liniment) பூசவும்.

மட்டைத்தேள் பூரான் குத்தினல் வாயால் உறிஞ்சி வெந்நீரால் அல்லது சுண்ணும்புத் தண்ணீராற் கழுவி அயோடின் ரஞ்சத்தை (Tincture of Iodine) பூசவும். அல்லது மேற்சொல்லிய மருந்துகளில் ஏதுமொன்றைப் பூசலாம். களையிருந்தாற் சொற்ப பிரண்டியைத் தண்ணீரிற்கலந்தாவது 7-ம் இலக்க அவுஷதமாவது இரண்டொருமுறை கொடுக்கவும்.

புலிமுகச்சிலந்திகடிக்கு: — மண்வெட்டியைச் சூடுகாட்டிப் பருத்தியிலைச் சாறுவிட்டுக் கொதிப்பித்தாவது, பழப்புளியையுஞ் சுண்ணும்பையுங் கலந்தாவது பூசலாம். தென்னமட்டைச்சாறு இரண்டொரு தேய்க்கரண்டியளவு பிரமாணமாய்க் குடிக்கக்கொடுக்கவும். அல்லது வட்டத்துத்தியிலையை இடித்து ஒரு மிளகளவெடுத்துச் சிறுபிள்ளைகளின் அமுரியிற் கலக்கி மூன்றுநேரங்கொடுக்கவும். வளர்ந்த பிள்ளைகளுக்குப் பிரமாணத்தைக் கூட்டிக்கொடுக்கவும்.

எலிவிஷத்துக்கு: — பலவனிலையை அரைத்துக் கடிவாயில்வைத்துச் சொற்பநேரத்தால் வெந்நீராற்கழுவவும். நன்னரிவேரை அரைத்துப் பசுப்பாலிற் கலக்கிக் கொடுக்கவும்.

காஞ்சொறியிலை சரீரத்திற்பட்டால் புகையிலையை ஊறவைத்துக் கழுவவும்.

---

## பாம்புகடி. Snake-bite.

தாமதியாமல் கடித்த இடத்துக்குமேலே இறுக்கிக்கட்டிக் கடிவாயைச் சிறுகத்தியால் நல்லாய்க்கீறி இரத்தம்பாயச்செய்து வெந்நீராற்கழுவி வாயால் உறிஞ்சவும். உறிஞ்சும் ஆளுடைய வாயிற் புண்ணில்லாதிருக்கவேண்டும், காரக்கல்லாற் காயத்தைத் தொடவும். தும்பைச்சாறும் நல்லெண்ணெயும் கொடுக்கவும்.

5

Dr. T. K. SIVAGNANAM
L. A. M. P. (Cey)
Kondavil West
KONDAVIL

நரிவெண்காயத்தைக் காடியிலுரைத்துப் பாம்பு கடித்த வாயிற் தடவவும். அல்லது ஆவுரிவேரைக் காடியிலரைத்துக் கடிவாயில் 2 அல்லது 3 நாள் கட்டவும். களையிருந்தாற் சொற்ப பிரண்டியுந் தண்ணீருங் கலந்தாவது 7-ம் இலக்க அவுஷதமாவது கொடுக்கவும். தண்ணீரைத் தொடர்பாய்ச் சற்றுநேரம் தலையில்வார்ப்பது உத்தமம்.

சுருட்டைப் பாம்புகடித்து வீங்கினல் குப்பைமேனியும் எலுமிச்சம்புளியும் அரைத்து மூன்றுநேரம் பூசவும்.

பாம்புகடித்த நேரந்தொடங்கி இருபத்துநாலு மணித்தியாலத்துக்கு ஆளை நித்திரைசெய்ய விடப்படாது.

## விசர் நாய்க்கடி. Bite ot mad dog.

கடித்தவுடனே காயத்துக்குமேலே இறுக்கிக்கட்டி வெந்நீரும் வின்னரியுங் கலந்து கழுவவும். நல்லாய்ப் புண்படத்தக்கதாகத் தொட்டுவிடவும். புண்ணைச் சுறுக்கில் ஆற்றுதபடி இடைக்கிடை காபலிக்கமிலத்தாற் தொட்டுப் பூமத்தங்களிகட்டவும். விசர்நாய் கடித்தவுடன் எருக்கலம்வேரைத் துருவி எருக்கலம்பாலிலரைத்து இரண்டுநாட் கட்டவும். காயத்தில் கெந்தகத்தைவைத்து எரிக்கலாம்.

விசரில்லாத நாய்கடிக்கு, இரசவாளைத்தண்டெடுத்துச் சுறண்டிக் கட்டவும். அல்லது பிரண்டையிலையை மஞ்சளுடனரைத்துக் கட்டவும்.

## தீச்சுட்டபுண். Burns and scalds,

பரிகாரம்.

நெருப்பு அல்லது வெந்நீர் முதலியவற்றால் வெந்தபுண்ணுக்குச் சுண்ணம்புத்தண்ணீருடன் தேங்காயெண்ணெய் அல்லது இலுப்பெண்ணெய் சரிபங்காய்க் கலந்துபோடவும். அல்லது வசிலையின் (Vaseline) போடவும். வேக்காடு சொற்பமானல் உடனே அரைஅவுன்சு சோடாணவ ஐந்துஅவுன்சு தண்ணீரிற்கரைத்துச் சீலையிற் தோய்த்துப் போடவும். விளாம்பிசினைக் கோழிமுட்டையின் வெண்கருவிற் குழைத்து நெருப்புச் சுட்ட புண்ணிற் பூசலாம். நல்லெண்ணெயிற் கறியுப்பைக்கரைத்து அதற்குள் ஓர் சீலைத்துண்டைப் போட்டுக் காய்ச்சி அதில் உப்புப் பிடித்தபின்பு எடுத்துத் தீச்சுட்ட இடத்தில் கட்டவும்.

## நசிவுசுழுக்கு. Bruises and sprain.

பரிகாரம்.

ஒருதிறும் ஆணிகரஞ்சத்தை (Tincture of Arnic) ஒன்றரை அவுன்சு தண்ணீரிற்கலந்து ஒரு சீலையிற் தோய்த்துப் போடவும். அல்லது தண்ணீர்ச்சீலை போடவும். மூன்றுநாட் சென்றபின் சவுக்காரத்தயிலம் (Soap Liniment) பூசவும்.

---

## காயம். Wounds.

காயத்துக்குள் ஏதும் அன்னியபொருட்களிருந்தால் எடுத்துத் தண்ணீராற்கழுவி ஒரு சீலைத்துண்டை நாலு ஐந்து பட்டாய் மடித்துவைத்துச் சீலையாற் கட்டிவிட இரத்தந் தடைப்படும். கொஞ்சநேரத்தாற் சீலையை எடுத்துக் காயத்தின் இரு ஓரமுஞ் சேரத்தக்கதாக ஒட்டுச்சேர்வைபோட்டுத் தண்ணீர்ச் சீலையை அதற்குமேல் இரண்டு மூன்றுநாள் போடவும். திரும்பக் காபலிக்கமில எண்ணெய் போட்டுவரவும். காயத்திற்கு அயோடவோம் போட்டு ஒட்டுச்சேர்வையிடுதல் மெத்த நலம். தோலுரோஞ்சிய காயத்திற்கு ஒட்டுச்சேர்வைபோடாமல் தண்ணீர்ச்சீலை போடவும். திரும்ப வெள்ளைச்சேர்வை அல்லது காபலிக்கமில எண்ணெய் போடவும்.

---

## மூளைக்குலுக்கம். Concussion of Brain.

மரந்தடியிலிருந்து தலையடிபட விழுந்தாலும், பனங்காய் தேங்காய் தலையில்விழுந்தாலும் இக்குணமுண்டாகும். அறிவின்மை கொஞ்சநேரத்துக்கு அல்லது அதிகநேரத்துக்கு இருக்கும். மூச்சுவிட வில்லங்கமும் முகம்வெளிறிக் கைநாடித்துடிப்புச் சிறுத்திருக்கும். சிலவேளை வலியுமுண்டாகும்.

பரிகாரம்.

குளிர்ந்த தண்ணீரைத் தலைக்குப்போடவும். சரீரத்தின் மற்றப்பகுதிகளைக் கம்பளியால்மூடி அனலாய் வைக்கவும். சொற்ப பிரண்டியுந் தண்ணீருமாவது 7-ம் இலக்க அவுஷதமாவது இரண்டொருமுறை கொடுக்கவும். இம்மருந்துகளை அதிகமாய் நெருக்கிக் கொடுக்கப்படாது.

---

## எலும்புமுறிவு. Fracture.

ஊறடைந்த உறுப்பை மெதுவாய்த்தூக்கித தலையணையில் வைத்து முறிந்த இருஅந்தத்திலும் பிடித்திழுத்து நேரில்விட்டு மெல்லிய இரண்டு மட்டையெடுத்து அதற்குச் சீலைசுற்றிப் பக்கம் ஒன்றாகவைத்துச் சீலையாற்சுற்றி மூன்றுநாளைக்குத் தண்ணீர்விடவும். திரும்ப மட்டையை எடுத்துச் சவுக்காரத்தைலம் பூசி மட்டையைவைத்துக் கட்டிவிடவும் தேவையானால் இடைக்கிடையவிழ்த்துக் கட்டிவிடவும். மூன்று கிழமையானல் பற்று இடவும். தூத்துமக்கொத்தான் சமூலத்துடனிடித்துத் தேங்காய்ப்பூவுங்கூட்டி வறுத்துக்கட்டவும். காயத்துடன் கூடிய முறிவை வைத்தியனுக்குக்காட்டவும்.

## திக்குமுக்கடைத்தல். Choking.

மீன்முள்ளினாலும் கற்கண்டுத்துண்டு அல்லது காசுமுதலிய பொருட்கள் விழுங்குவதாலும் உண்டாகும்.

கைவிரல்களால் எடுக்கக்கூடுமானல் எடுக்கவும். அல்லது மெல்லிய அப்பத்துண்டை அல்லது சோற்றைப்பிடித்து விழுங்கியபின் தண்ணீர் குடிக்கக்கொடுக்கவும்.

## நீரில் அமிழ்ந்தல். Drowning.

தண்ணீருக்குள் இருந்தெடுத்தவுடன் ஆளை முகங்குப்புறக் கொஞ்சநேரத்துக்குக்கிடத்தவும், சீலைமுதலியவற்றை நுகைத்துத் திருப்ப ஆளை நிமிர்த்திக் காற்றிற்கிடத்திச் சரீரத்தைச் சூடுண்டாக்கவும். மூக்குக்கு அமோனியாவை மணக்கப்பிடிக்கவும். கம்பளியால் மூடவும். சுடுபோத்தல் சுடுமண்பொட்டளி நெஞ்சுக்கும் முதுகுக்கும் பிடிக்கவும. தேகத்தையசஞ்சவும் சுவாசந் தடக்கினல் மூங்கிற்குழலை அல்லது இறகுப்பேணியை இருபகுதியிலுந் துவாரமிட்டிருக்க வெட்டி ஒரு அந்தலையை நோயாளின் வாய்க்குள்விட்டு நாசிகளை நல்லாய்ப் பொத்திக்கொண்டு மற்ற அந்தலையைத் துணையாளி தன் வாய்க்குள் வைத்து ஊதவும் பிள்ளைக்குச் சுவாசம்வந்தபின் சொற்ப பிரண்டியை வெந்நீரிற் கலந்து கொடுக்கவும். நீருள் விழுந்து செத்த ஈயை நசியாமல் எடுத்துமூடி உப்புப்போட்டு வெயிலில் வைக்க உயிர்த்தெழுந்து பறக்கும். அப்பிரயோகத்தையுஞ்செய்து பரீட்சிக்கலாம்.

## நச்சுமீன். Poisouous Fish.

சிலமீன்கள் நச்சுத்தன்மையுடையன. சிலது சிலகாலங்களில் நச்சுத்தன்மையுடையது. சிலது சிலருக்குமாத்திரம் நச்சுத்தன்மையுடையது.

நவசுமீன் தின்றவர்களுக்கு இரண்டொரு மணித்தியாலத்தால் பின்வருங் குணங்களுண்டாகும். கண்மடல் வீங்கிச்சொறியும். கண்ணீர்வடியும். மூச்சுவிட வில்லங்கமாகும். அதிகபெலவீனத்துடன் மேனியிற் கொள்ளிக்கரப்பன்போலுண்டாகும்.

அலட்டும் மூடமும் வலியுமிருந்தால் அசாத்தியமாகும்.

பரிகாரம்.

முதல் வாந்திக்க இப்பிக்காக்வைன் கொடுத்துத் திரும்பரூவாப்புக்கலவையாவது உப்புக்கலவையாவது கொடுத்து விரேசனஞ்செய்யவேண்டும். போதிய அளவு பால் தேய்த்தண்ணீர் கஞ்சித்தெளிவு கொடுக்கலாம்.

---

## நஞ்சுக்கு மாற்றுகள்.
## ANTIDOTES TO POISONS.

| | | | |
|---|---|---|---|
| அமிலம் | காபலிக் | Acid. | Carbolic. |
| ,, | சல்வுரிக் | ,, | Sulphuric. |
| ,, | நீதுரிக் | ,, | Nitric. |

குணம்— வாய் தொண்டையில் எரிவிருக்கும். சத்தி கழிச்சல் கடுந்தாகம் முதலிய குணமுண்டாகும்.

பரிகாரம்.

காபலிக்கமிலத்துக்கு மாற்று அதிகஅளவான ஒலிவத்தைலாவது, தேங்காயெண்ணெயாவது ஆமணக்கெண்ணெயாவது குடிக்கவும். பால் கஞ்சி அகசிமுசிலாகு (Mucilage of Acacia) குடிக்கவும்.

காபலிக்கமிலம் தோலிற்பட்டால் தண்ணீரால் கழுவாமல் ஏதும் எண்ணெயால் பூசவும்.

மற்ற வகையான அமிலங்களுக்கு மக்னீசி (Calcine Magnesia) கிரீதம் (Chalk) சோடாவில் அல்லது சுண்ணாம்புத்தண்ணீரில் கரைத்துக் குடிக்கவும்.

---

## அபினுக்கும் அதிலுண்டான மருந்துகளுக்கும். Opium and its Preparations.

கு ண ம் — பெலவீனமும் நாடிக்கெதியும் தூக்கக்குணமும் அறிவின்மையுமிருக்கும்.

பரிகாரம்.

சத்திக்கக் கடுகு அல்லது இப்பிகாக் கொடுத்து முகத்துக்கும் தலைக்கும் தண்ணீர்போட்டு நோயாளியை உலாத்தச்செய்து காரமான கோப்பித்தண்ணீர் கொடுக்கவும்.

## மாவியாவுக்கு. Morphia.

தனிக் கமிலம் (Tannic Acid) அயோடின் ரஞ்சம் (Tincture Iodine) கொடுக்கவும் அயோடத்துக்கு (Iodum) கஞ்சியையாவது சோடாவைக் கஞ்சியிற்கரைத்தாவது கொடுக்கவும்.

## இரசஞ்சேர்ந்தமருந்துகளாகிய கலமல் சவ்வீரம், Calomel, Corrosive Sublimate.

கு ண ம் — எரிவானநோ, தாகம், வயிற்றில்நோ, தொண்டை வாய் வரட்சியாதல், சத்தி, கழிச்சல், வலி, அதிகபெலவீன முண்டுபடும்.

பரிகாரம்.

சத்திக்கக்கொடுத்துக் கோழிமுட்டையின் வெள்ளைக்கரு கொடுக்கவும். அரிசிமாவும் பாலுந் தண்ணீருங்கலந்து கொடுக்கவும்.

## ஈயம் வங்கசீனி. Sugar of Lead.

கு ண ம் — சவ்வீரத்துக்குரிய குணமிருக்கும். ஆனால் இதில் கடுமையான வயிற்றுவலியிருக்கும்.

பரிகாரம்.

இடைக்கிடை பேதியுப்பைத் தண்ணீரிற் கரைத்துக்கொடுக்கவும்.

## காடிக்காரத்துக்கு. Nitrate fo Silver.

பரிகாரம்.

கறியுப்பைத் தண்ணீரிற் கரைத்துக்கொடுக்கவும்.

## சுண்ணும்பு. Lime.

பரிகாரம்.

காடிகலந்த தண்ணீர் அல்லது எலுமிச்சம்புளி கொடுக்கவும். இலுப்பெண்ணெயுங் கொடுக்கலாம்.

---

## பாஷாணத்துக்கும் அதின் உப்புகளுக்கும். Arsenious Acid and its Preparations.

குணம் — சவ்வீரத்துக்குரிய குணமிருக்கும்.

பரிகாரம்.

சத்திக்கக் கடுகு அல்லது இப்பிக்காக்கொடுத்து, பின்தண்ணீர் பால் கோழிமுட்டை கொடுக்கவும். கரித்தூளும் கொடுக்கவும். எண்ணெயும் சுண்ணாம்புநீருங் கலந்து கொடுக்கலாம்.

மிளகு வெற்றிலை அறுகம்வேர் இவைகளைத் தண்ணீரில் அவித்துக்கொடுக்கவும்.

---

## வாளம். Croton Seeds or Croton Oil.

குணம் — வாயில் எரிவும் தண்ணீராய்க் கழிச்சலும் அதிக இயக்கமும் இருக்கும்.

பரிகாரம்.

அரோறூட்மா அல்லது அரிசிக் கஞ்சிகொடுத்து லாடனம் (Laudanum) கழிச்சலைத் தடுக்கக்கொடுக்கவும்.

வாளப் பேதிக்கு மாற்று பசுவின் சாணியைத் தண்ணீரிற் கரைத்துக் குடிக்கக்கொடுக்கவும்.

இயக்கம்மாற அமோன சுகந்தசுரா (Aromatic Spirit of Ammonia) அல்லது பிராண்டியைத் தண்ணீரிற் கலந்து கொடுக்கவும்.

---

## துரிசு செளிம்பு. Sulphate of Copper &c.

குணம் — சவ்வீரத்துக்குரிய குணம் இருக்கும். ஆனால் அவ்வளவு கடுமையாயிராது.

பரிகாரம்.

கோழிமுட்டை வெள்ளைக்கரு பால் கோதுமைமாவும் தண்ணீருங் கொடுக்கவும்.

---

நெய் தேனுக்கு—வெந்தகரியும்
எருக்கிலைக்கு—எள்ளும் சருக்கரையும்
எருக்கம்பாலுக்கு—ஆவின்மோரும்
குன்றிமணிக்கு—பொரித்தவெண்காரமும்
வெற்றிலை அரைத்து நல்லெண்ணெயிற் கலந்து குடித்தால்—
தேங்காய்ப்பாலும்
கஞ்சாவுக்கு—ஈரவெண்காயச்சாறும்
கள்ளிப்பாலுக்கு—வாழைமடற்சாறும்
காஞ்சூரைக்கு—புகையிலையும்
புகையிலைக்கு—காஞ்சூரையும்
ஊமத்தைக்கு—தாமரைக்கிழங்கும்
சிவதைக்கு—வெள்வேலம்பட்டையும்
மருதோன்றிக்கு—தான்றிக்காயும்
சுண்ணாம்புக்கு—மஞ்சளும்
தில்லைப்பாலுக்கு—சிறுகாஞ்சொறிவேரும்
முயலிறைச்சிக்கு—எலியிறைச்சியும்
எலியிறைச்சிக்கு—மோரும்
கோழியிறைச்சிக்கு—முருங்கையிலையும்
பன்றியிறைச்சிக்கு—விழாவேரும்
ஆட்டிறைச்சிக்கு—சாதிக்காயும்
அவலுக்கு—உப்பும்
பலாப்பழத்துக்கு—சுக்கும் மாங்கொட்டையும்
மாம்பழத்துக்கு—தேங்காய்ப்பாலும்
செருக்கல்வாருக்கு—கருப்புக்கட்டியும் பூசணிக்காயும்
செங்கொட்டைக்கு—பூவரசம்பட்டை அல்லது புளியிலைச்சா
றும் மாற்றுகும்,

---

# மருந்து வகுப்பு.

## CLASSIFICATION OF MEDICINES.

### சுண்ணாம்புத்தண்ணீர். Lime Water.

| | | |
|---|---|---|
| புதுச்சுண்ணாம்பு | 2 | திரும் |
| சுத்த தண்ணீர் | 20 | அவுன்சு |

கலந்து 4 அல்லது 5 மணித்தியாலம் ஊறவிட்டுத் திரும்பப் போத்தலைக் குலுக்காமல் தெளிந்ததண்ணீரை மூடியுள்ள சீசாவில் விட்டுவைக்கவும்,

பிரமாணம்— 2 வயதுக்குட்பட்ட பிள்ளைகளுக்கு 1 திரும். மேற்பட்ட பிள்ளைகளுக்கு 2 தொடங்கி 4 திரும் வரைக்குங் கொடுக்கலாம். காற்கொத்துப் பசுப்பாலுடன் கலந்து கொடுத்துவரவும்.

வாந்திக்கும் கழிச்சலுக்கும் குடித்த பால்திரைந்து சத்திப்பதற்கும் கொடுக்கவும்.

---

இலக்கம் 1.

## ரூவாப்புக்கலவை. Rhubarb Mixture.

| | | |
|---|---|---|
| ரூவாப்பு | Rhubarb | 12 கிறேன் |
| காபனேற்ஒவ்மக்னீசியா | Carbonate of Magnesia | 24 கிறேன் |
| அனிஸ்தைல் | Oil of Anise | 3 துளி |
| தண்ணீர் | Water | 1½ அவுன்சு |

கல. Mix.

பிரமாணம்.

| | | |
|---|---|---|
| 2 வயதுக்குட்பட | 1 திரும் | நாள் 2 அல்லது 3 முறை கொடுக்கவும். |
| 2 வயதுதொடங்கி 4 வயதுக்குட்பட | 2 திரும் | |
| 4 வயதுதொடங்கி 8 வயதுக்குள் | 4 திரும் | |

மலக்கட்டு, சமியாக்குணம், மந்தக்கழிச்சல், கரப்பன் முதலிய பல வியாதிகளுக்குக் கொடுக்கலாம்.

இதைச் சிறுபிள்ளைகளுக்கு இடைக்கிடை கொடுக்க மலமும் ஒழுங்காகி, பிள்ளைகளுக்குவரும் அதிகப்பங்கான நோயை வராமற் காக்கும்.

---

இலக்கம் 2.

## இருமற் கலவை. Cough Mixture.

| | | |
|---|---|---|
| இப்பிகாக்வைன் | Ipecac Wine | 1 திரும் |
| சுத்தமானவெடியுப்பு | Powdered Nitre | 12 கிறேன் |
| நீதுரோசிதர்சுரை | Sweet Spirits of Nitre | 40 துளி |
| ஸ்குவில் தேன் | Honey of Squill | 2 திரும் |
| தண்ணீர் | Water | 3 அவுன்சு |

கல. Mix.

பிரமாணம்.

| | | |
|---|---|---|
| 2 வயதுக்குட்பட | 1 திரும் | நாள் 3 முறை கொடுக்கவும். |
| 2 தொடங்கி 4 வயதுக்குள் | 2 திரும் | |
| 4 ,, 8 ,, | 4 திரும் | |

கபத்தை இளக்கி இருமலைத் தணிக்கும்.

---

இலக்கம் 3.

## குக்கற் கலவை. Hooping Cough Mixture.

| | |
|---|---|
| பதாசியபுரோமிரம் Bromide of Potassium | 18 கிறேன் |
| ஏலக்கூட்டிரஞ்சம் Compound Tincture of Cardamom | ½ திரும் |
| கற்பூரக்கூட்டிரஞ்சம் Compound Tincture of Camphor | 18 துளி |
| பூரநீர் Camphor Water | 1½ அவுன்சு |

கல. Mix.

பிரமாணம்.

| | | |
|---|---|---|
| 2 வயதுக்குட்பட | 1 திரும் | நாள் 2 முறை கொடுக்கவும். |
| 2 தொடங்கி 4 வயதுக்குட்பட | 2 திரும் | |
| 4 ,, 8 ,, | 3 திரும் | |

---

இலக்கம் 4.

## வாயுக்கலவை. Carminative Mixture.

| | |
|---|---|
| காபனேற்றுமக்னீசியா Carbonate of Magnesia | 24 கிறேன் |
| அமோன சுகந்த சுரை Aromatic Spirit of Ammonia | ½ திரும் |
| அனிஸ்தைலம் Oil of Anise | 3 துளி |
| பெப்பமிந்துநீர் Peppermint Water | 1½ அவுன்சு |

கல. Mix.

பிரமாணம்.

| | | |
|---|---|---|
| 2 வயதுக்குட்பட | 1 திரும் | 2 அல்லது 3 மணிக்கு 1 முறை கொடுக்கவும். |
| 2 தொடங்கி 4 வயதுக்குட்பட | 2 திரும் | |
| 4 ,, 8 ,, | 4 திரும் | |

மருந்து கொடுக்கும்போது கொஞ்சச் சீனியும் மருந்தளவு தண்ணீருங் கலந்து கொடுக்கவும்.

வயிற்றுக்குத்து, வாயுப்பொருமல், நெஞ்செரிப்புமுதலிய நோய்களைக் கண்டிக்கும்.

---

இலக்கம் 5.

## குவினயின்கலவை. Quinine Mixture.

| | |
|---|---|
| குவினயின் Quinine | 12 கிறேன் |
| கிருசசல்வுரிக்கமிலம் Dilute Sulphuric Acid | 24 துளி |
| சீனி Sugar | 2 கிறாம் |
| தண்ணீர் Water | 3 அவுன்சு |

கல. Mix.

பிரமாணம்.

| | | |
|---|---|---|
| 2 வயதுக்குட்பட | 1 கிறாம் | நாள் 2 அல்லது 3 முறை கொடுக்கவும். |
| 2 தொடங்கி 4 வயதுக்குட்பட | 2 கிறாம் | |
| 4 ,, 8 ,, | 4 கிறாம் | |

முறைக்காய்ச்சல் முதலிய சுரங்களுக்குக் காய்ச்சலில்லாத நேரங் கொடுத்துவரவும்.

---

இல 6.

## அயக்கலவை. Iron Mixture.

| | |
|---|---|
| அயரஞ்சம் Steel Drops | 24 சொட்டு |
| சீனி Sugar | 2 கிறாம் |
| தண்ணீர் Water | 3 அவுன்சு |

கல. Mix.

பிரமாணம்.

| | | |
|---|---|---|
| 2 வயதுக்குட்பட | 1 கிறாம் | நாள் 2 முறை கொடுக்கவும். |
| 2 தொடங்கி 4 வயதுக்குட்பட | 2 கிறாம் | |
| 4 ,, 8 ,, | 4 கிறாம் | |

காமாலை முதலிய நோய்களுக்குக் கொடுக்கலாம். இது இரத்தத்தைச் சுத்தியாக்கி வெளுவெளுப்பை நீக்கிப் பெலனைக் கொடுக்கக்கூடியது.

---

இலக்கம் 7.

## தீவனகலவை. Stimulant Mixture.

| | | |
|---|---|---|
| ஈதர்சுரை | Spirit of Ether | ½ திரும் |
| அமோன சுகந்த சுரை | Aromatic Spirt of Ammonia | ½ திரும் |
| பூரநீர் | Camphor Water | 1½ அவுன்சு |

கல. Mix.

பிரமாணம்.

| | | |
|---|---|---|
| 2 வயதுக்குட்பட | 1 திரும் | 2 அல்லது 3 மணிக்கு 1 முறை கொடுக்கவும். |
| 2 தொடங்கி 4 வயதுக்குட்பட | 2 திரும் | |
| 4 ,, 8 ,, | 4 திரும் | |

சோகம் களை முதலிய நோய்களுக்கும் வேறுநோய்களில் நாடிதளர்ந்து தேகம் குளிர்கொண்டாலும் இந்த மருந்தைக் கொடுக்க இரத்தோட்டத்தைக் கெதிப்படுத்திச் சூட்டையுண்டாக்கி அறிவுதெளியும்.

---

இலக்கம் 8.

## தாகக்கலவை. Chlorate of Potash Mixture.

| | | |
|---|---|---|
| குலோறேற்ஒவ்பொற்றாஸ் | Chlorate of Potash | 24 கிறேன் |
| பைகாபனேற் ஒவ் பொற்றாஸ் | Bicarbonate of Potash | 48 கிறேன் |
| தண்ணீர் | Water | 6 அவுன்சு |

கல. Mix.

பிரமாணம்.

| | | |
|---|---|---|
| 2 வயதுக்குட்பட | 2 திரும் | நாள் 3 முறை கொடுக்கவும். |
| 2 தொடங்கி 4 வயதுக்குட்பட | 4 திரும் | |
| 4 ,, 8 ,, | 8 திரும் | |

கொடுக்கும்நேரத்தில் தனியே அல்லது கொஞ்ச எலுமிச்சம்புளியும் சீனியுங் கலந்து கொடுக்கவும். எல்லாச் சுரங்களிலும் நாவரட்சி தாகம் இருக்கும்போது கொடுக்கவும். அதிசாரத்துக்கும் இம்மருந்து கொடுக்கலாம்.

---

இலக்கம் 9.

## கிரீம்தாத்தர் கலவை. Cream of Tartar Mixture.

| | |
|---|---|
| கிரீம்தாத்தர் Cream of Tartar | ½ அவுன்சு |
| சீனி Sugar | 1 அவுன்சு |
| எலுமிச்சங்தோல் Lemon Peel | ½ திறாம் |
| சுடுதண்ணீர் Hot Water | 1 கொத்து |

கல. Mix.

பிரமாணம்.

| | | |
|---|---|---|
| 2 வயதுக்குட்பட | 2 திறாம் | நாள் 3 முறை கொடுக்கவும். |
| 2 தொடங்கி 4 வயதுக்குட்பட | 4 திறாம் | |
| 4 ,, 8 ,, | 8 திறாம் | |

தாகத்துக்கும் எல்லாவகைச் சுரங்களுக்கும் சின்னமுத்து கொப்பளிப்பான் அம்மைமுதலிய வியாதிகளுக்கும் வீக்கத்துக்கும் மலக்கட்டுக்கும் சிறுநீர்க்குறைவுக்கும் கொடுக்கலாம்.

---

இலக்கம் 10.

## வெயர்க்குங்கலவை. Diaporetic Mixture.

| | |
|---|---|
| அமோனவசிதசுநீர் Solution of Acetate of Ammoina | 2 திறாம் |
| வெடியுப்பு Nitrate of Potash | 12 கிறேன் |
| நீறுரோசிதர்சுரை Sweet Spirits of Nitre | 24 துளி |
| பூரநீர் Camphor Water | 1½ அவுன்சு |

கல. Mix.

பிரமாணம்.

| | | |
|---|---|---|
| 2 வயதுக்குட்பட | 1 திறாம் | நாள் 3 முறை கொடுக்கவும். |
| 2 தொடங்கி 4 வயதுக்குட்பட | 2 திறாம் | |
| 4 ,, 8 ,, | 4 திறாம் | |

காய்ச்சலிருக்கும்போது கொடுக்க வெயர்த்துக் காய்ச்சல் விடும்

### இலக்கம் 11.

### உப்புக்கலவை. Sulphate of Magnesia Mixture.

| | | |
|---|---|---|
| பேதியுப்பு | Epsom Salts | 40 கிறேன் |
| காபனேற்றொவ்மக்னீசியா | Carbonate of Magnesia | 24 கிறேன் |
| அனிஸ்நீர் | Anise Water | $1\frac{1}{2}$ அவுன்சு |

கல. Mix.

பிரமாணம்.

| | | |
|---|---|---|
| 2 வயதுக்குட்பட | 1 திரும் | நாள் 2 அல்லது 3 முறை கொடுக்கவும். |
| 2 தொடங்கி 5 வயதுக்குட்பட | 2 திரும் | |
| 4 ,, 8 ,, | 4 திரும் | |

இது சுரங்களுக்குத் தகுந்த விரேசனமருந்து. கொள்ளிக்கரப்பன் முதலிய நோய்களுக்குக் கொடுக்கலாம்.

---

### இலக்கம் 12.

### இரசருவாப்புத்தூள். Grey Powder with Rhubarb.

| | | |
|---|---|---|
| கிறேபவுடர் | Grey Powder | 3 கிறேன் |
| ருவாப்பு | Rhubarb | 6 கிறேன் |

கல. Mix.

பிரமாணம்.

3 வயதுக்குட்பட்டவர்களுக்கு ஆறுசரையாக்கி நாளிரண்டுமுறை கொடுக்கவும். 3 வயதுக்கு மேற்பட்ட பிள்ளைகளுக்கு மருந்துப்பிரமாணத்தை இரட்டித்து 6 சரையாகப்பிரித்து நாளிரண்டுமுறையாகக் கொடுக்கவும்.

---

### இலக்கம் 13.

### குவினயின், ருவாப், சோடாத்தூள்.

### Quinine Rhubarb and Soda Powder.

| | | |
|---|---|---|
| குவினயின் | Quinine | 6 கிறேன் |
| ருவாப்பு | Rhubarb | 12 கிறேன் |
| சோடா | Bicarbonate of Soda | 12 கிறேன் |

கல. Mix.

பிரமாணம்.

2 வயதுக்குட்பட்டபிள்ளைகளுக்கு 12 சரையாக்கி நாள் 2 முறை
3 வயதுக்குமேற்பட்ட ,, 6 கொடுக்.

இம்மருந்தை நோய்வந்துமாறிச் சரீரம்பெலவீனப்பட்டிரு க்கும்போதும் சீரணேந்திரியங்கள் பெலப்படுவதற்கும் கணைக் காய்ச்சல் மாந்தக்கழிச்சல் சுரம் முறைச்சுரத்துக்கும் கொடுக் கலாம்.

---

இலக்கம் 14.

கிருமித்தூள். (சந்தூனின்தூள்)

Santonin Powder.

| | 2 வயதுக்குட்பட | 2 தொடங்கி 4 வயதுக்குட்பட | 4 தொடங்கி 8 வயதுக்குட்பட |
|---|---|---|---|
| சந்தூனின் Santonin | $\frac{1}{2}$ கிறேன் | 1 கிறேன் | 2 கிறேன் |
| சோடா Bicarbonate of Soda | 2 ,, | 4 ,, | 8 ,, |
| ரூவாப்பு Rhubarb | 2 ,, | 4 ,, | 8 ,, |

இதைக்கலந்து இரண்டு சரையாக்கிக் காலமேயொன்றும் சாயந்தரமொன்றுஞ் சீனியிற் கலந்துகொடுத்து மறுநாட் காலமே ஆமணக்கெண்ணெய் கொடுக்கவும்.

---

இலக்கம் 15.

காச்சற்றூள். Fever Powder.

| | | |
|---|---|---|
| கலமல் | Calomel | 3 கிறேன் |
| இப்பிகாக்கு | Ipecac | 1 கிறேன் |
| வெடியுப்பு | Nitre | 6 கிறேன் |

கல, Mix.

பிரமாணம்.

3 வயதுக்குட்பட்ட பிள்ளைகளுக்கு ஆறு சரையாகப்பிரி த்து நாள் மூன்று அல்லது நாலுசரை கொடுக்கவும். மேற்ப ட்ட பிள்ளைகளுக்கு இதில் இரட்டிப்பானபங்கு கொடுக்கவும்.

இம்மருந்துக்கு மலமூஞ் சுத்தியாகிக் காய்ச்சலுந் தணியும். பலவகையான சுரத்துக்கும் இத்தூளில் 3 அல்லது 4 சரை கொடுத்துத் திரும்ப ருவாப்புக்கலவை அல்லது ஆமணக்கெண்ணெய் கொடுக்க வியாதி சாந்தியாகும். இத்தூள்கொடுக்க வாந்தியிருந்தால் தாகக்கலவை கொடுக்கவும். நெஞ்சிற் சறளியுடன் கறகறப்புச் சத்தத்தோடு இருமலுங் காய்ச்சலுமிருந்தாலும் இத்தூள் கொடுக்கலாம்.

---

இலக்கம் 16.

## கழிச்சற்றூள்.

## Aromatic Chalk Powder with Tannic Acid.

| | | |
|---|---|---|
| கிரீதசுகந்தசூரணம் | Aromatic Chalk Powder | 20 கிறேன் |
| தணிக்கமிலம் | Tannic Acid | 6 கிறேன் |

பிரமாணம்.

3 வயதுக்குட்பட்ட பிள்ளைகளுக்கு 6 சரையாக்கி நாள் 2 அல்லது 3 சரை கொடுக்கவும். மேற்பட்ட பிள்ளைகளுக்கு இரட்டிப்பான பங்கு கொடுக்கலாம்.

---

இலக்கம் 17.

## வயிற்றுளைவுக்குத்தூள். Dysentery Powders.

| | | |
|---|---|---|
| தோவர்சூரணம் | Dovers Powder | 3 கிறேன் |
| பிஸ்முத்நீதரசு | Sub nitrate of Bismuth | 6 கிறேன் |
| இப்பிகாக்கு | Ipecac | $1\frac{1}{2}$ கிறேன் |
| சோடா | Bicarbonate of Soda | 8 கிறேன் |

பிரமாணம்.

3 வயதுக்குட்பட்ட பிள்ளைகளுக்கு 6 சரையாக்கி நாள் 2 அல்லது 3 சரை தேனிற்கொடுக்கவும். 3 வயதுக்கு மேற்பட்ட பிள்ளைகளுக்கு இரட்டிப்பங்கு கொடுக்கலாம், தோவர் சூரணத்தில் அபின் சேர்ந்திருப்பதால் பிள்ளைகளுக்கு இம்மருந்தை நெருக்கிக் கொடுக்கப்படாது.

---

இலக்கம் 18.

## அயமும் களம்புத்தூளும்.
## Iron & Calumba Powder.

அயகாபனைசுச்சீனி Saccharated Carbonate of Iron 12 கிறேன்
களம்புத்தூள் Calumba Powder 12 கிறேன்

பிரமாணம்.

3 வயதுக்குட்பட்ட பிள்ளைகளுக்கு 12 சரையாக்கி நாள் இரண்டு சரை கொடுக்கவும் அதற்கு மேற்பட்ட பிள்ளைகளுக்கு இரட்டிப்பான பங்கு கொடுக்கலாம்.

காமாலை இரத்தப்பழுது கணை முதலிய நோய்களுக்குக் கொடுக்கவும். பசியையும் நல்லிரத்தத்தையு முண்டாக்கிப் பெலனைக் கொடுக்கக்கூடியது.

---

இலக்கம் 19.

## அமோனதயிலம். Ammonia Liniment.

| | | |
|---|---|---|
| அமோனநீர் | Liquor Ammonia | ½ திறாம் |
| சவுக்காரதயிலம் | Soap Liniment | 1 அவுன்சு |
| ஒலிவ்வெண்ணெய் | Olive oil | ½ அவுன்சு |

கல. Mix.

இருமலில் நெஞ்சில் நோவுக்கும் வேறுவகையான நோவுக்கும் பூசலாம்.

---

இலக்கம் 20.

## கோரோசனைக்குளிகை.

கோரோசனை, அதிமதுரம், கிராம்பு, அக்கிறு, திப்பலி, கோட்டம், இந்துப்பு, குங்குமப்பூ, இஞ்சி, வெற்றிலைக்காம்பு, மாப்பித்து, மாதுளம்பூ, வேற்கொம்பு, ஏலம், மாயாக்காய், கொத்தமல்லி, சிறுதேக்கு, சாத்திரபேதி, சந்தனம், தூதுவளைவேர், சோம்பு, கச்சோலம், மஞ்சிட்டி வகைக்குக் கழஞ்சு ஒன்று; தேன்தோடம்பழச்சாற்றி லொருசாமமும், மாதுளம்பழச்சாற்றி லொருசாமமும், ஆடாதோடைச்சாற்றி லொருசாமமும் அரைத்துக் குன்றுமணிப் பிரமாணமாக உருட்டிச் சிறு பாலருக்கு ஒருகுளிகைப் பிரமாணமாகவும் வளர்ந்த பிள்ளைக

ளுக்கு இரண்டு குளிகைப் பிரமாணமாகவுங் கொடுக்கவும். அனுபானம் முலைப்பால் தேன் இஞ்சிச்சாறு.

சுரங்கள், சன்னி, வயிற்றுப்பொருமல், மாந்தம், வாய்வு, நெஞ்செரிப்பு, இருமல், கழிச்சல், தொய்வு முதலியவைகளுக்கு நல்லது.

## இலக்கம் 21.

## கொவ்வங்காய்க் கோரோசனைக்குளிகை.

திற்பலி, கிராம்பு, கருஞ்சீரகம், அசமதாகம், கோரோசனை வகைக்குக் கழஞ்சு ஒன்று இச்சரக்குகளைக் கொவ்வங்காய்க்குள் வைத்துச் சுடுசாம்பரிற்புதைத்துக் காயவிந்தபின் எடுத்துப் பச்சைத்தண்ணீர்விட்டரைக்கவும். அப்போது கோரோசனையுஞ் சேர்த்துக்கொள்ளவும். அரைத்தபின் மிளகளவு உருண்டைபண்ணி வயிற்றவியலோடுகூடிய காய்ச்சலுக்கும் இராக்காய்ச்சலுக்கும் இஞ்சி தேனிலும், முறைக்காய்ச்சலுக்கும் சளிக்கரகரப்புக்கும் முலைப்பாலிலுங் கொடுக்கவும்.

## இலக்கம் 22.

## தக்காளிக் கோரோசனைக்குளிகை.

சிறுகீரைவேர், பொன்னாங்காணிவேர், நன்னாரிவேர், திற்பலி, மிளகு, வேர்க்கொம்பு, நெல்லிக்காய், தான்றிக்காய், கடுக்காய், கிராம்பு, வசுவாசி, கோட்டம், அக்கரு, அதிமதுரம், ஏலம் இவை வகைக்குக் கழஞ்சு ஒன்று வேர்களையுஞ் சரக்குகளையுங் காயவைத்து இடித்துக் கோரோசனை கழஞ்சு ஒன்று சேர்த்து மணத்தக்காளிச்சாற்றைக் குளிகைப்பதமாய் வரும்வரைக்கும் விட்டரைக்கவும். அப்படியரைத்து இலகங்கொட்டைப்பிரமாணமாய் உண்டைசெய்து நிழலில் உலரவைத்துச் சிறுசீசாவில் வைக்கவும். ஒன்று அல்லது இரண்டு குளிகையை இஞ்சி தேன் முலைப்பாலிற் கொடுக்க அக்கரம் அவியற்சுரம் அவியலோடுகூடிய கழிச்சல் பெலவீனம் தாகசுரம் கிரந்திச்சுரம் முதலிய நோய்கள் தீரும்.

## இலக்கம் 23.

## மாந்தக்குளிகை.

ஓமம், திற்பலி, வேற்கொம்பு, வசம்பு, கருஞ்சீரகம், சாறணைவேர், நற்சீரகம், கொத்தமல்லி, குரோசாணி வகைக்குக் கழஞ்சு அரை; தண்ணீர்விட்டரைத்துத் துவரையளவு மாத்தி

ரைசெய்து சிறுபாலருக்கு ஒரு குளிகைவீதமாயும் வளர்ந்த பிள்ளைகளுக்கு இரண்டுகுளிகைவீதமாயும் நாள் இருமுறை வெந்நீரிற்கொடுக்கவும்.

---

இலக்கம் 24.

## தேற்றுக்கொட்டைக்குளிகை.

தேற்றுங்கொட்டை, அதிமதுரம், திற்பலி, கிராம்பு, மாயாக்காய், கடுக்காய், சிறுதேக்கு, இந்துப்பு, அரத்தை, வெளுத்தற்பிசின், கடுகுரோகணி, அக்கரு வகைக்குக் கழஞ்சு ஒன்று. ஆடாதோடையிலைச்சாற்றி லரைத்துத் தூதுளங்காயளவு உருண்டைசெய்து நிழலிலுலர்த்தி ஒருகுளிகை முலைப்பாலிற் கொடுக்க அக்காமும் நாய்முள்ளும், அதிமதுரம் வில்வவேர்க் கஷாயத்தில் உள்ளுலோகமும், பொடுதலை இந்துப்பு வேலிப்பருத்திக் கஷாயத்தில் மாந்தமும், அத்திப்பட்டை ஆவரைப்பட்டை மாதுளங்காயோடுசேர்ந்த கஷாயத்தில் காய்ச்சல் கழிச்சலுந் தீரும்.

---

இலக்கம் 25.

## கஸ்தூரிமாத்திரை.

குங்குமப்பூ, கஸ்தூரி, கோரோசனை, ஏலம், கொத்தமல்லி, சந்தனம், அக்கரு, அதிமதுரம் வகைக்குக் காற் கழஞ்சு. முலைப்பாலிலரைத்துப் பயறளவு உருட்டிப் பாலருக்கு ஒரு குளிகைவீதமாயும் வளர்ந்த பிள்ளைகளுக்கு இரண்டுகுளிகைவீதமாயும் முலைப்பாலிற்கொடுக்கவும். காய்ச்சல்முதலியநோய்களினால் நோயாளி பெலன்கெட்டிருக்கும்போதும் நெஞ்சிற் கபம்அடைக்கும்போதுங் கொடுக்கவும்.

---

இல. 26.

## கிரந்திச்சுர குடிநீர்.

| | | |
|---|---|---|
| தூதுளைவேர் | கொச்சிவேர் | இவை வகைக்குக் கழஞ்சு இரண்டு |
| சிறுகாஞ்சோன்றிவேர் | பேராமுட்டிவேர் | |
| ஆடாதோடைவேர் | சிற்றாமுட்டிவேர் | |
| சீந்திற்றண்டு | கோரைக்கிழங்கு | |

பற்படாகம், கடுக்காய், திற்பலி வகைக்குக் கழஞ்சு அரை. தண்ணீர் ஒருபடி. காலொன்றாய் வற்றக்காய்ச்சி வளர்ந்த பிள்ளைகளுக்கு நாலுநாள் எட்டுநேரங் கொடுக்கவும். சிறுபாலருக்கு இம்மருந்துகளில் அரைவாசிப்பிரமாணமாயெடுத்துச் செய்துகொடுக்கவும். கொடுக்கும்போது கொஞ்சக் கற்கண்டுத்தூள்

சேர்த்துக்கொள்ளவும். சுரங்கள் கிரந்தி தொய்வு இருமல் முதலிய நோய்களுக்குக் கொடுக்கவும்.

---

இலக்கம் 27.

சுர குடிநீர்.

பேய்ப்புடோல், பற்படாகம், பேராமுட்டி, மிளகு, சுக்கு, விட்டுணுகிராந்தி, நாரத்தைப்பட்டை வகைக்குக் கழஞ்சு ஒன்று. இதை மூன்றாய்ப்பிரித்து ஒருபங்கை அரைப்படி தண்ணீரில் அவித்து எட்டொன்றாக்கி நாள் இரண்டுமுறை தேன்சேர்த்துக் கொடுக்கவும். மற்றப்பங்குகளையும் இவ்விதமே செய்து கொடுக்கவும், எவ்விதச் சுரங்களுக்குங் கொடுக்கலாம்.

---

இலக்கம் 28.

அக்கர குடிநீர்.

சந்தனம். கொத்தமல்லி, கடுக்காய் வகைக்குக் கழஞ்சு அரை; செவ்வள்ளி, நாயுருவிவேர், தூதுவளைவேர், வட்டுவேர், மாதுளம்பிஞ்சு, அத்திப்பட்டை, கொட்டைப்பாக்கு இவை வகைக்குக் காற் கழஞ்சு: இலந்தையிலை, வல்லாரையிலை இவை வகைக்குப் பத்து: அரைப்படி தண்ணீரிற் போட்டவித்து நாலொன்றாக்கி ஒருவயசுதொடங்கி இரண்டுவயசுள்ள பிள்ளைகளுக்கு ஒரு தேய்க்கரண்டியளவு கொடுக்கவும் மேற்பட்ட பிள்ளைகளுக்கு 2 அல்லது 3 தேய்க்கரண்டி அளவு கொடுக்கவும்.

---

இலக்கம் 29.

வேறு.

வல்லாரையிலை, கற்பூரவள்ளியிலை, நற்சீரகம், அதிமதுரம் அசமதாகம், வெண்காயம் வகைக்குக் கழஞ்சு ஒன்று. அரைக்கொத்துத் தண்ணீரில் அவித்து நாலிலொன்றாக்கி 8 அல்லது நாலுநாள் கொடுக்கவும்.

---

இலக்கம் 30.

வேறு,

கராம்பு, ஏலம், மாயாக்காய், திற்பலி, அக்கிறு, நற்சீரகம், செஞ்சந்தனம். கொத்தமல்லி, இருவேலி, நெல்லிக்காய். அதிமதுரம், ஆடாதோடை. வட்டு, நாயுருவி, கண்டங்கத்தரி இவைகளின் சமூலம் வகைக்கு அரைக்கழஞ்சு; தண்ணீர் ஒரு

கொத்து. எட்டொன்றாய்க் கியாளமிட்டு மூன்றுநாள் ஆறுநே ரங் கொடுக்கவும்.

---

## இலக்கம் 31.

### வேறு.

களிப்பாக்கு, மிளகு, வேற்கொம்பு, கருஞ்சீரகம், கொத் தமல்லி, கடுக்காய், நாயுருவி வகைக்கு அரைக்கழஞ்சு; தண் ணீர் ஒருகொத்து: வளர்ந்த பிள்ளைகளுக்கு நாள் இரண்டுமு றையாக மூன்றுநாள்கொடுக்கவும். சிறுபாலருக்கு இதில் அரை ப்பங்குசெய்து கொடுக்கவும்.

---

## இலக்கம் 32.

### அவியற்சுர குடிநீர்.

சிறுகாஞ்சோன்றி, செங்கத்தாரி, ஆடாதோடை, வட்டு, தூதுவளை, கண்டங்கத்தரி, நாயுருவி இவை வேர் வகைக்குக் கழஞ்சு ஒன்று. சீந்திற்றண்டு, கற்பூரவள்ளியிலை, வல்லாரையி லை, திரிகடுகு, இருசீரகம், அக்கிறு, மாயாக்காய், ஏலம், அச மதாகம், கோரைக்கிழங்கு, ஈரவெண்காயம், பற்படாகம் வகை க்குக் கழஞ்சு கால். தண்ணீர் ஒருகொத்து. எட்டொன்றாக்கி நாலுநாள் எட்டுநேரங் கொடுக்கவும். சுரத்தோடுகூடிய இரும லுக்கும் சுரங்களுக்குங் கொடுக்கலாம்.

---

## இலக்கம் 33.

### மாந்த குடிநீர்.

உள்ளி, மிளகு, இந்துப்பு, பொடுதலைக்காய், வசம்பு வகை க்குக் கழஞ்சு அரை. தண்ணீர் ஒருகொத்து. எட்டொன்றாய்க் கியாழமிட்டு வளர்ந்த பிள்ளைகளுக்கு நாள் இரண்டுமுறையாக இரண்டுநாளைக்குக் கொடுக்கவும். சிறுபாலருக்கு இதில் அரை ப்பங்கு கொடுக்கவும்.

---

## இலக்கம் 34.

### வேறு.

கடுகு, மிளகு, உள்ளி, வசம்பு, வேற்கொம்பு, கறிஉப்பு, வகைக்குக் காற்கழஞ்சு. தண்ணீர் அரைக்கொத்து. எட்டொ ன்றாய்க் கியாழமிட்டு நாலுநேரங் கொடுக்கவும்.

---

## இலக்கம் 35.

## அக்கிரு நெய்.

சுக்கு, அதிமதுரம், மாயாக்காய், ஏலம், கிராம்பு, அசமதாகம், திற்பலி, வசுவாசி, கோட்டம், கல்நார், வெளுத்தற்பிசின், சீரகம் வகைக்குக் கழஞ்சு அரை. அசத்தை, இலாமிச்சை, சந்தனம், சாத்திரபேதி, அக்கிரு, அதிவிடையம் வகைக்குக் கழஞ்சு ஒன்று. பசுநெய் ஒருஅவுன்சு காய்ச்சி மேற்சொல்லிய சரக்குகளைத் தூளாக்கி நெய்யிற்போட்டு மெழுகுபதத்தி லிறக்கி அரைச்சதமளவு உள்ளுக்குக் கொடுக்கவும். கணைக்காய்ச்சல் சுரம் வீக்கம் கிரந்தி சத்தி கிறுகிறுப்பு தாகம் முதலிய நோய்கள் தீரும்.

---

## இலக்கம் 36.

## கணைக்கு நெய்.

பழம்பாசி, வல்லாரல், பொன்னுங்காணி, துளசி, கீழ்காய்நெல்லி, சாத்தாவாரி, கொவ்வை இவைகளின் சாறு அரைஅவுன்சு. வில்வவேர், சிற்றாமுட்டிவேர் நன்னாரிவேர், மருதம்பட்டை, கருவேலம்பட்டை, ஆடுதின்னாப்பாலைக்காய் வகைக்குக் கழஞ்சு, ஒன்று. நெய் ஒருஅவுன்சு. சாதிக்காய், கல்நார், வசுவாசி அதிமதுரம், திற்பலி, நற்சீரகம் வகைக்குக் கழஞ்சுகால். அரைத்துக் கரைத்துக் கொதிக்கவைத்துவடித்துக்கொடுக்கவும்.

---

## இலக்கம் 37.

### வேறு.

சாத்தாவாரிச்சாறு, வெள்ளாட்டுப்பால், பசுப்பால், தேங்காய்ப்பால், பசுநெய் வகைக்கு ஒரு அவுன்சு. சீனி கற்கண்டு வகைக்குக் கழஞ்சு மூன்று; சேர்த்து மெழுகுபதமாக வடித்து ஒரு தேய்க்கரண்டிவீதம் நாள் இரண்டுமுறை பிள்ளைகளுக்குக் கொடுக்கவும்.

---

## இலக்கம் 38.

## சவுந்தரியார்கிருதம்.

நற்சீரகம், கருஞ்சீரகம், சாதிக்காய், திற்பலி, அதிமதுரம், கைப்பு, வெளுத்தற்பிசின், செஞ்சந்தனம் ஏலம், உலுவா, கோட்டம், களிப்பாக்கு, இலவங்கம், சதகுப்பை, செவ்வள்ளி, தகரம் (கற்தாமரை) வகைக்குக்கழஞ்சு ஒன்று, தூள்செய்துகொ

ள்ளவும். படுவனிலை, கிரந்திநாயகனிலை, செம்பரத்தம் பூவுமிலையும், செங்கத்தாரி, தொண்டை, எலுமிச்சு இவை இலைகள் வகைக்கு ஒருகழஞ்சு தூள்செய்து கொள்ளவும்.

மலைதாங்கி, நன்னாரி, காற்றோட்டி, சீதேவியார், சிற்றமட்டி, வட்டு, கருஞ்சூரை இவை வேர், வகைக்கு ஒவ்வொருகழஞ்சு தூள்செய்துகொள்ளவும்.

இரண்டுஅவுன்சு பசுநெய்யை வெண்காயமிட்டுச் சிவக்கக் காய்ச்சி ஆற்றி இளஞ்சூடாகச்செய்து வேர்த்தூளில் கால் அவுன்சு தூவிக் கிளறி, இரண்டாவது இலைத்தூளில் கால்அவுன்சு தூவிக்கிளறி, மூன்றாவது சரக்குத்தூளில் கால்அவுன்சு தூவிக்கிளறி வேறொரு நபாத்திரத்தில்வார்த்து வைத்துக்கொள்ளவும். கால் தொடக்கம் அரைச்சதமளவு பிரமாணம் நாள் ஒருமுறை கொடுத்துவரவும்.

தீரும்வியாதி;—சிலந்தி, அரையாப்பு, பவுந்திரம், கற்காப்பன், உச்சிப்பிளவை, செங்காப்பன், வெடிகரப்பன், கருங்காப்பன், வெடிசன்னி, கண்டமாலை, அசுகுணி முதலிய வியாதிகள் தீரும். கணையுள்ள பிள்ளைகளையும் வளர்க்கும்.

## இலக்கம் 39.

## செங்கண்மாரிக்கு எண்ணெய்.

வெட்டுவேர், இலாமிச்சம்வேர், நற்சீரகம், அதிவிடையம், அதிமதுரம், கோட்டம், சந்தனம் வகைக்குப் பலம் கால். பொன்னாங்காணி, கையாந்தகரை, சிறுகீரை இவை வகைக்குச்சாறு படி கால். எலுமிச்சம்புளி, நல்லெண்ணெய் வகைக்குப் படி அரை. சேர்த்துக்காய்ச்சி மெழுகுபதத்தில்வடித்துமுழுகிவரவும்.

## இலக்கம் 40.

## ஆட்டுப்பாலெண்ணெய்.

ஆட்டுப்பால், பசுப்பால், நல்லெண்ணெய் வகைக்குப் படி அரை. சிற்றாமுட்டிவேர் பலம் அரை. செங்கழுநீர்க்கிழங்கு, இலாமிச்சைவேர், கோரைக்கிழங்கு, நன்னாரிவேர் இவை வகைக்குப் பலம் கால். வேற்கொம்பு, ஏலம், கோட்டம், அதிமதுரம், சந்தனம், இருவேலி இவை வகைக்குக் கழஞ்சு அரை இவை களையரைத்து எண்ணெயிற் கரைத்துவிட்டுக் காய்ச்சி மெழுகு பதத்தில் எடுக்கவும். கணையுள்ள பிள்ளைகளுக்குக் கொஞ்சமாய்த் தலையில்வைத்துச் சீயாக்காய்தேய்த்து வெந்நீரில் முழுக வார்க்கவும்.

இலக்கம் 41.

## கிரந்தியெண்ணெய்.

கோடகசாலை, கற்பூரவள்ளி, செம்பரத்தை, கொன்றை, கருவேம்பு, விட்டுணுகிராந்தி, கருத்தப்பூக்கொடி, கிரந்திநாயன், ஓரிதட்டாமரை, பிரமி இவை வகைக்குக் கழஞ்சு இரண்டு. செம்பரத்தம்பூ, செஞ்சந்தனம், கோட்டம், அதிமதுரம், நற்சீரகம், கருஞ்சீரகம், அசமதாகம், ஏலம், இலவங்கம், சாதிக்காய், கராம்பு, வசுவாசி, மாயாக்காய் வகைக்கு அரைக்கழஞ்சு. தூள்பண்ணிப் பொடித்து வெற்றிலை வெடிபதத்தில் தூள் போட்டிறக்கி உள்ளுக்குங் கொடுத்து வெளிக்கும் வார்த்துவரவும்.

இலக்கம் 42.

## பலவகையான கிரந்திக்கு.

ஆமணக்கெண்ணெய், செம்பருத்திச்சாறு வகைக்குக் கழஞ்சு ஒன்று, காய்ச்சி வடித்து அதில் சுக்கு, ஏலம், திற்பலி, மிளகு ஓமம், அதிமதுரம், கடுக்காய் வகைக்குக் கிறேன் இருபது பொடித்துப்போட்டு சீனி அரைஅவுன்சு சேர்த்துச் சொற்பசூடுகாட்டி இறக்கி வளர்ந்தபிள்ளைகளுக்கு இரண்டு மூன்றுகுன்றுமணிப்பிரமாணமாய் நாள் இரண்டுமுறை கொடுக்கவும். சிறுபாலருக்கு இதில் அரைப்பங்கு கொடுக்கலாம்.

இலக்கம் 43.

## இருமலுக்குச் சூரணம்

நற்சீரகம், கருஞ்சீரகம், ஈரவெண்காயம், கிராம்பு, வசுவாசி, ஏலம், தாதுவளங்காய், கற்பூரவள்ளி இவை வகைக்குக் கழஞ்சு அரை. கற்பூரவள்ளியிலையைக்காயவைத்துச் சரக்குகளோடு சேர்த்திடித்துத் தூள்செய்து பேன்பிடிப் பிரமாணமாகச் சீனிசேர்த்து நாள் இரண்டுமுறை கொடுக்கவும்.

இலக்கம் 44.

## பிள்ளைகள் நாக்கிரந்திக்கு.

சொற்ப சீனக்காரத்தையும் மாயாக்காயையும் நெய்விட்டரைத்துத் தாயின் முலையிற்றடவிப் பால்கொடுக்கவும்.

# பாலவைத்தியம்.

---

பிணிவரும்வகை

ஐயதுகூடிற்றானால் அரிவையர் துயரந்தன்னால்
செய்யமுன்னாளிற்றாவுஞ் சிறுசலதோஷந்தன்னால்
பைவதனத்திறைட்குப் பசியொடுவருத்தந்தன்னால்
துய்யதோர்குழவிகட்குத் தோன்றிடுந்தோஷமாமே.

செங்கிரந்தி

பிள்ளைபிறந்தவுடனமுது பெரியமிடறுதனைக்கட்டி
மெள்ளப்பூனைக்குரல்போன்று மிகவுஞ்சலமும்மலமும்விட்ட
துள்ளிக்கைகால்சிவப்பேறிச் சும்மாகிடக்குமிதைமெண்ணில்
கள்ளமானசெங்கிரந்தி யிதுதானெனக்கண்டுகொள்ளீர்.

மருந்து

கோரோசனைதான்முலைப்பாலிற் கொடுத்திடாய்கற்பூரவள்ளி
நீரோடுள்ளிதனைநசுக்கி விகருந்துன்றுமணியிலையின்
சாருஞ்சாறுமருந்தமுநங் கையின்சாறருந்தச்செங்கிரந்திக்
கோநஞ்செம்முள்ளியினிலைபையூறவைத்துக்குளித்தல்நன்றே

கருங்கிரந்தி

முழங்கியமுதுமுலையுண்ணு மேல்மூச்சாகுமுடல்வெதும்பும்
கொழுங்கண்மறையாம்வரட்சியுடன் குணமாமுதரங்கறுப்பேறு
அழுங்குமயருங்குரல்கம்மு மதிகமாகவயிறூதும் (ம்
புழுங்கும்வலிக்குங்கருங்கிரந்தி பொல்லாதென்றேபுகன்றாரே.

மருந்து

ஓணானிரத்தங்கண்வாயி லூய்த்துப்பாலுந்தான்கொடுக்க
மூணான்கரியின்விட்டத்தின் முத்தற்சாறுதன்னாலே
நாணாவசம்புமுள்ளியுமாய் நறுக்கிவிளக்கெண்ணெயுடன்
ஆணாமெரித்துக்கொடுத்திடுவீ ராறுங்கரியகிரந்தியதே.

பட்சிதோஷம்

உதரமுங்கழிவதன்றி உவாந்தியும்மிகவுண்டாகி
திகமொடுதலைவெடாமற் சேர்கண்ணும்பீளைகட்டி
விதவிதமாகமேனி வெதும்பியேபோய்ப்போற்சீறும்
பதமிகுமுனிவோர்சொல்லும் பட்சியின்தோஷமாமே.

மருந்து

பட்சியின்தோஷந்தீரப் பனையின்வேர்குளிசமாடி
உச்சிதமணத்தக்காளி உவந்திடுவேரோடுள்ளி
பிச்சியின்வேருங்கூட்டிப் பிசைந்திடுங்கதிர்புடஞ்செய்
துச்சியில்வைத்துப்பின்னு புள்ளுருக்குங்கொடுத்திடாயே.

பறவைத்தோஷம்

குடித்தபின்னெதிரெடுக்குங் குளிர்ந்திடுங்கண்ணும்வாயும்
அடிக்கடி திடுக்கிட்டார்க்கும் அறமெலிதாகமாகும்
எடுத்தவர்கையிற்றங்கா எதிரினையெடுக்கும்பிள்ளை
கடுத்துடன்வயிறுபோகுங் கருதுகிற்பறவைதானே.

மருந்து

பறவையின்தோஷம்போகப் பயனுரைத்திடுவேனிந்து
துறவைநீகேளாய்மாலின் துளிர்தனைக்குளிசமாடு
திறமைசீரகமீருள்ளி சேரவேபூலாவேரும்
முறைமையாய்க்காய்ச்சியேதான் முறுகியபிணிக்கீவாயே.

புள்ளுருக்தோஷம்

உச்சியுடனேகண்குழிந்து உண்ணுமுலைப்பாலுந்தொங்கா
பச்சென்றிரைந்துவயிறுமழும் பறவைக்குரல்போற்சீறியழும்
எச்சங்கிளைக்கும்வெம்மையது எடுத்துக்குடிக்குந்தண்ணீரை
கச்சைவென்றதனமாதே காணுப்புள்ளுருத்தோஷமிதே.

மருந்து

புள்ளுருத்தோஷந்தீர்ந்திடவே புள்ளடிவேர்குளிசம்மாடு
மெள்ளவேவரிதழ்த்தாமரைதான்வெந்தயமுடனேவிட்டவித்து
வெள்ளத்தோராளவாயிட்டு மிளகில்விதமாய்க்குடிநீரை
உள்ளத்தோடொன்றுக்கியபின் உண்டிடினன்றென்றேமாதே.

அழிதோஷம்

குடித்தபாலுந்தொங்காது குஞ்சியுடலமிகநொந்து
இடித்தநெஞ்சுமுயர்ந்தெழுந்து இசைந்தநாக்கும்வெடிஞறும்
அடிக்குட்கைகால்புனத்தலுண்டாய் அதைத்துவருத்தப்படுமாகில்
துடிக்குநிகருமிடையாளே சொல்லாயழிந்ததோஷமிதே.

மருந்து

இந்துப்புடனேபொடுதலைக்காய் எற்றபூண்டுமிளகுடனே
உந்திப்பிடுங்கியுடன்வதக்கி ஒக்கநீருங்கலந்தெரித்து

சிந்திப்போகா திறக்கிவைத்துத் தெளித்துக்குடித்துவருவீரேல்
சந்திப்பில்லாவழி தோஷந் தானேதீருங்கண்டீரே.

### கெற்பமழிந்தான் தோஷம்.

காலுங்கையுமுடம்பிளைக்கும் கழியுஞ்சத்திமிகவுண்டாம்
மேலுஞ்சிக்கிஉடல்நாறும் மிகமெய்சோரும்விழிமயக்கும்
வேலின்சேலின்விழியாளே வில்லார்புருவமுடையாளே
கேளுமிந்தக்குணங்கண்டாற் கெற்பமழிந்தான்தோஷமிதே.

### மருந்து

கெற்பமழிந்ததாந்தோஷக் கிலேசந்திரக்காட்டாத்தி
சொற்பவேலைப்பிடுங்கிவந்து நுணுக்கமாக அம்மியிலே
அற்பபலத்துவேரைத்து அருந்தக்குளிர்ந்ததண்ணீரில்
கற்பப்பனையின்வெல்லமதைக் கருதிசேர்க்கொடுத்திடுமே,

### குளிர்தோஷம்

மதலையின்மேனிவாடி வயிற்றினிற்பாலுந்தொங்கா
சதிதலைக்குழியுமுண்டாய்ச் சத்தியுமெடுக்கும்நோய்
நுதலன்றிச்சலத்தையுன்னி நோக்கியவிழியுந்தாழ்ந்து
குதலைவாய்கருகித்தோன்றும் கொடுத்தவன்எடுத்தநகாமே.

தண்ணீர்குடிக்கும்நெஞ்சலரும் தளர்ந்துபிள்ளைதான்சோரும்
கண்ணீர்சொரியுங்கால்வீங்கும் கழியுஞ்சத்திமிகவுண்டாம்
அண்ணேநீயுமஞ்சாதே அறிந்துசொன்னேன்குளிர்தோஷம்
பெண்ணேசடலைவிடத்தல்வேர் பிளந்துகட்டும்புகழ்பெறவே.

### மருந்து

குளிர்தோஷந்தான்தீரச்சுடலைதன்னில்
குதித்தமுளைத்தெழும்வனத்தைக்குளிசமாடி.
புளிர்தோஷந்தனையகற்றுங்கீழ்காய்நெல்லி
புகழ்ந்திடம்மான்பச்சரிசிபுளியினோடு
அழிதோஷந்தனையகற்றவுளிவசம்பு
அடுத்தசாறணையனைத்துமேபவிற்பூசக்
கழிதோஷமதுவாகித்தாகந்தீரும்
கருணையுடனேமுன்னோர்கழறினரே.

### தேரைதோஷம்

காலுங்கையும்மிகவற்றிக் கட்டிப்போட்டாற்போற்பிள்ளை
மேலும்வற்றிவெளுப்பிட்டு வேறேவிதமாய்க்குரல்வெளிக்கு

சாலமுலைப்பால்குடித்தாலுஞ் சற்றும்பேசாதிருப்பதெனில்
நீலவட்டவிழிமாதே நிசமாய்த்தேரைதோஷமிதே.

### மருந்து

புள்ளடிசிறுகீரை புகழ்பிரமிதன்னுடன்
புகழ்காணிநீர்முள்ளியும்
பொய்யாமலிருவகைச் சிவனுடனேகீழ்காய்
பொருந்துகுமிழொடுநீலியும்
மொன்னவருகஞ்சாகற் கண்டுமுடக்கொற்றானு
முறையாகவோர்சமனதாய்
மூன்னாழிநீர்விட்டு நாலொன்றதாக்கியே
முற்பாகமாயிறக்கி
மெள்ளவதிமதுரமொடு திற்பலியோடேலமும்
மிளகுள்ளிதானெடுத்து
விருப்புடன்காளிதனில் வெள்ளமதைவிட்டபின்
விரைவாயடுப்பிலேற்றி
உள்ளபடிவகைகாற் பலங்கொண்டெரித்ததை
ஒருங்கேவடித்தபின்னர்
உரைத்திடுகாண்டியளவாயுண்டிடத்தேரை
தோஷமறவோடிவிடுமே.

### முட்டுத்தோஷம்

தேயுமுடம்புவெடிஞறும் செல்லாமுலையும்மறிக்கும்
தாயார்கண்டாலெவ்வாறு சற்றுச்சற்றேவயிறெழுக்கும்
காயுமுடம்புகண்பிசையுங் கண்டாலிதுதான்றியீரா
பாயும்பாமனுலகினுக்குப் பகரும்முட்டுத்தோஷமிதே.

### மருந்து

மூட்டெனுந்தோஷந்தீர முருங்கைவேர் சுளிசமாடு
உட்டணவெந்நீர்தன்னில் ஓர்மயிரோசனிட்டு
திட்டெனவூறுநீற் திரிகடுகுடனேசீரம்
மட்டெனவரைத்துநீயும் மாதுபால்தன்னிலீயே.

### பெண்தோஷம்

நெஞ்சுவரண்டுகண்குளிர்ந்து நீடும்பெருமூச்சுண்டாகி
பஞ்சுபோலேகண்வெளுத்துப் பாலுங்குடியாதழுதிடுமேல்
துஞ்சாதிரவும்பகல்தானுஞ் சுருங்கிப்பாண்டமிகவேர்க்கில்
செஞ்சொன்மயக்கமுண்டாகிற் செப்பீர்பெண்ணின்தோஷமிதே

மருந்து

பாவைதன்தோஷந்தீரப் பருத்திவேர்குளிசமாடு
பூவைகேள்கஞ்சாங்கோரை புனல்தனிறகாய்ச்சியேதான்
தேவைநீர்குடிகேள்சின்னி சிறுவிழாக்கம்போடுள்ளி
காவிச்சிலையில்முடிந்து மாறுகைகாவிற்கட்டே.

பொதுக்குடிநீர்.

வெண்பா

*கன்னியன்னந் தன்னுடனே கடுக்காய்ப் பொடிகூட்டி
உன்னிதமாய்த் தான்பிசைந்து உள்நீரில்—பின்னேகேள்
திற்பலியை விட்டரைத்துச் சேர்ந்தசிறு வேராருந்த
ஒப்பில்லாத் தோஷமெலா மோடும்,

குளிகை

மதுரமுத்தமதிவிடையம் மானேகடுக்காய்மரவசம்பு
உதிருந்தேலதாமஞ்ச னுடனேயொவ்வொன்றேளவாய்
அதிரக்குறிஞ்சிபொடுதலைச்சாற் றரைத்தேயுண்டையானபின்பு
சதுரமுலைப்பாலிட்டத்தோஷந் தணியாதவையுந்தணிந்திடுமே.

வேறு

தணியுங்கோரோசனையுடனே சற்றேறமதுரசந்திற்பலியும்
கனிவாயிதழாய்முலைப்பாலிற் கலந்து அரைத்துஓர்சங்கு
பிணியார்குழவிக்கிடும்போது பேசுமனேகதோஷமெல்லாம்
தணியுமென்றேமுன்னோர்கள் தானேபாரில்மொழிந்தாரே.

எண்ணெய்

மொழியும்மதுரஞ்சீரகமும் முத்தம்ஏலந்திற்பலியும்
பிளியுங்கராம்புசெண்பகப்பூ பெண்ணேஏலவங்கப்பட்டையுடன்
கிளியினமொழியாய்விராகனிடை கேளுமுசிற்றண்டம்நிலவேர்
தெளியுங்காணிசிறுகீரை சேருஞ்சீந்தில்பலமொன்றே.

பலமேசொல்லுமீருள்ளி படிநாலெணவேபற்றியெடு
கலமாயெண்ணெயிரண்டுபடி கணக்காயிதனைக்கலந்தடுப்பில்
நலமாயெரித்துக்குழவியற்கு நன்றாய்ச்சங்குபுகட்டிடவே
வலமையானதோஷபிணி வாராதெனவேவகுத்தாரே.

துவாலைபிடிக்க

வருக்குந்துவாலைதனைக்கேளு மானேசின்னிவளர்நொச்சி
பருக்குந்தூதுவளைவேம்பு பையநருக்கிவசம்புள்ளி

---

* கற்றாளைச்சோறு.

தொகுத்துத்துவளவறுத்ததனைத் துவாலைகண்டங்காமதனில்
வெகுக்கக்கட்டிமுடிக்கிடவே விரைந்தேயோடுந் தோஷமெல்
லாம்

காவரட்சிக்குடிநீர்

கோட்டமுடன்சிரகமும்ஏலஞ்சுக்கும்
கூவிளைவேரதிமதுரங்கூர்மதமோடும்
வாட்டமுடன்சந்தனங்கலைமான்கொப்பு
வாசப்புல்நெற்பொரியும்லாகாய்க்கூட்டி
தேட்டமுடன்குடிக்கவேதீருநோய்கள்
சிறுவருக்குகறுமணப்பூந்தேனேகேளாய்
காட்டமுடனேமயக்கந்தாகஞ்சேற்ப
காவரட்சியுந்தீரும்காட்டிடாயே.

மாந்தகுணமும் மருந்தும்.

மாந்தக்குணமதேதென்றால் வயிற்றைக்கழிந்துமயக்கமதாய்
காந்தும்பசியுமில்லாமல் காமவிகாரங்கொண்டவர்போல்
சோர்ந்துகிடங்குங்கைகால்கள்குளிர்ந்தேதோஷந்தோற்றிடுகில்
காந்தள்மலர்போற்கரமுடையீர் கனத்தமாந்ததோஷமிதே.

மருந்து

ஒருபிடிபொடுதலை ஓர்கல்லுப்புடன்
இருவிதமொன்றதா யிடித்துச்சாறுசெய்
குருவிதஞ்சட்டியிற் குறுகச்செய்தபின்
திருவிதமாக்கிடுந் திருந்தவுண்ணவே,

வேறு

சீந்திற்றண்டுங்கடுக்காயுஞ் சிவதைவேருங்களிப்பாக்கும்
சாந்துஞ்சுக்குஞ்செங்கனியுங் காயும்நீரில்கலத்திட்டு
ஏந்துமுலையாயிந்நீரை எடுத்துக்குடித்தாவிசைகெட்டு
மாந்தமானசுரந்தீரும் வயிறுகழியுங்கண்டிரே.

விஷமாந்தம்

சிறியவன்வயிறிரைக்கும் திமிருடனஞ்சிப்பார்க்கும்
சறியுடனுண்டதாயார் கையினிற்றங்காப்பிள்ளை
அறிவுடன்மேனிசோரும் அரையின்கீழ்க்குளிர்ந்திருக்கும்
வெறுவிதமாக்குவிக்கும் விஷமுள்ளமாந்தந்தானே.

மருந்து

கூருப்தும்பொடுதலையும் குந்தமஞ்சணத்திநொச்சி
வேரும்வேலைவேர்சமனாய் வெள்ளையுள்ளிவசப்பிளுே

ஆசகருக்கிவனுத்தபின்னை ரளவாய்க்காய்ச்சியுண்டிடவே
பாரமானவிஷமாந்தம் பதறியோடுங்கண்டீரே.

### நீர்மாந்தம்

குளிர்ந்துகுளிருஞ்சினுத்துவரும் நாவினீரும்ஓங்காளம்
கழிந்துவயிறுமிகப்பொருமும் கைகால்மெய்யுந்தினவெடுக்கும்
மெலிந்தவுடம்புமிகப்பெருக்கும் மெதுவாய்ப்பேசுமுறக்கமதா
தெளிந்துசிரிக்குநீர்மாந்தம் செய்யுங்குணங்களிதுவாமே. [ம்

### மருந்து

நொச்சியிலைதுளசிசெம்முள்ளிகாணி
நுகர்தூதுவெதுப்படக்கியோடுவேலி
ப்ட்சமுடனேனாளவுபுட்டதாக்கி
பரிவாகத்திரிகடுகுபகார்வெண்காரம்
கச்சணிந்தமுலைமடவீர்தீயில்வைத்துக்
கடிதாகவேயிறக்கிக்கலந்தநீரை
அச்சமின்றிச்சிறியோர்களருந்தவேதான்
அகலுநீர்மாந்தமெனஅருளினாரே.

### கழிமாந்தம்

வாந்திபிராந்திமூர்ச்சாகி வலுவாய்க்காலுஞ்சிதளமாம்
காந்தும்மேனிவெயர்வைபது கைகால்குளிர்ந்துவலிப்புண்டாம்
சேர்ந்துகழிந்தமலந்தானுஞ் சீர்கெட்டிருக்கும்பலவிதமாய்
போங்கேகுளிருங்கழிமாந்தம் பொல்லாதெனவேபுகன்றாரே.

### மருந்து

நல்லவேளைநாய்வேளை நாடும்வேலிப்பருத்தியுடன்
சொல்லுக்குப்பைமேனியிலை துதிக்குமாத்திப்பூவுடனே
வெல்லும்வசம்புவெள்ளுள்ளி வேண்டும்படியேசாறெடுத்து
உள்ளுங்கொடுத்துத்தலையிட ஒடுங்கழிச்சல்மாந்தமுமே.

### பொதுக்குடிநீர்

பொடுதலைவேம்புமாவும் புளிநுணாநொச்சிவேலி
கடுகவேசார்க்குவலம் சமன்கொண்டுகஷாயம்வைத்து
இடுவல்லஓமமுள்ளி திற்பலிமிளகுமிட்டு
அடுதல்நீர்நாழிதன்னி லடுப்பினிலிரண்டொன்றாக்கே.

ஆக்கிடுங்கஷாயந்தன்னி லானதோர்சங்குபோட
போக்கிடுமூணுமாந்தம் போர்மாந்தஞ்சத்திமாந்தம்

தேக்கிடுஞ்சொரியாமாந்தஞ் சிறந்திடுகட்டுமாந்தம்
தாக்கிடுமாந்தமெட்டுந் தாணியிற்றணியுமென்றோர்.

வேறு

என்றோர்மஞ்சணத்திநொச்சி இனியவேலிகழற்கொடியும்
ஒன்றேயொவ்வொன்றோர்பிடியா யொக்கவறுத்துச்சட்டிதனில்
நன்றாய்க்கருக்கிமோர்நாழி நாளெசெல்லாநயந்தாவிட்டு
மிண்டாய்ஓமம்வசம்புசுக்கு மிளகுபொடிதலைக்கயாம்.

ஆகும்திற்பல்கடுகுடனே அளவாய்நல்லெண்ணெயிற்சிவப்ப
தாகவறுத்துப்பொட்டணமா யளவாய்க்கூட்டியதிலிட்டு
வேகும்படிநன்றாய்க்காய்ச்சி விரைவாயருந்தக்கொடுப்பீரால்
போகுமாந்தமுள்ளதெல்லாம் புவிமேலகன்றுபோய்விடுமே.

வேறு

விடுமேமாந்தம்தூமுள்ளி மீழமிளகுதிற்பலியும்
போடுமேசீலைதனில்முடிந்து போட்டுநாழிநீருழக்காய்
விடுமேயடுப்பிலெட்டிலொன்றாய்விதமாய்க்காய்ச்சிக்குடிநீரைக்
கொடுமேமாந்தமுள்ளதெல்லாங் குடிபோமென்றுகூறிடுமே.

எண்ணெயும் புகையும்.

சேட்டைப்பரியின்மயிர்சுக்குந் தின்னும்மிளகுவசம்பதுவும்
கூட்டக்கடுகுபேயத்தி கூறுமணிஞ்சில்வேப்பெண்ணெய்
கோட்டமகலாமானூர்கள் கூறும்*பரியின்கோட்டுடனே
வாட்டம்புகைக்கமாந்தங்கள் வாராதிரிந்துமடங்கிடுமே.

லேகியம்.

கலித்துறை

சுத்தாவின் வெண்ணெ யொருநாழி ஓமஞ் சொலிற்பலந்தான்
உத்தா மணியிலை வெற்றிலைக் காம்பொவ்வொன் றோர்பிடியாம்
வித்தான சுக்கு மரிசம் வசம்பு விராகனிடை
எத்தாய்ப் பிசைந்திட் டிடப்பல மாந்தங்க ளேகுமன்றே.

விட்டிடுஞ் சாரணை வேர்ப்பட்டை திட்டி விதமுடனே
கிட்டிடுந் தேசா புராஞ்சமன் கூட்டிச் சிறுபொடியாய்த்
தட்டி யரைத்ததைத் தேனதிற் றுக்கித் தனயருண்ணப்
பொட்டென மாந்தம் கணத்தின் பொருமலும் போய்விடுமே

---

* பருத்திவிறகு

### கணையின் குணம்.

#### விருத்தம்

உந்திதனினின்றீரலளவும்புண்ணா
    யொடுங்காதுசுவாசந்தானுண்டாய்மெத்த
வந்துசுரம்மிகுவேகமாகக்காய்ந்து
    மயக்கமதாய்த்திட்டுமுட்டாய்வருத்தங்காணும்
இந்தவிதம்வந்துதென்றால்கணையின்காய்ச்ச
    லென்றிதனையியம்புவார்புவியின்மீது
கொந்தழகக்குழல்மடவாயிதனையீசன்
    குறுமுனிக்குமுன்னாளிற்கூறினாரே.

#### மருந்து

வில்வபத்திரி வேரொடுவெண்காயமும்
நல்லவெந்தய மும்நன்றாகவறுத்
தெல்லைநீரிட் டெரித்திடுசீரகம்
சொல்லுநீடு கணமிரிந்தோடுமே.

### மகாகணத்தின் குணம்.

முகம்பிறங்கால்பிறங்கை மோதியேமினுமினுக்கும்
நகம்விழிவெளிறிக்காட்டும் நஞ்சுண்டார்போல்மயக்கும்
மிகமிகவெதுப்புமுண்டாம் வெடித்துநாவுதடுபுண்ணாம்
சுகமில்லைவருத்தக்கேதான்றுஞ் சொல்லுமாகணத்தின்வாறே.

#### மருந்து

சிறுகீரைவேர்காந்திகிழ்காய்நெல்லி
    சிறுபீளைமட்டிசுரைசிந்தில்தொண்டை
நறுகீரைநறுக்கியம்மிதனிலரைத்து
    நாடியேயதனையோரடுப்பிலேற்றி
வறுகிரோயிளவறுப்பாய்வறுத்தபின்னை
    வாகாகநீருற்றிவெட்டொன்றாக்கி
இறுநீரைச்சங்களவுகுடிக்கவேதான்
    எகுமகாகணமென்றேயியம்பினாரே.

### கழிகணத்தின் குணம்.

சீதங்கழியும்மலங்கழியுந் திரும்பக்கேட்டாற்பால்போலப்
போதக்கழிந்துகருந்தண்ணீர் போலப்பின்னுங்கழிந்துவரும் }

Dr. T. K. SIVAGNANAM
L. A. M. P. (Cey)
Kondavil West
KONDAVIL

ஓதமுழங்கைகால்குளிர்ந்து ஒருக்கால்வெதுப்புமுண்டாகும்
கோதாயிந்தக்குணங்கண்டாற் குலவுமிதன்பேர்கழிகணமே.

மருந்து

உண்ணுமீருள்ளிபத்து ஒருபிடிகருவேல்நாக்கு
எண்ணுசீரகங்கழஞ்சு இருகூறுவெந்தயந்தான்
பண்ணுநற்பதமறிந்து படிந்தநீர்விட்டுக்காய்ச்சி
திண்ணமாய்க்குடிக்கும்போதிற் கழிகணந்தீருந்தானே.

கழிகணத்தின்குணம்.

பின்னேகேளாய்கழிகணந்தான் மேவிச்சுவாதமிருமலுண்டாம்
பின்னேமார்புமுகநரம்பும் புடைத்துக்காணும்பிள்ளைகட்குச்
சொன்னேன்வயிறுமிரல்நெஞ்சும் தோன்றும்நாவுமவியலுண்டா
அன்னேமுலையுங்குடியாமல் அலுத்துக்கிடக்குமறிவாயே (ம்

இருமம்செருமம்மேல்மூச்சும்இருகைகாலுங்குளிர்ந்திருக்கும்
பொருமம்வயிறுதான்நோகும் புண்போற்சூழுமுண்டாகும்
அருவிமுலையுமுண்ணாது அயர்ந்துவெதும்பிபலறிவிடும்
சொருகுங்கண்ணும்நாவரட்சிகழிகணஞ்செய்யுங்குணமிதுவே.

எண்ணெய்

பத்துக்காசிடைசெண்பகப்பூவுடன்
　　பகருஞ்சாதியின்பத்திரிகாசிடை
முத்துங்கேளாய்நீகாசிடைஆவினின்
　　முலைத்தகோரோசனையிவைமூன்றுமாய்
ஒத்துக்கேள்பொடியாக்கிவிளக்கெண்ணெய்
　　ஓர்படிதனிலூட்டியேபூறசெய்
சத்துந்தீபக்கொதியிட்டதனையே
　　தனயர்க்கீயவிதனக்கெட்டோடுமே.

நீர்க்கணம்.

விழிநிறம்வேறதாகி வெறித்துடனமட்டிப்பார்க்கும்
குழிவுறுமுச்சிதானும் குணுகுணம்பலவுஞ்செய்யும்
மொழிவதில்மிடறுகம்மி முகங்குறுவேர்வையெய்தி
கழிவெனவயிறுகாந்தும் கருதுநீர்க்கணமதாமே.

மருந்து

சாரணைகாயமூக்கிரட்டை தன்னை நம்பொடுதலையின்காய்
பூரணமான திரிகடுகு பொருந்துந்துளசிபூந்துளசி
வாரணிகொங்கைமடமானே வகையாயெடுத்து அதனுடனே
சிரகங்கூட்டிக்குடிநீரைச் செய்துணநீர்க்கணந்தீர்ந்திடுமே.

மூலக்கணம்.

சோகமாய்நாக்குவெந்து சுரமுடன்தலையும்நாறி
தாகமாய்வயிற்றைப்பற்றித் தான்சீதாத்தம்விழும்
ஆசையாலுழப்புத்தள்ளி ஆபத்தாய்வருமேயாகில்
கோகிலமேகேள்மூலக் கணமெனக்கூறுவாமே.

மருந்து

பழம்பாசிமூலமதுபகர்வெள்ளாட்டுப்
பாலினில்நன்றுபவித்துப்பண்பதாகச்
செழும்பாகவக்ததற்பின்கோதுநீக்கித்
தேசியெனும்பழச்சாற்றிற்செறியவிட்டு
கொழும்பாகவிழுந்தவினைதக்கொடுக்கும்போது
குணமாகும்மூலகணங்கூர்ந்துகேளு
வழும்பாய்வெலம்பட்டைத்தண்ணீரோமீட
மன்னிடுநற்சிரகமும்மகிழ்ந்துகூட்டே.

ஆமச்சுரம்.

ஆமச்சுரத்தின்குணங்கேளு மடைவடைவாதவெதும்பாது
சாமங்தோறும்வெதும்பிநிற்கும் தண்ணீருமலையுண்டாகும்
சேமமாகவுடம்பிழைக்கும் சீறியமேபசியில்லை
நாமத்தினுமிதுதானும் நடுங்கியிருக்குமறிவாயே.

மருந்து

வெண்பா.

கூறுகின்ற பாவட்டை கொண்டவேரண்டமுடன்
வீறுறவே விப்பருத்தி வேரிவையும்—சீறுகின்ற
நாமபிள குங்கூட்டி நலமாங் கியாழமிட
சேமமா மாமகராஞ் செப்பு.

### ஆமச்சன்னிக்குணம்.

கண்ணைநோக்கைப்புருவத்தைக் கையைக்காலைமிகவலித்து
விண்ணைநோக்கிமூச்சுவிடும் விட்டுவிட்டுவலிப்பெய்தும்
உண்ணுமுலையுமொவ்வாது ஒக்குமுடலும்பஞ்சணிக்கும்
நண்ணுமாமச்சன்னியென்று நவின்றார்முனிவருலகோர்க்கே.

### மருந்து

கடுக்காய்கடுகுரோகணியும் கடியசிவதைதிரிகடுகும்
இடுக்காய்க்காய்ச்சிக்குழவியற்கு இதமாய்ச்சங்குபுகட்டிடவே
தொடுக்காயுள்ளிகோழிமுட்டை தய்யதயிலம்வேப்பெண்ணெய்
அடுக்காயுள்ளுமேலுமிட ஆமச்சன்னியோடிடுமே.

### ஊதுகாமாலைக்குணம்.

காதுடனுடம்புங்கண்ணுங் கனக்கவேவீங்குப்வற்றும்
போதவேகாவப்புண்ணும் பொருந்தியசுரமுமுண்டாம்
வேதனுங்கைகால்சந்து வெளுத்திடுமென்னந்தன்னை
ஊதுகாமாலையென்று உரைத்தனர்முனிவர்தாமே.

### லேகியம்.

கிட்டமுடனரைபொடியும்வெள்ளெங்காயம்
கிளத்துகின்றமுருங்கையிலைகரிசலாமும்
திட்டமுடன்முற்றியதேங்காயுங்கூட்டிச்
சிறந்தசெவ்விளநீர்வார்த்தரைத்துக்கொண்டு
வட்டமுறுதனமாதேஇரண்டுநோம்
வளர்கொட்டைப்பாக்களவுகொடுப்பாயானல்
கிட்டாதுசோகைகாமாலைதானும்
கிருபையுடன்முனியுரைத்தவாறுதானே.

### காப்பன்குணம்.

பிள்ளையுங்கனத்திருக்கும் பிரண்டைபோற்றடித்திருக்கும்
உள்ளமுஞ்சிவந்துகண்ணி லுடற்பினிற்புண்ணேயாகும்
தள்ளவேமேனிவாடித் தலைதனிற்புண்ணுமுண்டாம்
கள்ளவிழ்குழலின்மாதே காப்பனின்குணங்கள்தானே.

## ஆதண்டை எண்ணெய்.

புங்குடன்நாய்வேளை ஆதண்டைசங்குடன்
போதவோவ்வோர்பிடியதாப்
புதுவசம்புள்ளிபிரு சீரகம்வெளிச்சியொடு
போடுகஸ்தூரிமஞ்சள்
பொங்கமுறுமுள்ளிலவு பொடிபண்ணியொன்றாய்ப்
பொருந்திடவிடித்தபின்பு
போட்டிடுமரைப்படிவெண் காயமதரைப்படி
புகல்நாழியெண்ணெய்விட்டு
சங்கங்குப்பிதனைத் தகவாயிடித்துமே
சாறுமொருநாழிவிட்டு
தையலேஎண்ணெயை வடித்துமெய்யிற்றடவு
சார்பாலகர்க்கிதுவாய்
அங்கமதிலெழுகரப் பானுடன்செற்பத்தி
லாகுங்கிரந்திமுதலாய்
ஆறுங்குடித்திடுவை வேறெண்ணெய்தொட்டிடாய்
ஆதண்டைஎண்ணெயிதுவே.

பொதுமருந்து. கஷாயம்.

### வெண்பா.

வல்ல சுணம்போகும் மாந்தமொடு தோஷம்போம்
சொல்பெரிய மேகமொடு சோகைபோம்—நல்லாய்கேள்
தாலவெல்லஞ் சுக்குடனே சற்றேற நிலக்குமிழும்
காலமே காய்ச்சியுண்ணக் காண்.

மாந்தமொடு தோஷம்போம் வல்லபோர் மாந்தம்போம்
சேர்ந்த இருமல் சிலேற்பனம்போம்—காந்தித்
துளசியுந் திற்பலியும் சொல்லுமரப் புல்லுருவி
களஞ்சி யெடுத்தருந்தக் காண்.

பாவட்டை யோடுகழல் பாக விதைமூன்றும்
போய்வெட்டியேயரைத்துப் பொங்கமதாய்—நீகொட்டைப்
பாக்களவு வெந்நீரிற் பாலகர்க் கீந்திடவே
போக்கும்போர் மாந்தமது போம்.

நொச்சி பொடுதலையும் நுணா வேலி இந்நான்கு
பச்சிலை கசக்கியே பாலகர்க்கு—அச்சமற
நீர்வாயே தானிறக்கி நீர்கொடுக்க வேமாந்தம்
உரைவிடு மென்றே யுரை.

### உவாந்திக்கு மருந்து.

பருத்தி விரைப்பருப்பும் பகரேலந் திற்பலியும்
தரித்ததொரு நெற்பொரியுஞ் சர்க்கரையும்—குறித்தரைத்துக்
கொண்டுமீதன் கூட்டியுண்டாற் கூர்பித்தம் வெள்வாந்தி
கண்டு விரைந்தோடுங் காண்.

### கடுப்புக்கு மருந்து

கற்றாழைகொண்டுவந்து கடுவினுற்சாறதாக்கி
இத்தாநாள்வெந்தயத்தோ டினுமிச்சம்பழத்தைவிட்டு
சுத்தமாய்க்காய்ச்சிப்பின்னைச் சுகம்பெறப்பாலகர்க்குச்
சற்றுநீர்கொடுத்தால்ரத்தஞ் சார்கடுப்பகனுமன்றே.

### தேற்றாங்கொட்டைக்குளிகை

தேற்றாங்கொட்டையதிமதுரந் திற்பலிகராம்புமாயாக்காய்
ஏற்றங்கடுக்காய்சிறுதேக்கு இந்துப்பாத்தைவெண்பிசினும்
மாற்றாங்கடுகுரோகணியும் வசம்பக்கிறுவுந்தோடையிலைச்
சாற்றாலரைத்துத்தூதுளங்காய் சமானமுருட்டிநிழலுலர்த்தே.

உலர்ந்தகுளிகையொன்றெடுத்து உடனேகரைத்துமுலைப்பாலில்
கலந்தேகொடுக்கப்பிள்ளைகளின் கக்கல்விக்கல்இளைப்பிருமல்
நலிந்தேவந்தநாவினமுள் நாவின்குடலினக்காமும்
தலந்தான்போகவழிதேடித் தங்காதகன்றுவிடுந்தானே.

தானேசீரமதிமதுரம் தழராவில்வக்குடிநீரில்
மானேயுள்ளுரோகமறும் வளரும்பொடுதலையிந்துப்பு
காணுர்வேலிப்பருத்தியிலை கருக்கிக்கொட்டிப்புனல்காய்ச்சி
மானேகுளிகையொன்றளிக்க மாந்தமனைத்தும்மாறிடுமே.

மாறாஅத்திப்பட்டை மாதுளம்பழத்தின்சட்டை
வீறுளவாரையின்பட்டை வெந்தநீர்தன்னிற்கொள்ள

சீதியகழிச்சல்காய்ச்சல் தியக்கிமயக்கந்தாகம்
மாறிடுமென்றுமுன்னோர் மகிழ்ந்திதையருளினாரே.

### அமிர்தகுளிகை

அருளினாமிர்தமெனுங்குளிகைதன்னை
அதிமதூரஞ்செண்பகப்பூவலமோடு
திருவறுகோரோசனைநற்சாத்ரவேதி
சிறந்தவெட்டிவேர்கோட்டம்மாஞ்சில்பச்சை
தருவென்லரமிச்சினுடைவேருங்கூட்டிச்
சரிசமனாய்வெட்டிவேர்க்கஷாயஞ்செய்து
குருமொழிபோலொருசாமமரைத்துக்கொண்டு
குன்றுமணிப்பிரமாணம்பரிந்திவீரே.

பரிவுடையபெண்களுடைமுலைப்பால்தன்னில்
பகைத்துவருமகணமாந்தமெட்டுந்தீரும்
விரவிவருகுடற்படுவன்வரட்சிநாக்கில்
மேவுகின்றவரட்சிவகையெல்லாந்தீரும்
குருவெனவிக்குளிகையினாற்சுரமும்வெப்பும்
குளிர்ந்திடுமேதலையெரிவுங்கொடுத்துப்பாரு
அருளெனவேமுனியுரைத்தார்பாரின்மீது
அமிர்தமெனுங்குளிகைதனையறைந்திட்டேனே:

### மாதுளம்பழத்துநெய்

மாதுளங்கனியின்சாறும் வளர்குன்றிமணியின்சாறும்
தீதறுபருத்திப்பிஞ்சும் சிறந்தகோராவின்பாலும்
கேதைகேயகறுநெய்காழி கூடவிட்டேகலந்து
ஈதெலாங்கஷாயந்தன்னி விடுகற்கவகையைக்கேளே.

கேட்டிடுசாதிக்காயும் கிராம்புடன்மாயாக்காயும்
காட்டினில்மதுரஞ்சந்தன் கரியசீரகங்கடுக்காய்
போட்டிடுமக்கருவும் புனுகுநற்சீரமுக்த்ரி
ஈட்டுவேர்க்கொம்புவாசி எழிற்சாத்ரவேதியாமே.

ஆமென்றோர்கழஞ்சுகொண்டு அரைத்ததைக்கஷாயத்திட்டு
வேமிந்தநெய்யைத்தானே மெழுகதின்பதம்வடித்து

தாயிந்தக்கிருதந்தன்னைத் தலையில்வைத்துள்ளேகொள்ளப்
போமந்தக்கழிச்சல்காய்ச்சல் புண்ணுடன்கிரந்திபோமே.

கிரந்திவுள்ளுருக்கிகுட்டம் கேடுள்ள அக்கரங்கள்
திருந்திடாவெலும்புருக்கி தீராதகளைகள்சோகை
வருந்திடுமுள்ளுலோகம் மாந்தங்களிருமல்தொய்வு
அருந்திடிற்பிறமேகங்க ளருணன்முன்பனிபோலாமே.

செவ்விளநீர்மிருத்தியாதி

மூந்திரிகைபேரீஞ்சின்பழத்தினோடு
முதன்மைபெறுநன்னாரிவிலாமிச்சம்வேர்
சிந்துகின்றஇருப்பைப்பூத்தேவதாரம்
திற்பலிகோரோசனைபொன்மெழுகுசந்தம்
கந்தமுறுமேலமிலவங்கம்பச்சை
கருதுமரமஞ்சளொவ்வோர்கழஞ்சுகொண்டு
அந்தமுறுசெவ்விளநீரதனைவிட்டு
அரைத்துமூந்தளவாகவுருட்டிக்கொள்ளே.

உருட்டியபின்சத்திக்கும்பெருமலுக்கும்
ஓர்குளிகைசுக்கவித்தநீரிலீவாய்
மருட்டியகாய்ச்சலுக்குச்செவ்விளநீர்தன்னில்
வகுத்தவோர்குளிகைதனைவளமாயீவாய்
தெருட்டுபித்தபயித்தியங்களைத்தினுக்குந்
தேசியின்பழச்சாற்றோர்குளிகையீவாய்
அருட்டுமிதன்பெயர்செவ்விளநீர்மிர்த்தி
யாதியெனவேமுனிவரறைந்திட்டாரே.

கொள்ளிக்கரப்பனுக்கு எண்ணெய்

வெள்ளறுகுசிவன்வேம்புசங்கங்குப்பி
விழிபொடுதலைகோழ்யவளைகரிப்பான்
கொள்ளுகருநொச்சிமஞ்சணத்தி அத்தி
குறுந்தொட்டிகழற்சிசாரணையின்சாறு
கள்ளமில்லாவகைக்கொவ்வோர்படியெடுத்துக்
கருஞ்சீரஞ்சுருள்ளிபலமரைத்து
எள்ளெண்ணெயிறகாய்ச்சிப்பதம்வடித்து
இட்டிடிற்கொள்ளிக்கரப்பன்கிட்டாதோடும்.

—0—

ள்ளப்
ரமே.

ம.

ம்

ண்டு

ா.

ம்.